உ

சிவமயம்



இசையாசிரியர்

# அமரர். செல்லத்துரை


அவர்களின் நினைவாக...

# இசை ஆரம்

21.05.2020

கே.எஸ்.சிவஞானராஜா
0776179027

# இசை ஆரம்



"KALAA POOSHANAM"
K.S.SIVAGHANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

இசையாசிரியர்

## அமரர் வ.செல்லத்துரை

அவர்களின் நினைவு வெளியீடு

21.05.2020

# மலர் வெளியீட்டுத் தரவுகள்


| | | |
|---|---|---|
| மலர் | : | **இசை ஆரம்** |
| வெளியீட்டு நாள் | : | 21. வைகாசி 2020 |
| தாள் | : | கென்யா பாங் -70gsm |
| அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 143 |
| வெளியீடு | : | **குடும்பத்தினர்**<br>**ஜோன் ராஜா வீதி,**<br>**அச்சுவேலி.** |
| அச்சுப் பதிப்பு | : | தர்சா தமிழ்ப் பதிப்பகம், ஆவரங்கால் சந்தி அச்சுவேலி.<br>(ஆஸ்பத்திரி முன்பாக அச்சுவேலி)<br>தொலை பேசி: 021 2058206, 077 2583728<br>மின்னஞ்சல்: **ttpatchuvely@gmail.com** , tharshaoffset@yahoo.com, |
| பிரதிகள் | : | 300 |



பிறப்பு
27.05.1935

# அமரர்

இறப்பு
21.04.2020

# வல்லிபுரம் செல்லத்துரை அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு சார்வரி அண்டிவரு சித்திரை
பூண்டவோர் அபரபக்கச் சதுர்த்தசி – நீண்ட புகழ்
செல்லத்துரைப் பேரான் சேர்ந்தான் நமைநீத்து
பல்லுயிரும் படைத்தழிப்பான் தாள்.



# பஞ்சபுராணம்

## *பிள்ளையார் வணக்கம்*

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

## *தேவாரம்*

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆனாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே.

## *திருவாசகம்*

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## *திருவிசைப்பா*

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப்பு அருளும் தில்லைச்
செல்வன்பாற் செல்லும் செவில்
அருக்கரை அள்ளல் வாய்
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசாதுஅப பேய்க ளோடே.

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா
நெறிதந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திருநோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்.

## திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு.... முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும்... வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென.....மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட.....அருள்வாயெ
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன்...மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள்....மணவாளா
திருத்த வேதந் தண்டதமிழ் தெரிதரு....புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மகழகிய....பெருமாளே.

## வாழ்த்துப்பா

வையம் நீடுக மாமழை மன்னும
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வவெண் திருநீறு சிறக்கவே.

தெல்லிப்பழை–மாவிட்டபுரம் –கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும்

அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் கலாபூஷணம் இசைமணி வல்லிபுரம் செல்லத்துரை இசை ஆசிரியர் அவர்களின் வாழ்க்கை வளம்

## (27.05.1935 - 21.04.2020)

ஈழத்திரு நாட்டிலே யாழ்நகரிலே மாவையம்பதியின் தெல்லியூரின் கொல்லங்கலட்டி எனும் வனப்பு வாய்ந்த கிராமத்தில் வல்லிபுரம் இலட்சுமி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக அவதரித்தார்.இவருக்கு மூத்த சகோதரர் அமரர் முருகையாவும் முக்கனிகளுக்கு ஒரு முத்தாக பேபிசறோஜா எனும் சகோதரியும் அருமையாக ஓர் தம்பியான அப்புத்துரை அவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

சிறுவயதிலிருந்தே இசையில் மனதை பறிகொடுத்த இவர் பலருடைய கச்சேரிகளையும் கேட்டு கூர்ந்து கவனித்துப் பாடிப்பழகி தன்னை ஓர் இயல் இசை வாரிதியாக்கி கொண்டார். சிற்சில நாள் வித்துவான்களிடம் பயிற்சியும் போதனையும் பெற்றதாலும் தன்னுடைய வித்தையை பக்குவப்படுத்திக் கொண்டார்.இவருடைய பரம்பரையானது கலைத்துவம் மிக்கது. இவருடைய பாட்டனார் ஊர் கொட்டகை நாடத்தில் வாளை வீமன் நாடகத்தில் வீமனாக நடித்து இரசிகப் பெருமக்களால் வீமன் என்றே அழைக்கப்பட்டார்.இவருடைய தாயின் தகப்பனார் இராம நாடகத்தில் இலட்சுமணனாக பாத்திரம் ஏற்று நடித்து எமது ஊரில் புகழ் படைத்துள்ளார்.அவரை எமது ஊரில் இலட்சுணர் என்றே அழைத்தார்கள்.

இவர் தனது ஆரம்பகல்வியை யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் இடைநிலைக்கல்வியை யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் பயின்று சாதாரண தரம் சித்தியெய்திய மகாஜனன் ஆவார். கல்விகற்ற காலப்பகுதியில் இல்லப் போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று சிறப்பு பெற்றிருந்தார்.மேலும் காலை மாலை வேளைகளிலும் தேவாரத்தை மிக பக்திபூர்வமாக இசைநயம் நழுவாது இசைப்பதை வழக்கமாக கொண்டவர். இல்லங்களுக்கிடையிலான இசைப்போட்டியில் கலந்து பாடிய போது ஒரு முறை இவர் ஔவையார் திரைப்படத்தில் கே.பி.சுந்தராம்பாள் பாடி நடித்த "ஞானப்பழத்தை பிழிந்து" எனும் தனிப்பாடல் கொண்ட இசைத்தட்டை கேட்டு அவர் தனது கேள்வி ஞானத்திற்கு அமைவாக அப்பாடலை லயித்து கே.பி.சுந்தரம்பாள் பாடியுள்ள அப்பாடலை 5 1/2 கட்டை சுருதியில் பாடிப்பழகி இசை நுணுக்கங்கள் சங்கதி நுட்பங்கள் வழுவாது இசைப்போட்டிக்கு தன்னை தயாராக்கி பாடிய போது பரீட்சகராக கடமையாற்ற வருகை தந்திருந்த

மாவிட்டபுரம் நாதஸ்வரமேதை சோ.உருத்திராபதி பாராட்டி தன்னிடம் வந்து இசைபயிலும் படி கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்க அவரையே ஆரம்ப குருவாக ஏற்று பயிற்சிகளை மேற்கொண்டதுடன் அவரது புதல்விகளான திருமதி.இ.சிங்கராஜா திருமதி.த.குமாரசுந்தரம் அவர்களிடமும் இசைபயின்று வட இலங்கை சங்கீத சபை ஆறாந்தர (ஆசிரியர் தரம்) பரீட்சை சித்தியெய்தி மேற்படிப்பை தன் குருவின் ஆசியோடு தென்னிந்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்று 1961 ஆம் ஆண்டு இறுதியாண்டு பரீட்சையில் முதலாம் தர சித்தியெய்திய இலங்கை மாணவன் என்பதும் "இசைமணி" என்ற பட்டம் கிடைக்கப் பெற்ற பெருமைக்குரியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே ஆண்டில் சென்னை அரசாங்கம் பல்லவி மகாவித்துவான் பிரம்மஸ்ரீ முடி கொண்டான் வெங்கராமய்யர் அவர்கள் பிரதம பரிசோதகராக அண்ணாமலை இசைக்கல்லூரிக்கு வருகைதந்த வேளையின் போது இவர் வாய்ப்பாட்டு பரீட்சையை செய்திருந்தார். அச்சமயம் பிரதான அம்சமாக பேகட இராக ஆலாபனை கீர்த்தனையில் நிரவல் கற்பனாஸ்வரங்கள் பாடியபோது அவர் அதனை ரசித்து இவரை அழைத்து ஆசி வழங்கி நீ யாரிடம் இசைபயின்றாய் என வினாவ அப்போது இவர் தான் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசை பயின்ற வேளை பேராசிரியர் ரி.கே.ரங்காச்சாரியார் அவர்களிடம் பயின்றதாக கூற அப்பப்பா! அவரிடமா? அவர் பேகட ராகத்தை எப்படி பாடுவார் தெரியுமா என்று கூறி நீ இந்தியாவில் எந்த இடம் என கேட்க சார்! நான் சிலோன் என்று கூற அவர் தான் இந்தியா பையன் என்றல்லவா எண்ணினேன் என கூறியதாக தெரிவித்தார். இன்னும் பல சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்தியாவில் இருந்த வேளையில் ரி.கே.ரங்காச்சாரியாருடன் பல இசைக் கச்சேரிகளை இணைந்து பாடியுள்ளார். திருத்தலங்களில் குறிப்பாக காரைக்குடி தேவகோட்டை தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழாவில் குருவுடன் இணைந்து சண்முகப்பிரியா இராக ஆலாபனையை மத்தியஸ்தாயி தைவதம் வரை சஞ்சாரங்களை அள்ளி விளாசி விட்டு நீ மேலே பாடடா என்று சொல்ல தாரஸ்தாயி ஸட்ஜத்திலிருந்து பஞ்சமம் வரை தனது மெல்லிய குரலில் மிகவும் பிரமாதமாக ஸ்வாரஸ்யமாக சஞ்சாரங்களை செய்து பாடி முடித்தவுடன் அவ் விழாவில் குழுமியிருந்த சனக் கூட்டத்திலிருந்து மழைபோல கைதட்டி ஆரவாரம் செய்த கதையை இவரது சகோதரர்கள் கூறுவர்.

இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசைமணி பட்டபடிப்பை மேற்கொண்ட வேளையில் திரு இராசையா எம்.எம்.தண்டபாணி தேசிகர் அவரிடமும் பேராசிரியர் ரி.கே.ரங்காசாரியார் திருப்பாம்புரம் திரு. என்.

சிவசுப்பிரமணியபிள்ளை மன்னார்குடி இராஜகோபாலபிள்ளை ஆகிய இசை விற்பன்னர்களிடமும் இசை உருப்படிகளை சிறப்பாக கற்றுக் கொண்டார்.

தேவார பண்ணிசையை ஓதுவார் சுப்பிரமணியஐயரிடமும் சகல பண்வகை களையும் கற்றுத் தேறி வந்துள்ளார். பல வித்துவான்களிடம் பயின்றதன் மூலமும் கேள்வி ஞானத்தினூடாகவும் பாடிப்பாடி தனது குரல் வளத்தை விருத்தி செய்து கொண்டார். இவரது சிறிய தந்தையாரான திரு.வி.பழனி அவர்கள் சிங்கப் பூரிலிருந்து கிராமபோன் என்ற ஒலிச் சாதனத்தையும் கே. பி. சுந்தராம்பாள் டி.கே.பட்டம்மாள் எம்.எம்.தண்டபாணி தேசிகர் எம்.எஸ்.சுப்புலட்சுமி மு.ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் துரையூர் இராஜகோபால சர்மா செம்மங்குடி ஸ்ரீனிவாச பாகவதர் போன்ற பல வித்துவான்களின் இசைத்தட்டுக்கள் யாவற்றையும் கொண்டு வந்து இவரிடம் கொடுத்து பாடிப்பழகுமாறு கூறியதன் பயனாக இவர் இசையில் நல்ல கேள்வி ஞானத்தை சிறுவயதிலேயே பெற்றுக் கொண்டார்.

தமிழ் உருப்படிகளோடு தெலுங்கு மொழியில் அமைந்த உருப்படி களையும் சற்குரு ஸ்ரீ.தியாகராஜ சுவாமிகளது பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் போன்ற இன்னோரன்ன இசை உருப்படிகளையும் உச்சரிப்புத் தெளிவுடனும் ரம்மியமாகவும் தனக்கென்றே ஒரு பாணியில் பாடக்கூடிய வல்லமை மிக்கவர். பண்ணிசைகளும் அதற்குள் அடங்கும். செந்நெறி இசைமரபுகளை நழுவவிடாது பாடும் ஆற்றல் மிக்கவர். வானொலி தொலைக்காட்சியிலும் இவர் இசை நிகழ்வுகளை ஆற்றி முதலாம் தர கலைஞராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இசை வித்துவான். 1977 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று கண்டி தலாத்து ஓயா மகாவித்தியாலம், இந்து உயர்தர வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம், யா/இடைக்காடு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இசை ஆசிரியராக கடமையாற்றியதுடன் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1979.12.05 இல் அச்சுவேலியினைப் பிறப்பிடமாகக் கொண்ட சாம்பசிவம் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான புவனேஸ்வரியை மணம் செய்து கொண்டு அச்சுவேலியில் வசித்து வந்தார். இவர் குழந்தை உள்ளம் கொண்டவர் எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார். துணைவியார் அவரது செயற் பாடுகளுக்கு உறுதுணையாய் இருந்ததுடன் அவர் யாழ் போதனா வைத்திய சாலையில் முதலாம்தர தாதிய உத்தியோகஸ்தராக கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

இவரது இசைக் குடும்ப பரம்பரைக்கு இவரது சகோதரியான பேபி சறோஜா அவர்கள் கேள்வி ஞானத்தினூடாகவும் இவரது ஊக்கத்தினாலும் வானொலியில் இசைக்கச்சேரிகள் பலவற்றை ஆற்றியுள்ளார். இவரது கணவரும் ஓர் கவிஞர் ஆவார். (ஓய்வு பெற்ற அதிபர் அமரர் பி.பி. அந்தோனிப்பிள்ளை) இவர் பல சிறுகதைகளும் சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல்கள் கட்டுரைகதம்பம் போன்ற பலவற்றை ஆக்கி புத்தகமாக வெளியிட்டுள்ளார்.இவர்களுடைய பிள்ளைகளான திருமதி. லம்போதரன். ஜீவந்தினி அவர்கள் நுண்கலை மாணிப் பட்டமும் கலா வித்தகர் பட்டமும் பெற்று தற்பொழுது இந்தியாவின் தஞ்சாவூர் தமிழ் பல்கலைகழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினை தொடருவதோடு யூனியன் கல்லூரி இசையாசிரியராக பணியாற்றுகின்றார். இவரது சகோதரியான திருமதி .சுகந்தினி பிரதீப்குமார் அவர்கள் யாழ் இராமநாதன் நுண்கலை பல்கலைக்கழகத்தில் முதலாம் பிரிவில் சித்தி பெற்று பின்னர் அங்கு போதனா விரிவுரையாளராவும் கடமையாற்றி பின்னர் மேற்படிப்பை இந்தியாவில் சென்னை பல்கலைக் கழகத்தில் M.A,M.Phil பட்டங்களையும் பெற்றுள்ளார். மூத்த சகோதரியான அகிலா நவரட்ணம் அவர்கள் விஞ்ஞான ஆசிரியராக இருந்தும் இசைத்துறையில் தன்னை அர்பணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களது சகோதரன் திரு.அ.கமலநாதன் அவுஸ் ரேலியாவில் பொறியியலாலராக உள்ளார். இவரின் அடுத்த பரம்பரைக்கு மூத்த சகோதரனின் மகளான செல்வி.மு.ஜெயகௌரி யாழ் பல்கலையில் இசைத் துறையில் பட்டம் பெற்று இசை ஆசிரியராக கடமையாற்றி வருகிறார். இவர் பல பாடல்களுக்கு மெட்டமைத்து பாடியும் தனக்கென ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கி வருகிறார். இவரது சகோதரர் மு. ஜெயரத்தினம் அவர்களும் இசை விமர்சகர் ஆவார்.

இவரது ஏனைய மாணவ பரம்பரை ஈழத்திலும் தமிழர் வாழ்கின்ற உலகெங்கும் வாழ்கின்றார்கள். இவர் ஈழத்திருநாட்டில் பல ஸ்தலங்களில் இசைமன்றங்களில் இசைக்கச்சேரிகளை நிகழ்த்தி பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றவர். இசைமணி–அண்ணாமலை பல்கலைக்கழகம் (1961), தேவாரத்திருமுறை ஓதுவார்மணி, கானாம்ருதபூஷணம் –நல்லை ஆதீன குருமுதல்வர் (1976), கலைஞானகேசரி, ஆளுனர் விருது(2012), ஞானப்பழத்தை பிழிந்து புகழ், கலாபூஷணம் போன்ற பல பட்டங்களையும் பெற்றுள்ளார்.

அவர் தனது கானமழை என்றும் எம் காதுகளில் கேட்கும் படியாக வைத்து விட்டு 21.04.2020 அன்று இறைபாதங்களில் சரணடைந்தார். அவரது ஆத்மா என்றும் சிவப்பிராப்தி நிலையெய்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உ
அருள் மிகு சித்திவிநாயகர் துணை

இசைமணி சங்கீதபூஷணம் திரு. வ. செல்லத்துரை அவர்கள்
'கலாபூஷணம்' விருது பெற்றமையை கௌரவித்து
அச்சுவேலி தெற்கு பயித்தோலை
சாமுண்டா சமேத வைரவப் பெருமான் தேவஸ்தான மகா கும்பாபிஷேக தினத்தன்று
பரிபாலன சபையினரால் வழங்கப்பட்ட

# வாழ்த்துப் பாமாலை

ஆக்கம்:-
மகாவித்துவான் கலாரத்தினம் இணுவில் பிரம்மஸ்ரீ மா.த. ந.வீரமணி ஐயர் (M.A)
(அகில இலங்கை சமாதான நீதவான்)
(முன்னாள் விரிவுரையாளர் இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம்)

## தமிழிசை தழைக்க வைத்தான் நீடுவாழி!

1. ஏழிசையும் சைவமதம் இலங்கும் நாடாம்
இலங்கிடு தெல்லிநகர் கொல்லங்கலட்டி
வாழி சொலும் பெருங் கலைஞன் வல்லிபுரம்
வனிதையாம் இலக்குமியும் ஈன்றெடுத்த
வேளமெனும் இசைமன்னன் செல்லத்துரை
விளங்கு ''கலாபூஷணம்'' எனும் விருது பெற்றான்
ஆழியெனும் இசைக்கடலுள் மூழ்கி இசை
ஆனந்தம் தரும் செல்லத்துரையே வாழி!

2. முத்தமிழின் தொண்டு பல செய்த வம்சம்
மூதறிஞன் செல்லத்துரை ஈழ நாட்டில்
வித்தகனாய் சங்கீத இசை மணியாய்
விளங்கி முதற் சித்தி பெற்ற பெருங் கலைஞன்
அத்தன் அண்ணா மலைப் பல்கலைக் கழக
ஆசிரிய குருபக்தி மிக்க வுள்ளான்
சித்தி நிறை பஞ்சரத்னக் கிருதி மேதை
செகந்தனிலே செல்லத்துரைக் கலைஞன் வாழி!

3. குரலினிலே உயர் ஸ்தாயி இனிமை தோன்றும்
குலவிடு மிராகத்தில் பாவம் தோன்றும்
ஸ்வர லயத்தில் கற்பனைகள் மிளிர்ந்து தோன்றும்
சுத்த மெனத் தமிழிசையின் திறன்கள் தோன்றும்
கரமலரில் அதி நுணுக்கத் தாளம் தோன்றும்
கச்சிதம் சேர் உருப்படிகள் நயந்து தோன்றும்
தரணியிலே பெருங் கலைஞன் செல்லத்துரை
தமிழிசை தழைக்க வைத்தான் நீடுவாழி!

சுபம்!

முன்னிலை:-
சிவஸ்ரீ கு. வை. விருத்தகிரீசக்குருக்கள்
(பயித்தோலை சாமுண்டாசமேத வைரவர்தேவஸ்தான
பிரதமகுருவும், போஷகரும்)
திரு நா.வி.மு. நவரத்தினம் (MPILL)
(அகில இலங்கை சமாதானநீதவான் இசைத்துறைத் தலைவ
யாழ் பல்கலைக்கழகம் இராமநாதன் நுண்கலைப்பீடம்)

விக்கிரம வருடம்
பங்குனி 13ம் நாள்
26-03-2001

ஸ்ரீ கண்ணகி அச்சகம் அச்சுவேலி.

“கலாரத்னா” “கலாபூஷணம்” “முத்தமிழ்க் கலாநிதி” “முத்தமிழ்ச்சுரபி”
“மஹா வித்துவான்”

## யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் M.A.

ஈழ்த்திருநாட்டிலே இன்னிசையை வளர்த்து வரும் சங்கீத வித்துவான்களுள் கொல்லங்கலட்டி திரு. வ. செல்லத்துரை அவர்களின் தமிழிசைத் தொண்டுகளும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அன்னார் தலைசிறந்த ஒரு பாடகர். அண்ணாமலை சர்வகலாசாலையின் இசைமணி பட்டதாரி அன்றியும் அன்னார் அப் பல்கலைக்கழகத்தில் முதல் பிரிவில் சித்தியெய்திய இசைபட்டதாரியாவார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 1984 ஆண்டு தொடக்கம் தமிழிசைப்பாடல்களை பாடி கலாரசிகரின் பாராட்டுதல்களை பெற்றவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இசை விசேச ஆசிரிய பயிற்சி முடித்து இசையசிரியராக சுமார் 18 ஆண்டுகள் இலங்கை கல்வித்திணைக்கள ஆசிரியராகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசை விரிவுரையாளராகக் (அதிதி) சுமார் 5வருடங்கள் கடமையாற்றியது மட்டுமல்லாமல் வெளிவாரி பரீட்சகராகவும் கடமை யாற்றியுள்ளார். அன்றியும் வட இலங்கை சங்கீத சபையில் இசைத் தலைமை பரீட்சகராவும் திறம்பெறக் கடமையாற்றியுள்ளார். ஈழத்திருநாட்டு க்ஷேத்திரங்கள் பலவற்றில் இன்னிசைக்கச்சேரிகள் திருமுறை பண்ணிசை கச்சேரிகள் செய்து கலாரசிகர்களின் அமோகமான பராட்டுதல்களை பெற்ற இசைக்கலைஞர் திரு. வ. செல்லத்துரை அவர்கள் மிகவும் அன்பாக எல்லோருடனும் பழகும் இயல்புள்ளவர். இவரது குரல் வளமும் தமிழ் அக்ஷர சுத்தமும் இராகபாவம், ஸாதிக்கபாவம், தாளஞானம், யாவும் இரசிகப் பெருமக் களுக்கு கிடைத்த வரபிரசாதம். எல்லாவற்றிக்கும் மேலாக இவரது இசை கற்பிக்கும் திறன் மிகுந்த பாராட்டிற்குரியது. இசை கற்பித்தல் முறை பரீட்சையில் நான் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த சமயம் இவரது இசை கற்பிக்கும் திறன் கண்டு அதியுயர் புள்ளி வழங்கியிருந்தேன். இவரது தகுதிக் கேற்ற பதவி கிடைப்பின் என்னைப் போல் மகிழ்பவர் அரிது அன்னாருக்கு சர்வபீக்ஷ்ட சித்திகள் உண்டாக ஆசிகள்.

**(அகில இலங்கை சமாதான நீதிபதி)**
**முன்னாள் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,கோப்பாய் – பலாலி**
**அதிதி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# இறை பிரார்த்தனை செய்கிறோம்.

அமரர் செல்லத்துரை ஆசிரியர் அவர்களின் மறைவுச்செய்தி மிகவும் கவலை தரும் செய்தியாக அமைந்துள்ளது. ஆசிரியரின் கணீரென்ற குரல் இன்றும் ஒலிக்கிறது. திருமுறை இசைக்கும் அழகே தனித்தன்மை வாய்ந்தது. நானும் எனது சகோதர, சகோதரிகளும் இசை பயின்றகாலத்தினை என்றும் மறக்க முடியாது. தேவாரம் பயிற்சி செய்யும் சமயம் உச்சரிப்பு சுத்தமாக வரும் வரை நிறுத்தமாட்டார். அவர் போடும் தாளம் ஒருவரை கை தட்டி அழைப்பதுபோல் சத்தமாக அமைந்திருக்கும். அண்மையில் கூட பிள்ளையார் ஆலய வளாகத்தில் என்னுடன் பெருமையாக கதைத்து மகிழ்ச்சி பகிர்ந்து கொண்டார். என்றும் அன்புடனும் ஆதரவுடனும் ஈஸ்வர குருக்கள் தம்பி என அழைக்கும் ஒலி இனிமேல் கேட்குமா? அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளான உலவிக்குள நாயகனின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கின்றோம். அத்துடன் உறவுகளுடன் எமது ஆறுதலை பகிர்ந்து கொள்கிறோம். அச்சுவேலி குருக்கள் குடும்பத்தினர் சார்பிலும், இந்துக் குருமார் அமைப்பின் சார்பிலும் எமது மனமார்ந்த அஞ்சலிகளும் பிரார்த்தனைகளும்.

*ஓம் சாந்தி.*

**கலாநிதி, சிவஸ்ரீ- கு.வை.க. வைத்தீஸ்வரக் குருக்கள்**
**தலைவர்,**
**இந்துக் குருமார் அமைப்பு**
**கொழும்பு – அச்சுவேலி**

# பக்தி இசையால் பரவசம் கொள்ள வைத்தவர்

இசைமணி வ.செல்லத்துரை அவர்கள் இறைவனடி சேர்ந்தமை எம் ஊரிற்கும் எமக்கும் பேரிழப்பாகும். பல வருடங்களாக இசைத்தொண்டாற்றி வந்துள்ளார்.முப்பது வருடங்களுக்கு மேலாக எம் குடும்பத்தின் இளையவர்களுக்கு எவ்வித பிரதிபலனும் பாராது இசை கற்பித்த பேராசான். என் மூத்தோரும் இளையவர்களும் நானும் இவரிடமே இசை கற்றலை தொடர்ந்துள்ளோம். கற்பிக்கும் நேரத்தில் கண்டிப்பாகவும் யாருக்காகவும் எதற்காகவும் தான் கற்ற கலையை விட்டுக் கொடுக்காத குணமும் கொண்டவர்.

எம் குடும்பத்தினரோடு மிகுந்த அன்பும் எம் வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவர். தமது கைவண்ணத்தில் விளைந்த பழங்கள் காய்கறிகளை தவறாது கொண்டு வந்து தருவதில் மிகுந்த திருப்தி அவரிட்கு.மாவிட்டபுரத்தில் ஆரம்பித்த அவரிட்கும் இறைவனுக்கும் இசைக்குமான தொடர்பு எமது ஊரின் உலவிற்குளம் பிள்ளையார் கோவில், மகிழடி வைரவர் கோவில், பயிற்றோலை வைரவர் கோவில், குருக்கள் வளவு வைரவர் கோவில் என தொடர்ந்து வந்துள்ளது.உளவிற்குளம் ஆலயத்தில் மகோற்சவ காலங்களில்பல வருடங்களாக இவரது குரல் ஒலித்துவந்துள்ளது. திருவெம்பாவை காலத்தில் அதிகாலையிலேயே வந்து தவறாமல் இசைப்பணியாற்றியுள்ளார். நான் அறிந்த காலத்தில் இருந்து பஞ்சபுராணமும் ஊஞ்சல் பாடல்களும் கந்தசஷ்டி கவசமும் இவரது குரலில் நமது ஊரில் கேட்டுக்கொண்டே இருந்தது.

"கண்களிரண்டும் அவன் கழல்.." எனும் திருவாசகத்தை எப்போது கேட்டாலும் ஆசிரியரின் குரல்தான் நினைவில் வரும். அந்த வகையில் தம் அருகில் எப்போதும் வைத்திருந்து எம் குருவின் இசை கேட்க எம் பெருமான் விருப்பம் கொண்டுவிட்டார் போலும்.

எம் தந்தையோடு சேர்ந்திருந்து உலவிற்குளத்தான் திருவடியில் செல்லத்துரை மாஸ்டரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**சிவஸ்ரீ. வை. வி. கஜேந்திரக் குருக்கள்**
**குருக்கள் வளவு**
**அச்சுவேலி**

# ஆத்மசாந்தியிதழ்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கலாபூக்ஷணம் இசைமணி திரு.வ.செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் எமது ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடு கொண்ட ஆசான் ஆவர்.இவரது இசை அரங்கேற்றம் எமது ஆலயத்தில் எனது தந்தை மஹாராஜஸ்ரீ ஆசியோடு மகாஜனா கல்லூரியின் அதிபர் து.ஜெயரத்தினம் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. து.க்ஷண்முகநாதக்குருக்களின் அதாவது 1964ம் ஆண்டு ஆவணி சதுர்த்தி திதியில் அருணகிரிநாதர் பூஜை விழாவில் யாழ்ப்பாணத்தின் பிரபல இசை மேதைகள் அணி செய்தும் இந்தியாவின் பிரபல மிருதங்க வித்துவான் ஏ.எஸ்.இராமநாதன் அவர்கள் மிருதங்கம் இசைக்க இவரது இசைக் கச்சேரி இடம்பெற்றது.

இவர்கள் மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றத்தில் 12 வருடங்கள் இசைச் சேவையாற்றியதோடு அந்தணர்கள் பெருமக்கள் வீடுகளுக்கு சென்று குறிப்பாக து.க்ஷண்முகநாதக்குருக்களின் பிள்ளைகள் இ கீரிமலை நகுலேஸ்வரக் குருக்களின் பிள்ளைகள்இ சமஸ்கிருதஞான பண்டிதர் இராமையாவின் பிள்ளைகள்இ சபாரத்தினக் குருக்களின் பிள்ளைகள் இவரிடமிருந்து இசை பயின்று இன்றும் பாடி வருகின்றனர் .இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மாவையம் பதியில் அருளாசி புரிந்து கொண்டிருக்கும் முருகப்பெருமானின் திருவடிகளை பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**மஹாராஜ ஸ்ரீ து.க்ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள்**

**பிரதம குரு**

**மாவையாதீனம் ,மாவிட்டபுரம்**

## “ஞானப்பழத்தை பிழிந்து ரசமன்பினொடு நாமுண்ணவும் கொடுத்த நல்ல குருநாதன்”

கம்பீரமான குரலில் சங்கரஸ்தாஸ் சுவாமிகளின் இந்த பாடலை எங்கள் இசை ஆசிரியர் இசை மணி வ.செல்லதுரை அவர்கள் பாடக்கேட்பதில் நாம்கண்ட ஆனந்ததிற்கு எல்லையேது..

சின்ன வயதிலேயே இதயத்தில் இசை ஞான ரசனையை ஊட்டி வரன் முறையாக அதனை வளர்த்து நின்ற என் நல்ல குருநாதன் இறுதிப் பிரியாவிடையைக் கூட தாமதமாகவே அறிந்திடும் அவலமாய் கொரோனா ஊரடங்கு விதி எமக்கானது.

எங்கள் இசைக் கல்வி பாரம்பரியத்தில் தனித்துவ ஆளுமையாக நிமிர்ந்த நின் மேன்மைகள் நெஞ்சுக்குள் விஸ்வருபதரிசனமாவதை எந்த விதியாலும் அடக்கிட முடியாது. தந்தை தாய் வழியில் வந்த மேலான எங்கள் இசை நாடக பாரம்பரியத்தில் ஊற்றெடுத்த இசை ஆர்வம் அந்த நாளில் சிங்கப்பூர் சிறிய தந்தையாரின் உபயமாய் வாய்ந்த கிராமபோன் வாயிலாக வாய்த்த எம்.எஸ். சுப்புலக்ஷ்மி முசிறி சிவசுப்ரமணியப்பிள்ளை செம்பை வைத்தியநாத பாகவதர் கே.பி. சுந்தராம்பாள் போன்றோரின் இசை அனுபவ கேள்வி ஞானம் பின்நாளில் வரன் முறையாக மாவிட்டபுரம் மணி ஐயரிடம் தொடங்கி அண்ணாமலை பல்கலைகழக பேராசிரியர்களான ரங்கராசாரியார் தண்டபாணி தேசிகர் திருப்பாம்புரம் சிவசுப்ரமணியபிள்ளை என தாம் கண்ட நல்ல குருநாதர்கள் பற்றிய நினைவுகளையெல்லாம் அன்று எம் இசை வகுப்புக்களிடை நயந்துரையாடிய கணங்கள் யாவும் அவரின் ஆளுமை உருவாக்கத்தின் அழகிய களங்களாய் நெஞ்சிலே விரிகின்றன. இந்த அனுபவ ஞானத்தின் வழிநடத்தலே எங்களை வழிப்படுத்திய எங்கள் இசைப் புலத்தினை செழுமைப்படுத்திய மேலான பணிகளாய் நிறைகின்றன.

கிராமத்து பாடசாலைகளில் இருந்து எங்கள் பல்கலைகழகம் வரை அவர் கற்பித்தல் அனுபவம் பரந்திருந்தது. பக்குவமாய் சலியாத பயிற்சியின் வழி அனைத்து பிள்ளைகளையும் தயார்ப்படுத்தும் அவரின் இசைக்கல்வி முறையியல் பற்றி நீளவே நயந்ததுண்டு.

எங்கள் இசைமரபின் அனைத்து கூறுகளையும் தாடனமாக்கிய நின் முழுதளாவிய இசையியல் நோக்கும் குறிப்பிடத்தக்கது. தமிழிசையின் மூலமான பண்ணிசையில் கொண்ட ஆழமான ஈடுபாடு அவ்வாறே பஞ்சரத்தின கீர்த்தனைகளை

மெய்ப்பொருள் காண்பதறிவு

# கொழும்புத் தமிழ்ச்சங்கம்

## "பவளவிழா ஆண்டில் நிகழ்த்தும்"

## ஈழத்துச் செவ்வியல் இசை, ஆடல்

## கருத்தரங்கமும் 2017

ஈழத்துக் கலைத்துறைக்கு ஆற்றிய

உன்னத சேவையை விதந்து

**திரு. இசைமணி வ. செல்லத்துரை**

அவர்களைக் கௌரவிக்கும் முகமாக

இச் சான்றிதழ் வழங்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| திரு.தம்பு சிவசுப்பிரமணியம் | திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசுவாமி | திருமதி. பவானி முகுந்தன் |
| தலைவர் | பொதுச் செயலாளர் | கவின்கலைக் குழு செயலாளர் |

27.01.2017

பாடுவதில் பயிற்றுவிப்பதில் கொண்ட கரிசனை சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து பாடியும் எம்மைப் பாடவைத்தும் இசைக் கல்வியை வெறும் பயிற்சியாக அல்லாமல் கலை அனுபவமாக்கிய மேன்மையும் கணந்தோறும் ஆராதிக்கப்படுவன.

உள்ளத்தில் உருகி மனதால் லயித்துப் பாடுபவர்களே இசைக் கலைஞர்கள் என தமது இசைக் கொள்கையை அழகாகவே முன்வைத்தீர்கள். இன்றைய காலத்து இலத்திரனியல் ஊடக அனுபவங்களுக்குள் இசைப்பயில்வு ஆர்வமும் இரசனையும் வெறும் நுகர்வு பண்டமாய் நலிந்து போனமை பற்றிய பெறுமதியான நின் பண்பாட்டுகவலையும் நின் மேலான வாழ்வியல் பாடங்களாகும்.

இத்தனைக்கும் வித்துவக்காய்சல் கிஞ்சித்துமில்லாத பக்குவம் கல்வி ஜனநாயகமாய் வாய்ந்த இசைக் கல்வியை அர்த்தமுள்ளதாக்குவதில் சமுதாயப் பங்கேற்பு முறையில் இசை மன்றங்கள் ஆலய கலைக்களங்கள் என கிராமங்கள் தோறும் சென்று பணியாற்ற வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தியதுடன் அதனை தம் வாழ்நாள் பணியாகவே மேற்கொண்டமை பெரிதும் கவனத்திற்குரியது.

என்னுடைய உயர்வு யாவிலும்
இசையாக்க
அனுபவ பகிர்வுகள் அனைத்திலும்
தாயாய் உவந்து ஆசி தந்தீர்கள்
என் குருநாதன் என்ற
நிமிர்வுடன் நானிருந்தேன்
இன்று தனித்தோம்
நின் இசையான வாழ்வின் பாடங்களை
காத்து நிற்பதே
இனி எம் கடனாகும்.
சாந்திபெறுக!
சாந்திபெறுக!

**பேராசிரியர் காலாநிதி N. சண்முகலிங்கன்**
**யாழ்பாணப் பல்கலைகழக**
**முன்னாள் துணைவேந்தர்.**

# பிரார்த்தனையுரை

இசைபேரறிஞர் இசைமணி உயர்திரு வ. செல்லத்துரை அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகிறேன். கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவரோடு பழகும் வாய்ப்புப் பெற்றவன் யான். ஈரநெஞ்சுடைய இனிய மனிதன். கணீரென்ற குரலில் பாடும் ஆற்றல் பெற்றவர். எளிமையானவர். எவரையும் மதிக்கும் பண்பினர். எந்தவொரு இளங்கலைஞரையும் ஊக்குவிக்கும் உயர் பண்பு மிக்கவர். ஆண்டுதோறும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளின் தோத்திரதிருவிழாவில் இசை அர்ச்சனை செய்யும் வழக்க முடையவர்.

தெல்லிப்பழை கொல்லன்கலட்டியில் பிறந்து அச்சுவேலியில் இல்லறத்தால் இணைந்தவர். புகழ்பூத்த மகாஜனாக்கல்லூரி மைந்தன் இந்தியாவில் புகழ்பூத்த இசை மேதை ரி.கே. ரங்கராசாரியாரிடமும் அண்ணாமலை பல்கலைகழகத்திலும் இசை பயின்று பட்டம் பெற்றவர். இவரது அரங்கேற்றம் 1962 இல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் புகழ்பூத்த அதிபர் திரு.து. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

புகழ்பூத்த கல்விமானும் சிறந்த நிர்வாகியுமாகிய திரு.ஆர். பாஸ்கரலிங்கம் அவர்களின் பிரியமுள்ள பள்ளித்தோழனாக விளங்கியவர். மகாஜனா கல்லூரி விழாவில் தனது நண்பன் இசை நாடக நிகழ்சியில் பாடிவிட்டு மேடையால் இறங்கியவுடன் கட்டிப்பிடித்து ஆனந்தக்கண்ணீர் விட்ட காட்சியை இன்னும் பலர் சொல்லி மகிழ்வார்கள். எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் அறக்கொடை விழாவில் அன்னாருக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவித்த காட்சி பசுமையாகவுள்ளது. என் செய்வோம் பிறப்பும் இறப்பும் இறைநியதி. இறையடியில் அவர் என்றும் இசையால் அர்ச்சிப்பார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.


**செஞ்சொற்செல்வர்.கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**

## இரங்கல் உரை

எமது பேரன்பு மிக்க மதிப்பார்ந்த இசை மாமணி மூத்த இசைப் பேரறிஞர் இசைமணி செல்லத்துரை அவர்களை அறியாத இசைக் கலைஞர் ஈழத்தில் இருக்க முடியாது. கடந்த 35 வருடங்களாக நாம் நெருங்கிய நண்பர்களாக இருந்துள்ளோம்.

அவர் பயின்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் டி.கே. ரங்கராசாரி சுவாமிநாதபிள்ளை எம்.ஆர்.விஜயராகவாச்சாரியார் இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர் கோமதி சங்கரையர் திருவிடை மருதூர் வீராசாமிப்பிள்ளை திருப்பாம் புரம் சிவசுப்ரமணியப்பிள்ளை போன்ற இசை மாமேதைககள் பேராசிரியர்களாக பணிபுரிந்த காலத்தில் இசைமணி மாணவனாக பயிலும் பேறு கிடைக்கப் பெற்றவர்.

நமது நாட்டில் தியாகராஜ சுவாமிகளது பஞ்சரத்ன கிருதிகள் யாவற்றையும் சபையில் இருந்து குறிப்புகள் இன்றி பாடும் வல்லமையும் பேறும் பெற்றவர். எனது இசைக்குக் காரணமாக விளங்கிய கே.பி.சுந்தராம்பாள் அவர்களது 'ஞானப்பழத்தைப்.....' என்ற பாடலை ஒரே வகை சுருதியில் அவ்வாறே பாடக்கூடிய சிறப்பும் பல தியாகராஜர் கிருதிகளை முத்துத்தாண்டவர் இராமசாமி சிவன் கோடீஸ்வரஜயர் மற்றும் M.M.D போன்றவர்களது கிருதிகளை மிகச் சிறப்பாக சபையோர் வியக்கப்பாடும் ஆற்றல் மிக்கவர்.

ஈழத்து வித்துவான்களில் இவரது சுருதி மிக வித்தியாசமானது. எல்லாவற்றிற்கும் மேலாக நமது பல்கலைக்கழகத்தில் இரு தசாப்தங்களிற்கு மேலாக பணியாற்றி (வருகை விரிவுரையாளர்)சிறந்த இசை மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

ஈடில்லா அன்பு இனிய வார்த்தைகள் குரு மதிப்பு பணிவு எந்நேரமும் குனித்த புருவமும் நிறைந்த அறிவு யாவும் நமது மக்களுக்காக தந்தவர். இசைத்துறை சார்பாக எமது கழகத்தில் நான் மேற்கொண்ட பல அரிய திட்டங்களுக்கும் வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சை செயற்பாட்டுக்கும் மூத்த அறிஞராக விளங்கி பக்கத்துணையாக இருந்ததுடன் சிறந்த நாதஸ்வர

பாணியை தமது இசையரங்குகளில் வெளிக்காட்டியவர். சம காலத்தில் இலங்கை ஆசிரிய கல்வி பட்டய பயிற்சியில் நானும் சங்கீத வித்துவான் K.இராமநாதன் மற்றும் பல வித்துவான்களும் இரு வருடங்கள் பயின்றோம். எங்கள் இருவருக்கும் எந்த வேளைகளிலும் பல நுட்ப கருத்துக்களை பரிமாறக் கூடிய வாய்ப்புகள் கிடைத்தன.

ஈழத்தின் புகழ் பூத்த நாதஸ்வர தவில் மேதைகளுடனும் அவர் மிக்க செல்வாக்குடன் காணப்பட்டார். அவர் புகழ் உடல் ஈழ இசை வரலாற்றில் பெருமையுடன் பதிக்கப்படும். அவருக்கென்ற இசைப் பாணியை பின்பற்றக் கூடிய உறவுகளை அவர் உருவாக்கியுள்ளார். அவர்கள் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவார்கள்.

**தக்கார் தகவிலார் என்பது அவர் தம்**

**எச்சத்தில் வைக்கப் பெறும்.**

**ஓம் சாந்தி**

N.V.M. **நவரட்ணம்**

**முன்னால் இசைத்துறைத் தலைவர்**

**இராமநாதன் நுண்கலைப் பீடம்**

**யாழ் பல்கலைகழகம்**



# வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை

மெலிந்த தோற்றம் சிரித்த முகம் இனிமையான பேச்சு எல்லோரையும் மதிக்கும் பண்பு நல்ல உறவினன் நல்ல அயலவன் நல்ல ஊரவன் என அனைத்து சிறப்பியல்புகளையும் கொண்ட எங்கள் மதிப்புக்குரிய அமரர் கலாபூஷணம் செல்லத்துரை அவர்கள் எமை பிரிந்து இறையடியை நாடிவிட்டார். அவர் எமைவிட்டு மறைந்தாலும் எம் மனதில் என்றும் மறக்கமுடியாத மனிதராக இருக்கின்றார். அச்சுவேலியில் அவரை எல்லோரும் சங்கீத வாத்தியார் என்றே அழைப்பர்.அவரது சொந்தப்பெயருக்கு மேலால் அவர் கற்ற சங்கீதமே அவரது பெயராக விளங்கியது.அனைவர்க்கும் இனியராய் விளங்கிய அமரர் அவர்களை இழந்தது எமது கிராமத்திற்குப் பேரிழப்பாகும்.

அமரர் அவர்கள் ஆசிரியராய் விரிவுரையாளராய் பணியாற்றி சமூகத்திற்கும் தனது இசையால் சேவையாற்றியவர்.இசைக்குடும்பத்தின் தலைமகனாக விளங்கிய அமரர் அவர்களது இசைப்பணியை பாராட்டியே கலாபூஷணம் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.அவர் வாழும் போதே கௌரவிக்கப்பட்டமை சிறப்பானதாகும்.

பழகுவதற்கு இனியவர் தமர் பிறர் எனப்பாராது எல்லோர் மீதும் அன்பு பாராட்டி பழகும் பண்பு இவரிடம் காணப்பட்ட சிறப்பம்சமாகும்.அவரது வயது அனுபவ அடிப்படையிலே இளைய தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்தவர்.அயலை உறவை ஊரை உயர்வாக மதித்த பெருந்தகை.அவரது சங்கீத ஞானத்திற்கு மதிபெண் வழங்கும் தகுதி எனக்கில்லை ஆனால் அவரது குரலினிமையினை நான் ரசித்துக் கேட்பதுண்டு. என்னை காணும் சந்தர்ப்பத்திலெல்லாம் கல்வியைப் பற்றியும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் பற்றியுமே கதைப்பார்.இளைய சமுதாயத்தினரின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவர்.

ஆரம்பத்தில் இல்லை நம் கையில் பிறப்பு அடுத்தடுத்த நிகழ்வும் நம் கையில் இல்லை என்பது போல இறைவன் அவரை தன்னோடு இணைத்துக் கொண்டார். ஆண்டவன் சந்நிதியில் அவரான்மா சாந்தி பெறுக!

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்*

*தெய்வத்துள் வைக்கப்படும்*

*அமரர் தெய்வத்துள் ஒருவராக மாறியுள்ளார்.*

*ஓம் சாந்திசாந்தி சாந்தி*

**திரு.வே.பாலசுப்பிரமணியம்**

**ஓய்வு நிலை பிரதிக் கல்வி பணிப்பாளர்.**

# ஆத்மா சாந்திப் பிரார்த்தனை உரை

எமது உலவிக்குள விநாயகர் ஆலயத்தில் பலகாலமாக தேவாரம் இசைத்திடும் பக்தனாக அமரர் செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் விளங்கினார். உண்மையில் நான் அவரை சில காலமாக தான் அறிவேன். ஆயினும் ஏனைய பக்தர்களின் ஊடாக அவரைப்பற்றிய சிறப்பான பாங்கினை அறியக்கிடைத்தது. மிகவும் அமைதியான சுபாவம். எதற்கும் பிள்ளையார் பார்த்துக்கொள்வார் என நம்பிக்கையுடனும் உறுதியுடனும் கூறுவார். அத்துடன் உரியவாறு விடயங்களை கையாள தவறமாட்டார். ஒருசமயம் ஒலிபெருக்கி சத்தம் அதிகமாக உள்ளது. கும்பிட சற்று சிரமமாக உள்ளது ஆகவே தயவுடன்.... என அன்புடன் கோருவார். உரியவாறு தீர்வை பெறுவார்.

இவரது இறைபத செய்தி மிகவும் கவலையை தந்துள்ளது. அவரது ஆத்மா என்றும் உலவிக்குள நாயகனின் திருவடியில் நிலைத்திட பிரார்த்தனை செய்வோம்.

*ஓம் சாந்தி.*

**Dr. ச. சண்முகதேவா**
**அறங்காவலர்,**
**உலவிக்குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்.**
**அச்சுவேலி.**

# கல்வி உலகில் சுடர்விட்டு பிரகாசித்த இசைக் கலைஞனே

அமரர் கலாபூஷணம் இசைமணி வ. செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியோடு மிகவும் ஈடுபாடு கொண்ட மகாஜனன். இவர் எமது கல்லூரியில் சாதாரண தரம் சித்தியெய்தி இந்தியாவிற்கு சென்று பட்டப் படிப்பினை மேற்கொண்டு இசைமணி என்ற பட்டத்தோடு நாடு திரும்பி வந்து எமது கல்லூரி சமூகத்திற்கு சேவையாற்றியுள்ளார். இவரது இசை அரங்கேற்றம் திரு.தெ.து.ஜெயரத்தினம் அதிபர் தலைமையில் (பிரதமவிருந்தினராக) மாவையம்பதியின் கந்தசாமி கோவிலில் இடம்பெற்றது.இவர் கல்வி கற்ற காலத்திலும் இல்லங்களுக்கிடையிலான இசைப்போட்டியில் முதலாம் இடத்தை தக்கவைத்துள்ளார்.மற்றும் காலை மாலை வேளைகளில் தேவார பராயணம் சொற்செறிவு பொருள்விளங்க இசைமாரி பொழிந்தமை குறிப்பிடற் குரியது.இவரை எமது கல்லூரி சமூகம் கௌரவித்தமை பாராட்டுதற் குரியது.இவரது சேவை அளப்பரியது.

**"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ள தூஉம் அன்று"**

என்ற பொய்யா மொழிப்புலவரின் குறள் நெறிக்கு அமைய பிறர் நலம் பேணும் சான்றோர் நெறிமுறைக்கு அமைய சுற்றத்தாரிடம் மட்டுமன்றி பிறர்மேலும் அன்பு செலுத்துகின்ற ஓர் கலைஞன். அமரரை அவரிடம் கற்ற மாணவர்கள் மறக்கப்போவதில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மகாஜனக் கல்லூரியில் குடிகொண்டிருக் கின்ற ஆனந்த நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.

**ஓம்சாந்தி**

**திரு.ம.மணிசேகரன்**
**அதிபர்**
**மகாஜனாக் கல்லூரி–தெல்லிப்பழை**

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வருமாகிய

# செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் அவர்கள் வழங்கிய பிராரத்தனை உரை

அமரர் வல்லிபுரம் செல்லத்துரை ஐயாவை நான் முதன் முதலில் சந்தித்தது தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில்தான். இருபதாண்டுகளுக்கு முன்னர் ஆச்சிரம சுவாமி மோகனதாஸ் அவர்களுடன் பக்தி பூர்வமாகப் பஜனையில் ஈடுபட்டிருந்தார்.

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வேட்டகமாகவும் கொண்ட செல்லத்துரை ஆசிரியர் சிறந்த இசைஞானம் மிக்க கலைஞர் எனக் கேள்வியுற்றிருந்தேன். அவரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று ஆவலுற்றும் இருந்தேன். அச்சுவேலியைப் புகுந்தகமாகக் கொண்டு வாழ்கின்ற சூழலில் அவருடனான முதற்சந்திப்பு சந்நிதியான் சூழலில் தான் இடம்பெற வேண்டும் என்று விதி குறித்திருந்தது போலும்.

அன்று என்னுடன் இயல்பாகப் பேசினார். அவர் முன்பு பெற்றிருந்த ஆற்றல்கள் பலவற்றை முதுமை மறைத்துவிட்டிருந்தது. என்னை நன்றாக அறிந்தவராக எனது குடும்பத்தவர்கள் பற்றிய செய்திகளை எல்லாம் நயம்படப் பேசிப் பலநாள்கள் கண்டவர் போலப் பழகினார்.

செல்லத்துரை ஆசிரியரைப் பற்றி எங்காவது கதைக்கிற சந்தர்ப்பம் ஏற்பட்டால் "ஞானப்பழம் செல்லத்துரையோ" என்று சிலர் அடையாளப் படுத்துவர். இசை உலகில் முன்னொட்டு வைத்துப் பிறர் அழைப்பதுவும் ஒரு சௌகரியம் தான். கே.பி. சுந்தராம்பாளின் "ஞானப் பழத்தைப் பிழிந்து" என்ற பாடலை சுந்தராம்பாளின் பாணியில் தனது கச்சேரிகளில் செல்லத்துரையர் பாடி அசத்தியமையால் அவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

மாவிட்டபுரம் நாதஸ்வர மேதை உருத்திராபதியிடம் தனது இசைப்பயணத்தை ஆரம்பித்த இவர் தமிழகம் சென்றும் இசை பயின்றார். இவரது இசை அரங்கேற்றம் 1962 இல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்றது. 400 இற்கும் மேற்பட்ட கச்சேரிகளை மேற்கொண்ட சிறப்பு இவருக்குரியது. புகழ்பெற்ற வயலின் மேதை அமரர் இராதாகிருஷ்ணன் இவரிடம் முறைப்படி இசை பயின்றவர்.

Best Quality
ANGU
BRAND
மாங்கனி
SRI ANGALAMMAN TEXTILES

# வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை

# கலாசார விழா
# 2014

கலைச்சேவையில் காத்திரமான பங்காற்றிய

திரு. வல்லிபுரம் செல்லத்துரை அவர்களைப் பாராட்டி

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் நடாத்தப்பட்ட

கலாசார விழாவில்

# கலைச்சுடர்

எனும் கௌரவத்தினை இசை துறைக்காக

வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலாளரும்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

கலாசாரப் பேரவைச் செயலாளரும்,
பிரதேச செயலக கலாசார அலுவலரும்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

2014.12.09
திகதி

தனது குரலை ஆவணப் படுத்தி வைக்க வேண்டும் என்ற ஆர்வம் பின்னாள்களிலேயே இவருக்கு ஏற்பட்டது. தனக்குப் புகழைத்தேடிக் கொடுத்த ஞானப் பழத்தைப் பிழிந்து என்ற இன்னும் சில தமிழிசைப் பாடல்களையும் தன்னிடம் இருந்த ரேப் றெக்கோடர் மூலம் பதிந்து வைத்திருந்தார். பின்னர் அதனை இறுவட்டுக் களாக்கித் தனது அன்பர்களிடமும் வழங்கியிருந்தார். ஒலிப்பதிவின் தெளிவின்மையாலும் முதுமையில் அவர் தனது இயல்பாகப் பாடும் ஆற்றலை இழந்திருந்தமையாலும் அந்த இறுவட்டு பெரிதாக வரவேற் புப் பெற்றிருக்கவில்லை. முன்னாள் களில் அவருடைய இசையை இரசித்த சமூகம் அவரது குரலை முறைப்படி ஆவணப்படுத்தி வைக் கத் தவறியமை துரதிஷ்ட மானதே.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் முன்னெடுத்த பண்பாட்டு விழாக்களிலும் அச்சுவேலியை மையப்படுத்தி 2014 இல் நடத்தப் பட்ட கலை பண்பாட்டு விழாவிலும் அவர் முன்னின்று உழைத்தார். அந்த விழாவின் போது அவருக்கு அச்சூர்க்குரிசில் என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவர் குறித்த முன்வைப்பை அப்போது நான் எழுதிச் சமர்ப்பித் திருந்தேன். இன்று அந்தக் குறிப்பு செல்லத்துரை ஐயா பற்றிய அறிமுக மாகப் பல்வேறு இணையத் தளங் களிலும் இருப்பதைக் கண்ணுற் றேன்.

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவில் உள்ளிட்ட ஆலயங்கள் பலவற்றில் அமரர் செல்லத்துரை ஆசிரியரின் குரல் திராவிட வேத கானமாக ஒலித்தது. இறைவனை மகிழ்வித்தது. இசையால் அர்ச்சித்து இன்பங் கண்ட செல்லத்துரை ஐயாவை இறப்பதற்கு சில நாட்கள் முன்பதாக அச்சுவேலி வைத்தியசாலை வாயிலில் கண்டு பேசினேன். வாஞ்சையுடன் தனது அன்பைப் பகிர்ந்தார். ஆனால் விதியின் கோலம் சில நாட்களின் பின் அவரது உயிர் பிரிந்தது. அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தியை முகநூல் வாயிலாக அறிந்தேன்.

சமூக முற்றடக்கல் காலத் தில் – மரணச் சடங்கில் மக்கள் பங்கேற்பதற்கு வரை யறைகள் இடப்பட்டிருந்த சூழலில் அவரது வீட்டிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினேன். எத்தனை இசை

யாளர்கள் சங்கமித்து விடை கொடுக்க வேண்டிய நேரம் என எனக்குள் நானே நொந்து கொண் டேன். இருப்பினும் இசை யாளர் களும் ஆர்வலர்களும் சமூக ஊடகங்களின் வாயிலாக தமது துயரைப் பகிர்ந்தனர். அதில் எனது முகநூலும் அடக்கம்.

இசையைத் தனது வாக்காகவும் வாழ்வாகவும் கொண்டு பயணித்த கலைஞர் செல்லத்துரை ஐயாவின் இசைவளம் இம்மண்ணில் விதைக் கப்பட்டுள்ளது. அந்த விதைகள் விருட்சங்களாகியும் உள்ளன. இசையால் நிழல்பரப்பி குளிர்வித்த வண்ணமும் உள்ளன.

ஐயாவின் ஆன்மா சாந்தி யடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் உள்ளங்கள் அனைத்திற்கும் எனது அஞ்சலி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**
**தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்,**
**பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**



# ஏழிசையாய்

**நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன்.**
**சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன்.**
**(அலெக்சாண்டர்)**

அந்த வகையில் என் குரு கலாபூஷணம் வ. செல்லதுரை அவர்கள் ஏழிசையாய் இசைக் குருவாய் இறைவனாய் என் வாழ்வில் கற்பித்தோம் முடித்தோம் என்றில்லாமல் இசை உருப்படிகளைச் சொல்லிக் கொடுக்கும் போது சரியான முறையில் பாடும் வரை சலிப்பில்லாமல் சொல்லி தரும் குணம் கொண்டவர். தான் கற்ற வித்தையை எதற்கும் விட்டுக் கொடுக்காதவர். கற்பிக்கும் நேரம் தவிர மற்றைய நேரங்களில் குழந்தை போல் குணம் கொண்டவராகவும் பண்பாளராகவும் காணப்பட்டார். தம்மை விட வயது குறைந்தவர்களையும் மரியாதையுடன் நடத்திக் கொள்ளும் பண்பு இவருக்கே உரித்தானது.

சிறு கோபமும் தானே சமாதனமாகும் தன்மையும் குணமும் தன் பிள்ளையாய் நினைத்துக் காட்டும் அன்பும் என்றும் என் மனதில் தந்தையோடு தந்தையாய் நினைவில் வைத்திருக்கும்.கம்பீரமான குரலுக்கு சொந்தக்காரர். பிருக்காக்கள் சங்கதிகள் பாடுவதில் அதிக திறமை உயர் சுருதியில் இலகுவாக பாடும் வல்லமை. கடைசி வரை கற்றுக் கொண்டே இருந்த மனோபாவம். தன் ஆசிரியர்களை எப்போதும் போற்றி வணங்கும் பண்பு. இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்... வித்தைகளை சொல்லிக் கொடுக்கும் குருவான ஆச்சார்யன் இறைவனுக்கே சமமானவர். வெறும் வார்த்தைகளில் மட்டுமல்லாது என்னை பொறுத்தவரையில் இசையின் தொடக்கமாகவும் நிறைவாகவும் எனக்கு இவரே அமைத்திருக்கிறார். இருபத்தைந்து வருடங்களிற்கும் மேலாக என் வாழ்வில் வழிகாட்டியாய் இருக்கிறார்.

இறைவனோடு இசையாய் இரண்டறக் கலந்து விட்ட என் குருவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**செல்வி விக்னேஸ்வரி விருத்தகிரிச குருக்கள்**
**ஆசிரியர்**
**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

“இசைமணி” கலாபூஷணம்”

## அமரர் திரு. ஏ. செல்லத்துரை

## (கொல்லங்கலட்டி, அச்சுவேலி) அவர்களுக்கு அஞ்சலி

செல்வ மகனாய்

கலைத்தாயின் மடியில் தவழ்ந்த

நல்லா சிரியனாய்

கலைத்துவம் தன்னைப் புகுத்தி

பல்லா யிரம்பேர்

இரசித்திட அரங்குகள் பலகண்டு

எல்லோ ருமேத்திட

“கலாபூ ஷணம்” விருதும் பெற்றார்.

பச்சைக் குழந்தையாய்

கொல்லங் கலட்டியில் வளர்ந்து

இச்சைக் கினிய விசை

தனைமுறையாகப் பயின்று

அச்சம் அகன்றிட

அண்ணாமலை தனில் இசைபயின்று

மெச்சும் புகழுடன்

“இசைமணிப்” பட்டந்தனைப் பெற்றார்

“இசைமணி”ப் பட்டத்தை

அண்ணாமலை தனில் பெற்றபின்னே

திசையெலாம் இசை

மழைதனைப் பொழிந்து நின்று

இசைய ரசனாகக்

கலையுல கினில் பவனித்து

இசை வுற்றாய்

இன்னுயிர் போக்கி, இறைபதம் சேர்வதற்கே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மதிப்பிற்குரிய அமரர் செல்லத்துரை அவர்களின் குடும்பத்தினருக்கு எனது அன்பு வணக்கங்கள் "கலாபூஷணம்" செல்லத்துரை அவர்களின் வானொலி இசையரங்குகள், இசைவிழா இசையரங்குகள் பல நேரில் கண்டு இன்ப வெள்ளத்தில் மூழ்கியுள்ளேன். அன்னார் எமது இளம்பருவத்தில், கலை வளர ஊக்குவித்தவர். "ஞானப் பழத்தைப் பிழிந்து....." என்ற சுந்தரம்பாளின் பாடலை அருமையாகப் பாடுவார்.

பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஐந்தும் தெரிந்த ஓர் இசைப்புலவர்.

அன்னாரது பூதவுடல் அஞ்சலிக்கு நேரில் வர முடியாமைக்கு வருந்துகின்றேன். அன்னாரின் ஆத்ம அஞ்சலிக்காக ஒரு இரங்கற்பாடல் எழுதியுள்ளேன். அன்னாரின் பிரிவால் கவலையுறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**நன்றி**

**இங்ஙனம்**

**தங்கள் உண்மையுள்ள**

**"கலாபூஷணம் எஸ்.சிவானந்தராஜா**

**இந்துக்கல்லூரி வீதி,**

**செட்டிக் குறிச்சி**

**பண்டத்தரிப்பு.**

## பிருக்கா சாரீரம்! சங்கதிகளை நறுக்காக இசையில் வார்த்தெடுத்த பெருங்கலைஞன்

## இசைமணி வ. செல்லத்துரை அவர்கள்

ஆயிரம் சபாஷ்களை அள்ளிக் கொண்ட ஒப்பற்ற முது பெருங் கலைஞனாகவும்,ஆயிரம் பிறை கண்ட தேய்மானமில்லாத அதீத மனோதர்ம இசைவள்ளலாகவும், வாயெல்லாம் இசையாக வாழ் வெல்லாம் வரமாக கோயிலெல் லாம் பண்ணாகக் கோடி புண்ணியம் சேர்த்த அதிசயக் கலைஞனே, இசைமணி கலா பூஷணம், கானாம் ருத பூஷணம், கலை ஞான கேசரி, ஞானப் பழத் தைப் பிழிந்து வேந்தன், கொல்லங் கலட்டி வல்லிபுரம் செல்லத்துரை அவர்கள் ஆவார்.

மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசியானவள் குதிரைமுகம் நீங்கும்படியாக அருள்பாலித்த மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் 1962 ஆம் ஆண்டு அரங்கேற்றத்தோடு ஆரம்பித்த இசைமணி செல்லத்துரை அவர்களது சீரிய இசைப்பணி, கந்தர்மடம் இந்து சமயப் பேரவையினால் நடாத்தப் பெற்ற 2019 திருவாசக விழாவிலே மோகனராக சாம்ராஜ்யத்தில் திளைத்த ஸ்ரீ நடராஜப் பெருமானின் வரமோடு சுமார் 1000 இசைக்கச்சேரிகளைத் தாண்டி அற்புதமாகியது. பிரமாதமாகியது. பேஷாகியது.பலே!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன கலைஞர் பட்டியலில் அதி விஷேட இசைக்கலைஞனாகத் தெரிவு செய்யப்பட்ட இவர், தமிழ்ச் சேவை ஒன்றிலே வாராந்தம் ஒலிபரப்பப்படும் ஒரு மணித்தியால இசைக்கச்சேரியில் இவரது கச்சேரி கேட்பதற்கு ஒரு சமூகமே காத்திருக்கும். அப்படி மனோதர்மம் பிரகாசிப்பதாக விளங்கும்.

அபூர்வ இராகங்கள், வக்ர ராகங்கள், வர்ஜ இராகங்கள், கனநயதேசிய ராகங்கள் ஹிந்துஸ் தானி இராகங்கள், மேள ராகங்கள் என வேண்டியதை வேண்டியாங்கு வேண்டும் வரமாக விஸ்தாரம் செய்யவல்ல இசைப்பிரம்மன் ஆவார். இவர் பிறந்த புண்ணிய திருப்பதியான "கொல்லங்கலட்டி" என்பது மாவிட்டபுரம் முருக சந்நிதிக்கு ஒரு முகூர்த்தமான நித்திய கைங்கரியம் உவக்கும் திருப்பணி ஊராகும். பால், பழம்,

தயிர், நெய், பூ, மாலை, பாமாலை, வெற்றிலை, பாக்கு எனக் கொல்லங் கலட்டி பன்னாலை. விழிசிட்டி, கருகம்பனை, வரத்தலம் வாழ் மக்கள் மாவிட்டபுரம் கந்தனை மகிழ்விப்பதில் பேறுகொண்ட வர்கள். கொல்லங்கலட்டி என்ற ஊரானது பயிர்வளம், பண்வளம், கொடிவளம், கோமாதா வளம், குலவளம்,குணவளம்,குருவளம், கோவில்வளம், பணவளம் நிறைந்த பாரம்பரியப் பண்பாட்டு ஊராகும். அடேயப்பா! ஒவ்வொரு வெற்றிலைத் தோட்டத்திலும் கொல்லங்கலட்டிப் பிள்ளையாரும், மாவிட்டபுரக் கந்தனும் வந்து குந்தியிருந்து பண்ணோடிசைந்த பண்பாட்டுப் பக்குவத்தில் கூடிக் குலாவி மகிழ்வதனால் போலும் தோட்டங்கள் செல்வச் செழிப்பாக விளைந்தன. அது மட்டுமா? மாருதப்புரவீக வல்லி தனது குதிரைமுகம் முற்றாக நீங்கும் பொருட்டுத் தாபித்த ஏழு விநாயகர் ஆலயங்களில் முதலாவது ஆலயம் கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலயமாகும். அத்தகு சிறப்பு வாய்ந்த ஊரின்கண், வல்லிபுரம் லட்சுமி தம்பதிகளின் அருந் தவப்புதல்வனாக செல்லத்துரை அவர்கள் 1935.05.27 இல் பிறந்தார். யுவ வருஷங்களான 1875-1876, 1935-1936, 1995-1996 மூன்றிலும் பிறந்தவர்கள் எவராயினும் சிகரம் தொட்ட சீமான்களாகவே விளங்குவார்கள். அந்தவகையில் 1935 ஆம் ஆண்டு பிறந்த அமரர் செல்லத்துரை அவர்களும் சிகரம் தொட்ட சீமானாக விளங்குகின்றார். பிறந்த எண் (2+7) ஒன்பதும், கூட்டெண் ஐந்தும் உடையவராதலால் சாதனையும் சகோதரத்துவமும் இவரிடம் குடி புகுந்தன. இவரோடு, முருகையாக, பேபி சறோஜா, அப்புத்துரை ஆகியோர் உடன் பிறப்புக்களாகவும், சங்கீத கேள்வி ஞானம் உடையவர்களாகவும் மிளிர்ந்தனர்.

இன்னுமொரு விஷேடம் யாதெனில், அவரது தந்தையாரின் சகோதரரான பழனியப்பா என்பவர் அதிசிறந்த ஞானஸ்தன், மலேசியா சிங்கப்பூர் சென்று வந்தபோது புத்தம்புதிய கிராமபோன் வாங்கி வந்து, எம். எல். வசந்தகுமாரி, டி. கே. பட்டம்மாள், கே. பி .சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி, செம்மங்குடி, முசிறி, சித்துாரார்,தேசிகர், ரங்காச்சாரியார், பாகவதர். மகாலிங்கம் ஆகியோருடைய இசைப்பாடல்களை இசைத் தட்டுக்கள் மூலம் அடிக்கடி கேட்க வைப்பர்.

அடிக்கடி சங்கீதக் கச்சேரிகளை உளமாரக் கேட்டதன் பலனாக செல்லத்துரை என்பவர் தாய்வழிப் பேரனாலும் தந்தைவழிப் பேரனாலும் ஆசீர்வதிக்கப்பட்டு, ஊக்கமளிக்கப்பட்டதன் பேறாக, மாவிட்டபுரம் பிரபல இசைக் கலைஞரான உருத்திராபதியிடம் குரு சீட முறைப்படி இசையை 1950ஆம் ஆண்டு விஜயதசமி நாளிலிருந்து கற்கத்தொடங்கினார். 1956ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மிகுந்த பக்தியோடு சங்கீத உருப்படிகளைக் கற்றுத் தேறி, வட இலங்கைச் சங்கீத சபையினால் நடாத்தப்பெற்ற ஆறாந் தரப் பரீட்சையில் "பல்லவி" பாடி சிறந்த அங்கீகாரத்தையும், விசேட சித்தியையும் பெற்று எம் பெருமான் சந்நிதிகளைப் பக்திமயப்படுத்தி தெய்வ அனுக்கிரகம் பெற்றார்.

இதேவேளை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இவரது தேவாரப் பண்ணிசையில் மூழ்கிய அதிபர் ஆசிரியர் குழாமும் இவர் இந்தியா சென்று இசை பயின்று வந்தால் இலங்கையில் பல இசைக் கலைஞர்களை உருவாக்கி பாடசாலைகளில் இசையைப் போதிக்க வழிபிறக்கும் எனக் கருதினர். மகாஜனக் கல்லூரியின் தூரநோக்கும் பெற்றோருடைய விடாமுயற்சியும், 1959, 1960 காலப்பகுதியில், இந்தியா சென்று தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதம் பயில அனுமதியும் அங்கீகாரமும் கிடைத்தது.

சங்கீதபூஷணம் என்பதும் சங்கீத வித்துவான் என்பதும் இசைமணி என்பதும் அவரவர் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற படி இறைவனால் அனுகூலமாக்கப் படுவதாகும். இவருக்கு 25 ஆவது வயது நிரம்பிய நிலையில் கேள்வி ஞானமும் சுருதி லய ஞானமும் அட்சர சுத்தமான ஸ்வரஞானமும், பிசிறல் இல்லாத சங்கதிகளும் நேர்முகப்பரீட்சையில் "இசைமணி" என்ற ஒரு வருட சிறப்புத் தேர்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டார். தமிழ், தெலுங்கு உருப்படிகளில் அதீத தேர்ச்சி பெற்றார்.

ரி.கே.ரங்காச்சாரியார் எம். எம். தண்டபாணிதேசிகர் ரி. என். சிவசுப்பிரமணியபிள்ளை எஸ். வேணுகோபால் ஐயர் எம். பி. வஜ்ஜிரவேல் ஐயர் எஸ். இராஜகோபால பிள்ளை எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர் மகாராஜபுரம் சந்தானம் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை ராமதாஸ் ராவ் சீ.வி.வீருசாமிப்பிள்ளை

ஐயாக் கண்ணு தேசிகர் ஆகியோரிடம் இசை பயிலும் பாக்கியம் கிடைத்தது. ரி.கே.ரங்காச்சாரியாரே பிரதம குருவாக மிளிர இந்தியாவைச் செவ்வனவே பயன் படுத்திய ஒரு சீமானாக இலங்கையைச் சேர்ந்த ஒரு செல்வம் விளங்கியதாக அமரர் செல்லத்துரை புகழப்பட்டார். பேராசிரியர் ரங்காச்சாரியார், பேராசிரியர் எம். எம். தண்டபாணிதேசிகர் இருவரதும் மனம்கவர்ந்த மாணவனாக இந்தியாவில் வரமானார்.

இசைமணி இறுதிப்பரீட்சை 1961 ஆம் ஆண்டு இறுதியில் முடிகொண்டான் வெங்கடரமண ஐயர் தலைமையில், ரங்காச்சாரியாரும் தண்டபாணி தேசிகரும் உடனிருக்க நடைபெற்றது. அமரர் செல்லத்துரை அவர்கள் அப்போது வசீகரமான பிருக்கா சாரீர, சரீர சாஸ்திரிய சம்பிரதாய கர்நாடக சங்கீத மாணவ பக்குவம் இருந்தமையால் சங்கீத உருப்படிகள் மிகவும் எளிதாக இவரிடம் குடி புகுந்தன. இவரது ஆளுமையைக் கண்டு கொண்ட முடிகொண்டான். அடானா, பேகட, ஸகானா, நாட்டைக் குறிஞ்சி, ஸாவேரி, பைரவி, ஆனந்தபைரவி இராகங்களை அநாயாசமாக பாடுவதைக் கண்டு மெய்சிலிர்த்து சபாஷ் பல சொரிந்தார். அடதாள வர்ணம், சௌக்ககால உருப்படி, பேகட இராகம், உருப்படி, நிரவல், கற்பனாஸ்வரம் விஸ்தாரமாகப் பாடி, அடுத்து நாட்டைக்குறிஞ்சி இராகத்தில் அமைந்த இராகம் தானம் பல்லவியை திரிகாலப் படுத்தி, இராகமாலிகா கற்பனாஸ்வரங்கள் பாடி, அனுலோம பிரதிலோம சம்பிரதாயங்களை விளக்கம் செய்து நிறைவாக பதம் ஜாவளி, தில்லானா, சுருட்டி ராக மங்களம் ஆகியன பரீட்சைக்கு உன்னதபேறாக அமைந்தமையால் மேற்படி பரீட்சையில் முதல் பிரிவு தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டார். அங்கு நடைபெற்ற பரீட்சையில் கூடிய புள்ளியைப் பெற்றுக்கொண்ட இலங்கையர் இவர் ஒருவரே ஆவார். யாழ்ப்பாணம் மகிழ்ந்தது. இலங்கை பூரித்தது.

1962ஆம் ஆண்டு இவர் பட்டம் பெற்று வந்த கையோடு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இசை அரங்கேற்றம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பிரதம சிவாச்சாரியார், மற்றும் அந்தணப் பெருமக்கள்,ஈழத்தின் பிரபல்யமான நாதஸ்வர தவில் வித்துவான்கள்,

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பாடகர்கள், பின்னணி இசைக் கலைஞர்கள், இரசிகப் பெரு மக்கள் என ஆயிரமாயிரம் மக்கள் குழுமி இருந்தனர். இந்த அரங்கேற்றத்திற்கு அனு கூல மாக அனுசரணை வழங்கிய வர்கள்,

வயலின்: பிரமஸ்ரீ
சோமாஸ் கந்தசர்மா

மிருதங்கம்:
ஏ. எஸ். இராமநாதன்

கடம் : நாச்சிமார்கோவில்
கணேசு

கெஞ்சிரா : தவில் மேதை தெட்சணாமூர்த்தி

மோர்சிங் : மல்லாகபம் ராஜு

தம்புரா: பேபி சரோஜா (சகோதரி) ஆவர்.

ஹம்சத்வனி இராகத்தில் அமைந்த, முத்துஸ்வாமி தீட்சிதரின் உருப்படியான "வாதாபி கணபதிம் பஜேகம்" என்று தொடங்கிய கீர்த்த னைக்கு பல்லவியில் மட்டும் பன்னிரண்டு சங்கதிகள் பாடி ஆரம்பத்திலேயே சபையை வசீகரித்தார். பலத்த கரகோஷ் களின் மத்தியில் அரங்கேற்றம் கச்சேரி பந்தா சம்பிர தாயங் களோடு மனோதர்மம் தழைத்து மேலோங்கியது. மாவிட்ட புரத்திலிருந்து கொழும்பு மாநகரம் வரை கொல்லங் கலட்டி செல்லத்துரை என்ற சங்கீத நாமம் மிகமிகப் பிரபல்யமானது.

பன்னாலை, விழிசிட்டி, கருகம்பானை, கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, இணுவில், கோண்டாவில், மானிப்பாய், பொன்னாலை. நல்லூர், யாழ்ப்பாணம், நயினாதீவு மற்றும் இலங்கை யின் மலையகம், கிழக்கு மாகாணம், புகழ்பெற்ற திருக் கேதீஸ்வரம், திருக்கோணேஸ் வரம், பொன்னம் பலவாணேஸ் வரம், தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருஷீச் சரம், முன்னேஸ்வரம் ஆகிய இடங்களில் இவரது சங்கீதம் சோபித்தன.

ஞானப்பழத்தை கே. பி. சுந்தராம்பாள் எப்படிப் பாடினாரோ அதே பய பக்தி யோடு, அதே ரசனையோடு, அதே பாவத்தோடு இராகங்கள் பிசகாமல் இசைமணி அமரர் செல்லத்துரை அவர்களும் இலங்கை முழுவதுமாக பாடிப் பெரும் வரவேற்பையும்,

விருதுகளையும் பெற்றமை இந்த மண்ணின் விந்தையேயாகும். வயலின் வித்து வான் களான, உ. இராதா கிருஷ்ணன், சர்வேஸ் வரசர்மா, சோமாஸ் கந்த சர்மா. வெங்கடேஸ்வரசர்மா, விநாயக மூர்த்தி, சித்திவிநாயகம், சண் முகானந்தம், பிச்சையப்பா, குமார சாமி, தனதேவி சுப்பையா, ஞானாம்பிகை பத்மசிகாமணி பாக்கியலட்சுமி நடராஜா, கேசவன் ஜெயராமன் ஆகியோர் ஞானப்பழ இரசத்தினை சமூகத்திற்கு அள்ளித் தெளிப்பதில் இசைமணிக்குப் பக்கபலமாக அணி செய்தவர்கள் ஆவர்.

இதைவிட இவருக்குப் பக்க பலமாக நின்று இசையரங்கினைச் சிறப்பித்த லய வாத்தியக் கலைஞர்கள், ஏ.எஸ்.இராமநாதன். வி.அம்பலவாணர், ப.சின்னராசா, ஐ.சிவபாதம், எம். என். செல்லத்துரை, கணேசசர்மா, மகேந்திரன், சிதம்பரநாதன், சங்கரசிவம், வரதராஜசர்மா, சோமாஸ்கந்தசர்மா, கண்ணதாசன், துரைராஜா, சண்முகம் பிள்ளை, இரத்தினம், பாக்கியநாதன், ஜெயசுந்தரம், பாலச்சந்திரசர்மா, முருகையா, தபோதநாயகம், ராசு, ஜம்புநாதன்,வேனிலான்,ஆகியோர் இசைமணிக்குப் பேறு சேர்த்தனர்.

## பஞ்சரத்தினம்

கர்நாடக சங்கீதத்தின் பொக்கிஷங்களில் ஒன்றான பஞ்சரத்தினம் ஐந்தையும் உரிய பொருள் நயத்தோடு, தலை கரணமாகப் பாடவல்ல ஒரு பெருங் கலைஞனாக விளங்கியவர் இசை மணி செல்லத்துரை ஒருவரே என்று துணிந்து கூறலாம்.

நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய ஐந்து இராகங்களிலும் இசைமணி பாடும்போது ஸ்ரீராமபிரான் சீதா, இலட்சுமணன், பக்த ஹனுமான் சகிதம் காட்சியளிப்பதான ஒரு பிரேமை ஏற்படும்.

வராளி இராக பஞ்ச ரத்தினத்தை எவருமே கற்றுக்கொடுப்பதில்லை. ஆனால் இசைமணி அவர்கள் வராளி இராக "கனகனருசி" என்ற பஞ்சரத்தினத்தை முழுமையாக இலங்கையில் சிட்சை செய்து கொடுத்த மகாபிரபு ஆவார்.

கலாபூஷணம், திருவாசகமணி, ஞானப்பழவேந்தன்,கலைஞானகே சரி, கானாம்ருத பூஷணம், தேவாரத் திருமுறை ஓதுவார் மணி, தேனிசை வாரிதி, பஞ்சரத்தின கலாஞானி என்று இவருக்குப் பட்டங்களும் விருதுகளும் குவிந்தன. இதன்

பேறாக அவர் புகுந்த இடமான அச்சுவேலியிலும் சீமானாகச் சிகரம் தொட வாழ்ந்தார். அற்புதமான குணங்களையுடைய பெண்ணே இவருக்கு வரமானார்.

## "வாழ்க்கைத் துணைநலம்"

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை
சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"
(குறள் :56)

தன்னையும் காத்து தன் கணவனையும் காத்து இருவரின் புகழ் நீங்காமல் காத்து தன் கடமைகளில் தவறாமல் வாழ் பவளே சிறந்த வாழ்க்கைத் துணைவி ஆவாள். இத்தகு பேற்றி னைக் கொண்ட சிறந்த இல்லாளாக புவனேஸ்வரி எனும் பெருந்தகை மனைவியானார். புனர்பூச நட்சத்திர வாலாயம் கொண்டவர்கள் இல்லற மான் மியத்திற்கு மாண்பளிப் பவர்கள் ஆதலால், இவரது துணைவியாரான புவனேஸ்வரி அம்மையாரும் அத்தகு பேற்றுக்கு வரமானார். தெய்வபக்தி, தேசபக்தி, கடமையுணர்வு, கலையுணர்வு, காவலுணர்வு, குடும்ப உணர்வு, சமூக உணர்வு ஆகிய மகிமை யோடு, இவருக்கு ஒரு தர்மபத்தினி யாக விளங்கியமை இங்கு குறிப் பிட்டே யாக வேண்டும்.

24.12.2019 அன்று அமரர் செல்லத்துரை அவர்கள் வீட்டுக்கு, நானும், தவம் அக்காவும், சகோதரி குமுதாவும் சென்று அவருடன் மகிழ்ந்து அளவளாவி இசையில் வானுயரச் சென்று திளைத்தமை மறக்கமுடியாத சம்பவமாகும். திருமதி செல்லத்துரை அவர்கள் தாதிய சேவையில் உன்னத சேவை ஆற்றிய அனுபவத்தினைக் கொண்டு இருப்பதனால், கணவனைக் கண்ணும் கருத்துமாய் நோய்வாய் படாது இறுதி மூச்சுவரை அரு கிருந்து ஆறுதல் நல்கினார். புண்ணியம் செய்த பாங்கதனால், கண்ணியமாய் சிபதம் நண்ணி னார். 21.04.2020 செவ்வாயன்று இரவு 10.30 மணியளவில் அச்சுவேலியின் கண்ணமைந்த அவரது இல்லத்தில் இரவு உணவு உண்ட நிறைவோடு, சூடான பானமும் அருந்திய நிலையில், சிவன் உமை விநாயகர், முருகன், இராமர் சீதை இலட்சுமணன், ஹனுமான் வைரவர் நாமங்கள் ஸப்திக்க எந்தவித ஆரவாரம் அந்தரம் இல்லாமல் அவரது ஆத்மா சிவத்தோடு ஒன்றானது சீவன் சிவமாகியது.

கொழும்பு தமிழ்ச்சங்கம் வழங்

கிய விருதும் (2017) உவந்த மகிழ்வும், 2012இல் வடமாகாண ஆளுநர் விருது ஈந்த பொலிவும், 1996-2002 காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைதுறை மாணவர்களின் இசைமேம்பாட்டில் வருகை தரு விரிவுரையாளராகக் கடமை புரியக் கிடைத்தபேறும் கிடைத்த வர வேற்பும் அவரது நெஞ்சில் நிழ லாடின. இவரது ஆசிரிய இசைப் பணி மலையகத்திலும், இடைக்காடு மகாவித்தியாலத்திலும் இன்றும் நினைவு கூரப்படுகின்றது.

எது எப்படி இருந்தபோதும், இசைமணி செல்லத்துரை அவர்களின் பஞ்சரத்தினத்திற்கும், பரவசமான மனோதர்மத்திற்கும் இணையாக எம்மால் இன்னு மொருவரைக் கண்டுபிடிக்க முடிய வில்லையே!?

**கே.எஸ்.சிவஞானராஜா**



# ஈழநாட்டிலே இசை வளர்த்த இசைமணி

எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய அமரர் வல்லிபுரம் செல்லத்துரை அண்ணர் அவர்களை ஈழத்திலே உள்ள சங்கீத வித்துவான்களோ ரசிகப் பெருமக்களோ இலகுவில் மறந்துவிடமுடியாது.எமது நாட்டிலே இசை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் இவரும் ஒருவராவர்.மிகவும் நற்பண்பு நிறைந்தவர். தான்கற்ற இசையை மற்றவர்களும் கற்று பயனுற வேண்டும் என்ற நல் இதயம் படைத்த பெருந்தகையாவர்.உதாரணமாக சில விடயங்களை குறிப்பிடுகின்றேன்.இவர் நாதஸ்வர இசைப்புலவர் மாவிட்டபுரம் உருத்திராபதிப் பிள்ளையிடம் முதன்முதலில் சிட்ஷை பெற்றார்.பின்னர் இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை மேதைகளான எம்.எம்.தண்டபாணி தேசிகரிடம் பண்ணிசையும் தமிழ்கீர்த்தனைகளையும் கற்றார். ரி.கே.ரங்காசாரியாரிடம் பல தெலுங்கு கீர்த்தனைகளையும் தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளையும் கற்று அவருடன் தமிழ் நாட்டிலே பல கச்சேரிகளில் இணைந்து கச்சேரி செய்தும் கச்சேரி செய்யும் அனுபவத்தினையும் அவரது பாராட்டினையும் பெற்றுள்ளார்.

பின்னர் ஈழநாட்டிற்கு வந்து பல சபாக்களில் ஆலய உற்சவங்களிலும் மங்கள நிகழ்வுகளிலும் இசைக்கச்சேரிகள் செய்து நாதஸ்வர தவில் வித்துவான்களினதும் மற்றும் ரசிகப்பெருமக்களினதும் பெருமதிப்பு பெற்றுள்ளார்.இவரிடம் தான் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் மற்றும் பல கீர்த்தனைகளையும் நான் கற்றுள்ளேன்.இவற்றை நான் சக நாதஸ்வர கலைஞர்களிடம் பகிர்ந்து இன்று சகலரும் இவற்றை நன்கு வாசித்து வருகின்றனர் என்றால் மிகையாகாது.நம் நாட்டில் நடைபெறும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் ஆராதனை நிகழ்வில் செல்லத்துரை அண்ணர் பங்குபற்றாத நிகழ்வே கிடையாது.

இவரது வழிகாட்டலில் சக வித்துவான்களும் இணைந்து பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பாடி ஆராதனை செய்வார்கள். இவரது கச்சேரிகளில் திருமுறைகள், கீர்த்தனைகள் இராகம், தாளம், பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம்,

லயக்கோர்வைகள் முதலியவற்றை திறம்பட இசைக்கும் வல்லமை பெற்றவர்.இவரது இசைபுலமைக்குச் சான்றாக இசைமணி, கலாபூஷணம், தேவாரத்திருமுறை ஓதுவார் மணி, கானாம்ருதபூஷணம், கலைஞானகேசரி, கலைக்குருசில் போன்றவற்றைக்குறிப்பிடலாம்.மாவிட்டபுரம் ராஜாபிள்ளை நாதஸ்வர கான கலாநிதி அளவையூர் என்.கே.பத்மநாதன் லலிதஸ்வர நாதபூபதி ரி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை சாவகச்சேரி எம்.பஞ்சாபிகேசன் கோண்டாவில் பாலகிருஷ்ணன் நாதஸ்வரவித்துவான் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி நாதஸ்வரவித்துவான் எஸ்.சிதம்பரநாதன் பல்லவி இராசதுரை மற்றும் தவில் மேதைகளான லயஞான குபேரபூபதி தட்சணாமூர்த்தி விவகாரவித்வமணி இணுவில் என்.ஆர்.சின்னராசா நாச்சிமார் கோயில் கணேசப்பிள்ளை அளவெட்டி வி.என்.குமரகுரு மற்றும் இதர கலைஞர்களின் பாராட்டினையும் பெற்றவர்.

இவர் இசைவேளாளர் சமூகத்தினரிடம் மிகவும் நட்பு பாராட்டும் ஓர் இசைக்கலைஞர் ஆவர்.இவர் இன்று நம்மிடம் இல்லை ஆனால் அவரிடம் இசையை கற்றவர்கள் அவரை என்றும் மறக்க மாட்டார்கள்.அவரது ஆன்மா இறைபதம் பெற்று உய்ய ஈழத்து இசைவேளாளர் சமூகத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

**நாதஸ்வரவித்துவான்**
**அளவையூர்,**
**ஆர்.கேதீஸ்வரன்**

# அன்பு சகோதரியின் இரங்கல் ஆராதனை

ஒரு செடியில் அரும்பினோம் நான்கு மலர்களாய்
நாற்றிசையும் மணம் பரப்பினோம் நற்சுகந்தமாய்
தனியாய் உன் சகோதரியாய் பிறந்ததனால்
தனியான அன்புண்டு என்மேலே உமக்கண்ணா
பெரியண்ணா பிரிந்த துயர் ஆறமுன்னே
என் சின்னண்ணா உம் பிரிவு தாங்குவனோ?

அழுதூட்டும் தாய்போல எனக்கு இசை ஊட்டி வளர்த்தீரே!
ஆவிழந்த கன்றாக துடிக்கின்றேன் சின்னண்ணா
அலை கடல் வற்றினாலும் பிறவிக்கடல்
வற்றாது என் சின்னண்ணா
அழகு புகழ் பெருமை கொண்டனை
ஏன் இவ்வுலகை விட்டு பிரிந்தனை
பஞ்சரத்தினத்தால் இறை வந்தனை– நீ
செய்திடவோ வான் சென்றனை

இராகங்கள் கோர்த்த இராகமாலிகை போல்
உறவுகள் மாலையாய் சேர்ந்த பல
நிகழ்வுகள் என்முன்னே நிழலாடுதண்ணா
அம்மாலையில் அழகிய முத்தொன்று
அவிழ்ந்ததால் பொலிவிழந்தறுந்ததண்ணா
மனமது ஆறுமோ சின்னண்ணா

என் பிள்ளைகள் அகிலா, கமலன், ஜீவா, சுகா
எம் அன்பு மாமாவை இனி
எப்பிறப்பில் காண்போம் என
ஆறாத்துயரில் துடிப்பதை
அறியாயோ என் சின்னண்ணா

தெள்ளத் தெளிந்தார்க்கு சிவலோகமே
அங்கு நீர் பண்ணிசைகளை இசைக்க வல்லீர்
என்றுமை அழைத்தானோ நானறியேன்
எல்லாம் வல்ல சிவனருள் சித்திக்குமே
என் சின்னண்ணா உந்தனுக்கு.....
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும் மறவாமல் வேண்டும்."

*ஓம் சாந்தி*

**அன்புச் சகோதரி**

## மருமக்களின் ஆறாத்துயர்

அன்பான எங்கள் அச்சுவேலி மாமா
ஆசையான எங்கள் கொழும்பு மாமா
இனிமையான இசைமணி மாமா
ஈசனிடம் சென்றாயோ மாமா

எம்மை விட்டு நீர் பிரிந்ததாலே
மருமக்கள் இங்கு புலம்பி அழுகின்றோம்
மனமுடைந்து புழுதியிலே வீழ்ந்தோம்
மீண்டும் உம்மை காண ஏங்குகின்றோம்

சிறுவயதில் உம் தங்கை மக்கள் எம்மை
தோழில் போட்டு ஊஞ்சல் கட்டி ஆட்டி
பண்ணிசையும் இன்னிசையும் ஊட்டி
இனிய பல கதைகள் கூறும் உம்மை
நினைத்து மருமக்கள் கதறுகின்றோம்

மருமக்கள் எப்போதும் உம் மக்கள் போலென்று
அன்பொழுக அனைவரிடமும் நால்வரையும்
அறிமுகப்படுத்தும் எங்கள் மதுரக்குரல் மாமாவே
மனக்குறை நீக்கிட மீண்டுமாய் வாராயோ
உன் இசை கேட்டு இளைப்பாற...

அகிலா என நீங்கள் அன்பாய் அழைக்கையிலே
அகிலாண்டேஸ்வரி உருகிடுவாள்
கமலன் என உம் மருமகனை
கனிவாய் நீரும் விழிக்கையிலே
கமலா மனோகரி சொரிந்திடுவாள்
ஜீவா என நீர் கூப்பிட்டால்

ஜீவந்தினி செவி குளிர்வாள்
சுகந்தா என்றால் தேனாக
வசந்தா செவியில் நுழைவாளே
யாருளர் இனி இப்பிறவியிலே
இனிதாய் இசையாய் எமை அழைக்க
அன்புருவான மாமாவே
மருமக்கள் உம் பிரிவாலே
ஆறாத்துயருடன் வாடுகின்றோம்
மீளாத்துயில் நீ கொண்டாயோ

வாழ்வினில் உயர் நிலை கண்டதுபோல்
எம் மனங்களில் உயர் நிலை கண்டீரே
உம் பிரிவது தாங்கிட சக்தியில்லை
பாரினில் ஈசனை பண்ணாலே
துதித்து நீர் பரகதி அடைந்து விட்டீர்
பரமனின் பாதக் கமலத்தில்
நிர்மலமாய் இழைப்பாறிடுவீர்.

*ஓம் சாந்தி*

**மருமக்கள்**

# இசைக்கு ஒரு கோயில்

இசையால் வசமான இசைமணி இவர்
இசைக்கு மெருகூட்டியவர்

இத்தரணியெங்கும் இசை வளர்த்திடும்
இவர் தம் சீடர்கள்

பெருமை மிகு இவரை சிறிய தந்தையாய் பெற்றதில்
பெருமை எங்களுக்கும்

தந்தையாய் நல்லாசானாய் எனக்கும் இசையமுதூட்டி
தன்வசமீர்த்த அன்பிதயத்தினர்

அவரின் இசைமழையால் என்னிதயம் நனைகிறது இன்னும்
ஆனாலும்.......
இன்றிவர் எம்மோடில்லையென்பது
நெருப்பாய் சுடுகிறது.

**பெறாமகள் , பெறாமகன்**
**பேரப்பிள்ளைகள்.**



# இசைச் செம்மல் அவர்களிற்கு இசைச் சகோதரிகளின் காணிக்கைகள்


கனராகங்களில் அமைந்த கனதியான பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை முழுமையாக இசைப்பதில் அமரர் இசைமணி கலாபூக்ஷணம் செல்லத்துரை மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியவர்.அவருக்கு பின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை நமது நாட்டில் இசை பயிலும் மாணவர்கள் முழுமையாக இசைக்க வேண்டும் என்ற பெருவிருப்பத்தால் சங்கீதபூக்ஷணம் சு.கணபதிபிள்ளை அவர்களின் வழிகாட்டுதலுடன் சில மாணவர்களுக்கு அமரர் செல்லத்துரை பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை வெகு சிறப்பாகவும் நேரடியாகவும் எமக்கு கற்பித்தார்.அவரிடம் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை பயின்ற மாணவர்களாகிய நாம் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி**

**அன்பு மாணவர்கள்**

**யசோதா ஸ்ரீகுமரன்**

**சந்திரிக்கா கணேஸ்வரன்**



# மௌனித்த ராகங்கள்

இசை மூச்சில் வளர்ந்திட்ட
கலைஞான சுடர் ஒன்று
மலையாகி சரிந்ததுவோ
எம் மனம் தாங்குமோ? எம் இமை மூடுமோ?
இசை வேள்வி எம் காதில் இனி மோதுமோ?

கனராக பஞ்சரத்தினக் கீர்த்தனையாம் அவ்வமுதை
கடுகளவேனும் பிசகாமல் அரங்கேற்ற மனங்கொண்டு
பஞ்சரத்தினங்களாம் எமை பக்குவமாய் தேர்தெடுத்து
கம்பனுக்கு அணிசேர்த்த மேடையிலே அரங்கேற்ற
நீ கண்விழித்து பசி மறந்த அந்நாட்களை நினைத்துப் பார்க்கின்றோம்

பஞ்சரத்தினங்கள் யாம் தூங்கமாட்டோம்
பசி தாகம் நோக்கமாட்டோம்
இசை வேள்வி அதைத் தொடர்வோம்
அதுவொன்றே யாம் அளிக்கும் காணிக்கையாம்
உம் ஆன்மா அமைதி பெற......

*ஓம் சாந்தி*

**பஞ்சரத்தினர்கள்**

## பாவம் இல்லாத பாடல் பெரும்பாவம்

அசைச்சொல்லின் தொடராலே ஆனதே ,ராகம் பாடலின் அளவை முறைப்படுத்த அமைந்ததே தாளம் இசையதன் பொருள் விளங்கபாடுவதே பாவம் அனைவரும் அறிந்த பக்திப்பாடலின் வரிகள் இவை பாரம்பரியஇசை நாட்டுப்புறஇசை இந்துஸ்தானி இசை பாப்இசை என இசை வகைகள் விரிந்து செல்கின்றன. இசை இயற்கையின் வடிவம். இயற்கையின் அதிர்வலைகளும் இசையின் அலைகளும் ஒன்று போலவே அமைந்து உள்ளதில் இருந்தே இதனை நாம் அறியலாம். இயற் கையாக வளர்ந்துள்ள மூங்கிலில் காற்று மோதும் போது இசை பிறக்கிறது. இயற்கையின் பிரதி பலிப்பான இசையில் ஏற்படும் லயம் தாளம் காலப்பிரமாணம் ஆழம் யாவும் இயற்கையில் இருந்தே துவங்குகிறது.

கடலின் அலை ஓசை காற்றின் ஓசைகாற்றில் இலைகள் ஆடும் ஓசை மழைத்துளியின் ஓசை மரத்தில் துளைபோடும் மரங்கொத்தியின் அலகின் ஓசை யாவுமே இசையாகத்தான் துவங்கு கின்றன. இந்த இசைக்கு மனிதன் தன்னுடைய ஆழ் மனஉணர்வினால் ஒரு கலையாக உருவம் கொடுத்திருக்கிறான்.

மனிதர்களிடம் இருந்து இசையை பிரிக்கவே முடியாது அனைத்து உணர்ச்சிகளிலும் இசையை மனிதன் பயன்படுத்தி வருகிறான் .தனது பிறப்பில் இருந்து இறப்புவரை இசையை தன்னோடு சுமந்தே செல்கிறான் காரணம் இசைமேல் அவன் வைத்து உள்ள அளவற்றகாதல். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இசையும் மாறிக் கொண்டு வருகிறது. இசையானது பலவகை பாவங்களை வெளிக் கொணரும் உன்னத ஊடகம் பரதநாட்டியத்தில் பாவம் அல்லது பாவனை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை உடலுறுப்புகளாலும் முகத்தாலும் வாக்கினாலும் வெளிப்படுத்துவதாகும். அது போலவே பலவகை பாவங்களை வெளிக்கொணருவது ராகங்களின் இத்தகைய இராகங்களை கொண்டு

# ஆளுநர் விருது-2012

## கலாபூஷணம்
## வல்லிபுரம் செல்லத்துரை

அவர்களுக்கு

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக

இசைத்துறைக்குச்

சிறப்பாகச் சேவையாற்றியதைக்

கௌரவித்து

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்

விளையாட்டுத்துறை அமைச்சினால்

2012ஆம் ஆண்டிற்கான

கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.



09.12.2012

சி. சத்தியசீலன்
செயலாளர்

அமைக்கப்பட்ட பாடல்கள் அந்தப் பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பம் அதன் கருத்து அந்தப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வு என்பவற்றிற் கேற்ப உணர்வு மயமாகப் பாடப்பட்டன. ராகங் களை விஸ்தாரமாகப்பாடும் கர் நாடக இசையில் அதன் அழகுகளை காட்டும் மிகமிக அற்ப்புதமான வெளிப்படுத்தும் உணர்வு கலந்த படைப்புக்களாகவே பாடல்களை நம்முன்னோர்கள் ஆக்கினர்.

ஆனால் இன்று எம்மத்தியில் நாம்பாடும் இசையானது பெரும் பாலும் உருப்போடுதல் மனனம் செய்தல் ஒப்புவித்தல் என்ற வகையி லேயே நிகழ்த்திக் கொண்டிருக் கிறோம் மாணவர்கள்நிலைதான் இவ்வாறு உள்ளதென்பதல்ல. மிகவும் பயிற்சி பெற்ற இசை வல்லுனர்களாயிருந்தாலும் கூட தியாகராஜசுவாமிகள் புரந்த ரதாஸர் கோபாலகிருஸ்ண பாரதியார் முத்துத்தாண்டவர் போன்ற இசைமேதைகளால் பாடப் பட்ட பாடல்களை அதுபாடப்பட்ட சந்தர்பம் அப்பாடலின் பொருள் போன்றவற்றை உணர்ந்து பாட முடிவதில்லை. அதனை அறிந்து பாடவேண்டுமென்ற ஆர்வமும் எம்த்தியில் இல்லை வெறுமனே இராகத்திற்குரிய ஸஸ்வரஸ் தானங் களை சரியாகப் பாடிவிட்டால் போதுமென்று நினைத்து பலஸ்வர சஞ்சாரங்களையும் சங்கதி களையும் பாடிதமது மேதாவித் தனத்தினை வெளிக்காட்டுவதே குறிக்கோள் என்று கருதி வித்துவச் செருக்கோடு பாடும் இவர்களின் பாடல்களில் நாம் தியாகரஜர் புரந்தரதாஸர்கோபாலகிருஸ்ணபா ரதியார் முத்துத்தாண்டவர் போன்றோர் வெளிப்படுத்திய பக்தி உணர்வையும் நவரஸங்களையும் எதிர்பார்த்து ஏமாந்து போகிறோம் என்பதே உண்மை.

அறிவ விசாலம் கொண்ட வாக்கே யகாரர்கள் தமது கருத்துக் களை மிக எளிமையாகவும் விசாலமான நோக்குடனும் இலகு வான நடையிலும் பாடல்களை ஆக்கினர். எளிமை அவர்களின் அழகாகும். இவர்களிடம் அகந்தை அகங்காரம் தந்திரம் மற்றவர் மனதை குத்திக் குதறி நோகடிக்கும் இயல்பு எதுவும் இருக்கவில்லை.

இதனால் இவர்கள் பாடல்கள் படித்தவர் முதல் பாமரர் வரை எல்லோர் மனதையும் கொள்ளும் விதத்தில் இருந்தது. அவர்கள் வெறும் இசைக் கலைஞர்களாக மட்டும் இருக்கவில்லை. மிகப் பெரும் அறிவு மேதைகளாகவும் சமுகமாற்றங்களை விரும்பும் முற்போக "குசிந்தனை கொண்ட சீரிய சிந்தனையாளர்களாகவும் இருந்தனர்.

**உதாரணமாக:-**

வாக்கேயகாரர்களுக்கு முன்னோடியான புரந்தரதாஸரை எடுத்துக் கொண்டால் அவரது பாடல்களில் அதிகாலையில் ஈரஆடையுடன் ஆலயத்தை சுற்றி வருவதல்ல ஆசாரம் மனதி லிருக்கும் கோபம் பொறாமை வெறுப்பு ஆகியவற்றை ஒழிப்பது தான் உண்மையான ஆசாரம் என்கிறார். சமூக போதனைக்குச் சான்றாக "தருமமேஜயம்" (தர்மவே ஜயா) என்ற கீர்த்தனை அமைகிறது. "நஞ்சு கொடுத்தவனுக்கு நல்ல உணவு தரவேண்டும் பழித்தவனைப் பாராட்ட வேண்டும் என்கிறார். இதுபாக்கியம் (இதுபாக்யா) என்ற கீர்த்தனையில் கல்லாயிருக்க வேண்டும் கடின சம்சாரத்தில் வில்லாக வளைய வேண்டும். என்கிறார். எதையும் எதிர்த்து நிற்கும் ஆன்மபலம் மனிதனுக்கு வேண்டும் என்ற வற்புறுத்தல் அவர் பாடல்களில் தொடர்ந்து இடம் பெறுகிறது.

பக்தி என்பது பலகோயில் களுக்குச் செல்வதல்ல சரியான வாழ்க்கை முறைதான் என்கிறார். மண்பொன் பெண் இவற்றின் மீது இருக்கும் ஆசை நீக்கப்பட வேண்டும் என்ற செய்தி சொல்லப் படும் விதம் அழகானதாக உள்ளது.

என்ன சாதியாக இருந் தாலும் யாவரும் ஒரேகுலம் என்பதை (குலவந்தரேனு) கீர்த் தனையில் குறிப்பிடுகிறார் மனித நேயத்தைப் புரிந்து கொள்ளா விட்டால் என்ன பயன் ஒருவனு டைய பிறப்பு மட்டும் அவன் உயர்வுக் கோதாழ்வுக் கோகாரண மாகமுடியாது. வெவ்வேறு நிற முடைய பசுக்கள் தரும்பாலும்

வெவ்வேறு வடிவம் கொண்ட கரும்புகள் தரும்சுவையும் வித்தியாசப் படமுடியுமா? தோற்றத்தில் இருக்கும் வேறுபாடு யாருடைய இயல்புத் தன்மையையும் பக்குவத்தையும் மாற்ற முடியாது எனும் அவரதுகருத்து பிற்காலத்தில் பாடிய மகாகவிபாரதி யாரை நினைவுபடுத்தி வியக்க வைக்கிறது. இத்தகைய அறிவும் ஆற்றலும் கொண்ட உயர்ந்த இசைமேதைகளால் பாடப்பட்ட பாடல்களை பொருளும் விளங்காமல் கருத்தும் புரியாமல் எவ்வாறெல்லாமோ எந்தவித உணர்வு பாவமும் இல்லாது நாம் ஒப்பு வித்துக் கொண்டிருக் கின்றோம் என்பதே உண்மை.

நமது கர்நாடக மரபிசையில் பாவத்தை வெளிப்படுத்துவதில் வாய்ப் பாட்டுக்காரர்களுக்கு இருக்கும் சாத்தியங்கள் வேறு இசைக்கருவிகளில் கிடையாது. மொழியும் உணர்வும் கலந்து வெளிப்படுத்தும் சாத்தியம் வாய் பாட்டிசைக் கலைஞர்களுக்கே உண்டு இவ்வாறு உணர்வு மயமான பாவம் நிறைந்த பாடல்களை அள்ளித்தந்து நெஞ்சை நிறைக்கும் இந்திய இசைக்கலை வரலாறுர் களையும் நாம் இவ்விடத்தில் நினைவு கூர வேண்டியது கட்டாய மானதாகும். சிறிதுகாலத்திற்கு முற்பட்ட கலைஞர்களில் அளவு கோலில் அனைத்து ஸ்தாயிகளிலும் சஞ்சரிக்கும் குரல்வளம் பட்டம் மாவின் விலைமதிப் பற்ற சொத்தாக இருந்தது. பட்டம்மாள் ஆரம்பத்திலிருந்தே இந்த அம்சத்தை நன்கு உணர்ந்த குரலிசை மேதை. ஐம்பது வயதான போது லயத்தோடு பாவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினேன். பாவத்தை மையமாக வைத்துப் பாடுவது, இசையை உள்முகமாகத் திருப்புகிறது. அது ரசிகர்களையும் உள் முகமாக்கி அவர்கள் உள்ளத்தைச் சென்று தொடுகிறது" என்று பட்டம்மாள் ஒருமுறை கூறினார்.

### ஸ்ருதியும், லயமும்

சிறிதும் பிசகாமல் ராக பாவம் முழுமையாக நிறைந்து அந்தக் குரலோடு சேர்வதால் விளையும் சங்கீதம் தான் பட்டம்

மாளின் இசை. இது போலவே தற்கால இசைக்கலைஞர்களில் அருணாசாயி ராம்பமபே ஜெயஸ்ரீ போன்றோர். கீர்த்தனங்களின் சொற்களை தெளிவான உச்சரிப் போடு அவற்றின் பொருள் விளங்கு மாறுபாடுவது முக்கியம் என்பதை உணர்ந்து அதை ஆரம்பத்தி லிருந்தே கடைப் பிடிப்ப வர்களாக உள்ளனர்.

குயிலின் இனிமையும் தேனின் அடர்த்தியும் மலரின் மென்மையும், வீணையின் கம்பீர மும் அருவியோசையின் இதமும் எல்லாம் சேர்ந்த ஒரு அற்புதபாவம் நிறைந்த பாடல்களால் எம்நெஞ்சை நிறைத்து எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை. கர்நாடக இசையில் பக்தி பாவத்தின் பங்கு மிக அதிக மானது.

கடவுளை அடைய இசை ஓர் எளிய வழி என்ற எண்ணம் கொண்டு சாதாரண மனிதனும் விரும்பி ஏற்கும் வகையில் பண் பாடு மற்றும் சமய மேன்மை சார்ந்த கருத்துக்களை கீர்த்தனைகளாக்கி வாக்கேய சாரர்கள் தங்கள் பக்தியை வளப்படுத்தினர். "நாதோ பாசனா" என்ற பெயரில் அமையும் இது இசைபக்தி இலக்கியம் என்ற மூன்றையும் உள்ளடக்கியது என்றாலும் தனித்தனியாக இனம் கண்டறிய முடியாத அளவுக்குத் தமக்குள் இணைந்துள்ளது. இந்தவகையில் நாயன்மார்னளின் தேவாரங்களையும் நம்மில் பெரும் பாலானோர் பொருள் விளங்காது உணர்வும் புரியாமல் வாய்ப்பாடு ஒப்புவிப்பதை போல ஒப்புவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. இந்த நிலை நீங்க நாம் அனைவரும் முயற்சி செய் வோமாக.

**வெ.விஜயபாரதி**
**யாழ் இந்துமகளிர் கல்லூரி**

# தியாகராஜரின் ஆன்மீகமும், இசையும்
## - இரா. மீனா



ஞானிகள், புலவர்கள், கலைஞர்கள் என்று சமுதாய நலம் விரும்பிகள் தங்களுக்கிசைந்த ஊடகங்களின் மூலம் காலந்தோறும் தம்மைக் வெளிப்படுத்தி வந்திருக் கின்றனர். அவ்வகையில் பக்தியும் இசையும் கலந்த வெளிப்பாடாக தியாகராஜரின் வாழ்க்கை அமை கிறது.

காகர்ல ராமப்ரஹ்மம் – சீதம்மா தம்பதியினருக்கு மூன்றா வது மகனாக பிறந்த அவருக்கு திருவாரூரில் உறையும் கடவுளான தியாகேசரின் பெயரையே கொண்டு காகர்ல தியாகப்ரஹ்மம் என்று பெயர் சூட்டினார்கள். இவரது தாய்மொழி தெலுங்கிலும், வட மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். இளவயதிலிருந்தே வால்மீகி ராமாயணத்தின் மீது பேரார்வம் கொண்டவர். தந்தை ராமனின் கதையை கதாகால ஷேபம் செய்யும் போதும், தாய் புரந்தரதாசரின் பாடல்களைப் பாடும்போதும் தன்னை மறந்து அதில் லயித்துப்போகும் தியாகரா ஜருக்கு ராமன் இஷ்ட தெய்வ மானான். வால்மீகி ராமாயணம் நெருங்கிய துணையானது. ராமன் எப்போதும் அவருடன் வாழ்வது போலான எண்ணம் இருந்ததால் சகமனிதனோடு பேசுவது போன்ற பாவனையில், தன்னுடைய விருப் பத்தை நிறைவேற்றும் நண்பனைப் போலவே அவர் ராமனைப் பார்த்தார். அதனால்தான் வருத்தம், கெஞ்சல், கேள்வி, நிதானம் என்று பலதொனிகளில் தன்னை அவரால் கீர்த்தனைகளில் வெளிப்படுத்திக் கொள்ள முடிந்தது. அவரது பாடல் களில் தியாகராஜ என்ற பெயரை முத்திரையாக பயன்படுத்தி யிருக்கிறார்.

தியாகராஜர் சிறுவனாக இருந்தபோது அவரது குரு சொண்டி வெங்கடரமணய்யர் பல வித்வான் களின் முன் அவரை பாடவைத்தார்.

அப்போது பிலஹரி ராகத்தி லமைந்த "தொரகுநா இடுவந்டி சேவா" என்ற கீர்த்தனையைப் பாடினார். அவரது பாடல் அனை வராலும் பாராட்டப்பட்டது. வெங்கட ரமணய்யவின் தந்தை வெங்கட சுப்பையரின் முன் அவர் பாடிய காம்போதி ராகத்தில் அமைந்த "மரி மரி நின்னே மொரலிட" என்ற பாடல் அவரது ஆசியையும் பெற்றுத்தந்தது. வெங்கடசுப்பையரின் வேண்டு கோளுக்கிணங்க சுமார் எட்டுமணி நேரம் தியாகராஜர் பாடியதாக குறிப்பிடுகிறார்கள். தியாகராஜரை குறித்து அறிந்த தஞ்சை சரபோஜி மஹாராஜா தியாகராஜரை பாராட்டி பல பரிசு களை அனுப்பி வைத்தார். அரண் மனைக்கு வந்து ஆஸ்தான இசைக் கலைஞர்களில் ஒருவராக இருக்க வும் அழைத்தார். பரிசையும் பதவியையும் மறுத்த தியாகராஜர் அந்த வேகத்தில் பாடியதே "நிதி சால சுகமா" என்ற கல்யாணி ராகப் பாடல். "மனமே அபரிமிதமான செல்வத்தால் நீ மகிழ் கிறாயா? ராமனுக் குச் செய்யும் சேவையால் மகிழ் கிறாயா? உண்மையைச் சொல், ஆசாபாசங்கள் உடைய மனிதர் களைப் பாடுவது மகிழ்ச் சியா? கடவுளைப் பாடுவது மகிழ்ச் சியா தியாகராஜா? " என்று மனிதர் களைப் பாட விரும்பாத தன்மையை வெளிப்படுத்துகிறார். "நிதிசால சுகமா? " மன்னரின் தவறை அவருக் குப் புரியவைத்தது. இந்தப் பாடல் இன்றும் பிரபலமான கீர்த்தனை யாகப் பல கலைஞர்களாலும் பாடப்பட்டுவருவது குறிப்பிடத் தக்கது. இதையடுத்த சில தினங் களில், தன் தம்பி அவமானம் செய்தவிட்டதாக நினைத்துக் கோப மடைந்த தியாகராஜரின் அண்ணன் ஜல்பேசன், தியாகராஜர் எப்போதும் தன்னுடன் வைத்திருக் கும், தினமும் பூஜிக்கும் ராமர் விக்கிரகத்தைக் காவிரியில் எறிந்து விட்டார். வாழ்க்கை தொலைந்து போனதாக வருந்திய தியாகராஜர், "மனமே! அவன் (ராமன்) எங்கே? எங்கு ஒளிந்து கொண்டிருக் கிறான்? எப்போது மனமிரங்கி இங்கு வருவான். பிரகலாதனைக் காப் பாற்ற, ஹிரண்யகசிபுவை நிர் மூலமாக்க கடவுள் வரவில்லையா? தன்பக்தர்களைக் காப்பாற்ற அவன் ஒளிந்து கொண்டிருக்கவேண்டும்," ("எந்து தாகி") என்று ஒரு கீர்த்தனை பாடினார். இது புராணக்கதையைச் சான்றாகக் காட்டிக் கெஞ்சலும், கொஞ்சலுமாக அமைகிறது. சில நாட்களுக்குப் பிறகு விக்கிரகம் கிடைக்கவே அகமகிழ்ந்து போகிறார்.

தியாகராஜருக்கு ஒருமுறை திருப்பதிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கிறது. கடவுளைத் தரிசனம் செய்யப்போகும் நேரத்தில் திரை போடப்படுகிறது. அவர் வருத்தத் தோடும், உருக்கத்தோடும், "ஓ, திருப்பதி வெங்கடரமணா! திரையை நீ விலக்கமாட்டாயா? கோபத்திற்கான திரை, ஆணவம், பொறாமைக்கான திரை ஆகியவை எனக்குள்ளிருந்து எல்லாவற் றையும் மறைக்கிறது . வலைக்குள் சிக்கிக்கொண்ட மிருகம்போல மனம் தீயவைகளில் அலைபாய் கிறது. நானுன்னை எப்போதும் வணங்குகிறேன். திரையை விலக்க மாட்டாயா? "தெர தீயகராதா" என்று அவர் கீர்த்தனை இயற்ற, திரை விலகி அவருக்கு திவ்யதரிசனம் கிடைக்கிறது என்றொரு நிகழ்வு ஒரு கீர்த்தனையில் வெளிப்படு கிறது. க்ஷீரஸாகர விஹாரா, நீகே தெலியக போதே, ராமா ராமா நீ வாரமு என்று ஆனந்தபைரவி ராகத்தில் மூன்றுகீர்த்தனைகள் மட்டுமே அவரால் பாடப்பட்டுள்ளன. அந்த ராகத்தில், "நீ பலமா நாம பலமா" என்ற கீர்த்தனை இருந் தாலும் அவருடைய கீர்த்தனையா என்பது குறித்து விவாதங்கள் உள்ளன. ஆனந்தபைரவியில் குறைவான பாடல்களை அவர் பாடியதற்குச் சுவையான பலகதை கள் சொல்லப்பட்டாலும் மிகப் பரவலாகச் சொல்லப்படும் கதை யாக கீழ்வருவது அமைகிறது. ஆனந்தபைரவி மிகப்பழமையான ராகமாகும். அந்த ராகத்தில் பல பாடல்களுண்டு. இந்த ராகத்தி லமைந்த பாடல்களை திருபுவனம் சுவாமிநாதகுருக்களும் அவர் சீடர்களும் ஒருமுறை தியாகராஜர் முன்னால் இந்த ராகத்தைப் பாடினர். அந்த இசையில் மகிழ்ந்த தியாகராஜர் அவர்கள் எதைக் கேட்டாலும் தருவதாகச் சொன் னார். அவர்கள் ஆனந்தபைரவி ராகத்தில் மேலும் பாடல்களை இயற்றவேண்டாம் என்ற பொருளில் அந்த ராகத்தைத் தங்களுக்குப் பரிசாகத் தரும்படி கேட்டனர். அதை ஏற்றுக்கொண்டு அதற்குப் பிறகு ஆனந்தபைரவியில் அவர் பாட வில்லை எனச் சொல்லப்படு கிறது. இது கதையாக அமைந்தாலும், உண்மைநிகழ்வாக இருந்தாலும் இசைக்கலைஞர்கள் அன்று ஒரு மித்த தன்மையில் வாழ்ந்ததற்கு அடையாளமாகிறது. பக்தியைப் பலவகைகளில் வெளிப் படுத்துவது ஆழ்நிலை பக்தியின் அடையாள மாகும்.

தனக்குப் பிரியமான

ராமனை நாயகன்நாயகி பாவத்தில் ஐமதுர பாவம்ஸ காணும் தியாக ராஜரின் அன்புக்குப் பல கீர்த் தனைகள் சான்றுகளாகின்றன. "ஓ, ராமா! ஏன் அருகில் வரமறுக் கிறாய்? அனாதையான பெண் ணுக்கு கணவனைத்தவிர வேறு யாரும் இல்லாததைப்போல நான் உன்னையே நம்பியிருக்கிறேன். மேருமலையைப்போல நீ உறுதி யானவன். ஏன் என்னைக் காப்பாற்ற வரமாட்டாயா? "சேரராவதேமிரா" என்று கெஞ்சும் பாவனை வெளிப் படுகிறது. கடவுளே! என்னுடன் பேச மாட்டாயா? நீ விரும்பியபடி யெல்லாம் நான் நடந்து கொள்ளும் போது ஏன் என்மீது கோபம் கொள்கிறாய்? மற்றவர்கள் என் னைப் பார்த்துச் சிரிப்பது நியாய மாகுமா? கடவுளிடம் அன்பு செலுத்த பெற்றோர் சொல்லித் தந்தார்கள். மற்றவர்கள் என்னை வேதனைப் படுத்துகின்றனர் அவையெல்லாம் தெரிந்தும் இன்னும் எவ்வளவுநாள் நீ மௌனமாக இருக்கப்போகிறாய், தியாகராஜா? "பலுகவேமி நா தைவமா" என்று புலம்பல் பாணியில் கீர்த்தனை அமைகிறது. அந்த நினை வின் ஆக்கிரமிப்பில் வேகத்தில் மனதைத் தூதுபோல அனுப்புவதும், கட்டளையிடுவதும் இயல்பாகிறது. அந்தப் பார்வையில் தான் "மனமே! போய் என் தெய்வத்தை வேகமாகக் கை பிடித்து அழைத்து வா! எனக்கு பேரானந்தத்தைத்தர அவனை வேகமாக அழைத்துக் கொண்டுவா ஐசனிதோடி தேவேஸ" என்று ராமனைத் தன்னிடம் அழைத்து வரவேண்டியது மனதின் கடமை என்று ஆணையிடுவதாக ஒரு கீர்த்தனை வெளிப்படுகிறது.

மனதைப் பெண்ணாக்கி இயல்பாக மனிதர்கள் நடை முறையில் எதற்கும் சொல்லும் சொற்களைப் பயன்படுத்தி, காதலை வெளிப் படுத்துவதாக ஒரு கீர்த்தனை: "என் பணிப்பெண்மனம் உன்னிடம் காதல் கொண்டுள்ளாள். ஆனால் நீயோ அதைப் பொருட்படுத்தாமல், அவளைக் கைப்பிடிக்காமல் இருக்கிறாய். நான் என் மனப்படுக்கையைத் தந்திருக் கிறேன். நீ ஏன் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது? நம்பிக் கையோடு நான் உன்னிடம் அன்பு காட்டுகிறேன். ஆனால் பிரமன் என் தலையெழுத்தை வேறுவிதமாக எழுதிவிட்டான் போலிருக்கிறது," என்று காதலை மனம்நொந்த தன்மையில் வெளிப்படுத்துகிறார். ஐ"ராமாபி ராமா"ஸ"ஓ ராமா இது

என்ன வாழ்க்கை, நான் ஏன் பிறந்தேன்?

**எவ்வளவு நாள் நான் சகிப்பது?**

நான் அவனைப் பார்க்க முடியா விட்டால் அவனோடு பேச முடியா விட்டால் இந்த வாழ்க்கையால் என்ன பயன்?

அன்போடு அவனைத் தழுவ முடியாவிட்டால் என்ன பயன்? " "ஏடி ஜன்மமிதி ஹா" என்ற வராளி ராகத்தில் அமைந்த இந்தக் கீர்த்தனை முழுக்கமுழுக்கச் சிருங்கார ரசமுடையது. பிரிவும், வெறுப்புமான வேதனையை வெளிப் படுத்துவது. ராமனைத் தழுவாத வாழ்க்கை என்ன வாழ்க்கை என்று நொந்து கொள்ளும் நிலையிலமையும் இது மதுரபாவத்தின் சிறந்த வெளிப்பாட்டு கீர்த்தனையாகக் கருதப்படுகிறது.ராமா! எப்போதும் உடனிருந்திருக்கிறாய். கையைப் பிடித்துக்கொண்டபிறகு விடக் கூடாது. பிறந்ததிலிருந்து என்னைப் பாதுகாக்கிறாய். எது நிரந்தரம், எது தற்காலிகம் என்று காட்டியிருக் கிறாய். என்னை விட்டு விடாதே ஜ"பட்டி விடுவராது"ஸ என்ற கீர்த் தனையும் இங்கு குறிப்பிடத்தக்கது. தவறுகண்டுபிடித்து மற்றவர்களைக் குறைகூறுவது மனிதனின் இயல் பான குணம். இந்தத் தன்மையில் மனிதர்கள் தம்மையே இழந்து விடுவது காலந்தோறும் கண்டிக்கப் பட்டிருக்கிறது. தியாகராஜர் எளி மையான விளக்கம்தந்து இதை நீக்க நினைக்கிறார்."ஓ ராமா! உன்னிடம் என்ன குறை இருக்கிறது? அது என் குற்றம் தான்.

தங்கத்தின் தரம் நன்றாக இல்லாவிட்டால் பொற்கொல்லனை எப்படிக் குறை சொல்லமுடியும்? உன் மகளால் பிரசவ வலியைப் பொறுக்க முடியாவிட்டால் மரு மகனை எப்படிக் குறைசொல்ல முடியும்?

என் முந்தைய பிறவிகளில் நான் நல்லவற்றைச் செய்யாதபோது கடவுளை வழிபட மறந்தபோது என் கஷ்டங்களுக்கு நான் எப்படி உன்னைக் குறைசொல்லமுடியும் தியாகராஜன் உன் பாதம் வணங்கு கிறேன்"என்பது "மீவல்ல குண தோஷ மேமி" என்ற காபி ராக கீர்த்தனையாகும்.இதில் சாதாரண மக்களுக்கும் புரிகிற, அவர்கள் அறிந்த எளிய உவமைகள், பேச்சு வழக்குச் சான்றுகள் முன்னிறுத் தப்படுகின்றன. மனதிற்குகந்த ராமனை எந்தச் சூழ்நிலையிலும் குற்றம்சொல்ல தியாகராஜர் தயா

ராக இல்லை. தனது சிக்கல்களுக்கு ராமன் உதவாமல்போக, கூடியிருப் பவர்கள் காரணமா என்ற சந்தே கத்தை ராமனிடம் முன்வைப்பதாக அமையும் ஒரு கீர்த்தனை படித்து ரசிப்பதற்குரியதாகும்.“ஓ ராமா! என்னைக் காப்பாற்றாமல் நீ விட்டுவிடுவது நியாயமா?

பக்தர்கள் உனக்கு நெருக்கமான வர்கள்
சீதாதேவி என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றாளா?
நீண்டகாலமாக உன்னைப் பிரிந்திருந்த பரதன்,
நித்திரையை வெற்றி கொண்ட லட்சுமணன்,
உன் பாதத்தைவிட்டு நீங்காத மாருதி ஆகியோர்
எனக்கு உதவவேண்டாமென்று சொல்லி விட்டார்களோ?
பிரமன் என்பக்தியின் தரம்பற்றி உன்னிடம் சொல்லவில்லையா?
வாணி என்னைப்பற்றிச் சிறப்பாக எதுவும் சொல்லவில்லையா?
தியாகராஜா! இது என்ன? ""யுக்தமு காது நனு ரக்ஷிஞ்சகனுண்டேதி" என்ற ஸ்ரீ ராகக் கீர்த்தனை ராமனைக் குறைசொல்லாத, ஆனால் அவனைச் சுற்றியிருக்கும் மற்றவர்களை காரணிகளாக்குகிற நயத்தை மிக அழகாகக் காட்டுகிறது.

மனவடக்கம் என்பது அவரவர் கையிலிருப்பது. அதற்கு வேறு எந்தத்தகுதியும் தேவை யில்லை. “மனிதனுக்குத் தன் மனதை அடக்கத் தெரியாவிட்டால் கோயில் மணி அடிப்பதும் மலர்வைத்து பூஜை செய்வதுமான வழிபாடு எதற்கு? வஞ்சக எண்ணம் கொண்ட வன் காவேரியிலும், மந்தாகினி யிலும் நீராடினால் மட்டும் கடவுள் காப்பாற்றிவிடுவாரா? காமமும், கோபமும் கொண்டு வாழ்பவன் பூஜைபுனஸ்காரங்களால் எதையும் செய்யமுடியாது தியாகராஜா" “மனஸ/நில்ப சக்திலேக போதே" என்ற ஆபோகி ராக கீர்த்தனை எளிய நிலையில் சாதாரண மனி தனுக்கும் பக்தியின் தன்மையைப் புரியவைக்கிறது.எது உண்மை பக்தி என்பதை எளிய உவமைகளில் சொல்கிற “பலமு குலமு" என்ற ஸாவேரி ராகத் திலான பிரபலமான கீர்த்தனை கீழே :“வெறும் உடல்பலத்தால் என்னபயன்?
உன் சிறந்த பரம்பரையால் என்ன பயன்?
சாவிற்குப் பிறகும் தொடர்வது புண்ணியம்தான்
காக்கை தண்ணீரில் நின்றால் அது புனிதக் குளியலாகுமா?
கொக்கு கண்ணை மூடிக்கொண்டு நின்றால் அது தியானமா?

ஆடு புல் தின்றால் அது உபவாசமா?
வஞ்சகர்கள் குகையில் ஒளிந்து
கொண்டால் முனிவராவார்களா?
குரங்கு காட்டில் வசிப்பதால்
சந்நியாசியாகிவிடுமா?
உண்மை பக்தியைதான் ஏற்கிறான்
தியாகராஜா!"என்று எளிமையான சான்றுகளால் உயர்ந்த தத்துவத்தையும், உண்மையையும் வெளிப்படுத்துகிறார்.

இது போலவே, மன அமைதி இல்லாதவனுக்கு மகிழ்ச்சி யில்லை (சாந்தமுலேகா செளக்யமுலேது) என்ற தத்துவத்தை ஒரு கீர்த்தனை சொல்கிறது. "புலன்களை அடக்கிக் கொண்டவனும், தத்துவார்த்த முடையவனும் கூட மன அமைதி யில்லாவிட்டால் மகிழ்ச்சியாக இருக்கமுடியாது. சொத்து, குடும்பம் என்று வாழ்க்கை உயர்ந்த நிலையிலிருந்தாலும், வழிபாடுகள் செய்தாலும் அடிப்படையான அமைதியில்லாவிட்டால் மகிழ்ச்சி யில்லை என்ற கருத்து இக்கீர்த்தனையில் வெளிப்படுகிறது. இன்றைய உலகில் இதை நம்மால் மிக அதிகமாகப் பார்க்கமுடிகிறது. வளர்வுக்கான அடிப்படைச் சிந்தனைத்தளம் நமக்குள்ளிருக்கும் போது அதை வளர்ப்பது நம்முடைய தாகிறது என்ற ஆழமான தத்துவம் அவரால் வெளிப்படுத்தப் படுகிறது. அவருக்குச் சிவ–வைணவ பேத மில்லை. ஓம் நமோ நாராயணா என்பதிலுள்ள "ரா" என்பதையும், "ஓம் நமசிவாய "என்பதிலுள்ள "மா" என்பதையும் எடுத்துக் கொண்டு "ராமா" என்னும் தாரகமந்திரத்தை அவர் ஏற்றதாகச் சொல்லப்படுகிறது. "எவரணி நிர்ணயிஞ்சிரிரா" என்ற தேவாம்ருதவர்ஷிணி ராகத்தில் உள்ள கீர்த்தனையில் இது வெளிப்படுத்தப்படுகிறது."நீ சிவனா, விஷ்ணுவா பிரம்மனா ?
சிவமந்திரத்தில் உள்ள மா,
நாராயணா மந்திரத்திலுள்ள ரா
இரண்டும் சேர்ந்துதான் ராமா என்பதை புரிந்து கொண்ட மனிதர்களை இத் தியாகராஜன் நமஸ்கரிக்கிறேன் "என்பது அப் பாடல் பொருளாகும். இஷ்ட தெய்வமாக ராமன் இருந்தபோதிலும் பல பாடல்களில் சிவனைப் போற்றி யிருப்பது அவருடைய காழ்ப்பற்ற சிந்தனைக்கு அடையாளமாகும். "சிவசிவ யென ராதா ஓரீ", "சம்போ மகாதேவ" "தேவாதிதேவ சதாசிவா" என்பன சிவனைப் போற்று வதாகின்றன. சூரியன், சந்திரன், நெருப்பு என்ற முக்கண் உடையவன்! விஷ்ணுவும், பிரமனும் சிவனைக் "கண்டறிய" முயன்று தோற்றனர். சிந்தனைக் கெட்டாத

உயர்வுடையவன் அவன் தியாக ராஜா என்று சிவனைப் பற்றிய போற்றுதல்கள் இக்கீர்த் தனைகளில் இடம் பெற்றுள்ளன. செல்வம்தந்து, துன்பங்களை நீக்குபவன் கணபதி. பிரமனும் பிற கடவுளரும் வணங்கும் யானை முகத்தன் என்று கணபதி பற்றிச் "ஸ்ரீ கணநாதம்", "ஸ்ரீ கணபதி" போன்ற கீர்த்தனைகள் பேசுகின்றன. காவிரியாறு பற்றிய கீர்த்தனை களுமுண்டு "காவிரியாற்றின் பேரழகைப் பாருங்கள்! . மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி, பார பட்சமின்றி அவர்களின் பாவங் களைக் கழுவி, மலையின் ஓரிடத்தில் மலைமீது அதிர்வு ஒலியோடு சீறிப்பாய்ந்தும், இன் னொரு இடத்தில் ஆறுதலாய் மென்மையாக ஓடியும், காவிரி அழகாக இருக்கிறது. பக்தர்கள் காவிரியின் இருபக்கத்திலும் நின்று வணக்கம் செய்கின்றனர் தியாக ராஜா என்று காவிரியைக் "சாரி வெடலின ஈ காவேரி" என்ற அஸாவேரி ராக கீர்த்தனை யாக்கு கிறார். சோழநாடும் கீர்த்தனையின் அங்கமாகிறது. உலகின் அழகான இடம் என்ற மனவெளிப்பாட்டில் "ஈ மஹிலோ ஸொகஸைன சோழ சீமயந்து" என்று "முரிபெமு கலி கேகதா" என்ற முகாரி ராகப் பாடலில் போற்றியிருக் கிறார். அவர் கற்ற வேத, உபநிடத, புராணக் கருத்துக்கள், தத்துவார்த் தங்களை மிக எளிமையாக மக்களுக்குக் கீர்த்தனைகளில் வெளிப்படுத்து கிறார்."ஸோபிலு சப்தஸ்வர சுந்தருல" என்ற கீர்த்தனை வேதங் களிலிருந்து தோன்றிய சப்தஸ் வரங்கள் வழிபாட்டிற் குரியவை என்கிறது. கலியுக மக்களின் பக்தி குறித்தும் தியாகராஜரின் கீர்த்தனை பேசுகிறது. "ஓ ராமா! பதவியின், பணத்தின்பின்னால் அலைகிற வர்களுக்கு தாரகமந்திரத்தின் சக்தி தெரியாது. சமைக்கப்பட்ட இனிய அவலின் சுவை காளைமாட்டிற்கு எப்படித் தெரியும் ஜகலி நருலகு மகிமலுஸ" என்ற கீர்த்தனை குறிப்பிடத்தக்கது. தமிழ்ச்சித்தரின் கருத்தான "சுட்டசட்டி சட்டுவம் அறியுமோ கறிச்சுவை" என்ற கருத்தைத் தியாகராஜர் "துத்த பாலருசி தெலியு சாம்யமே" என்று "எந்தமுத்தோ" என்ற பிந்துமாலினி ராகப்பாடலில் பயன் படுத்தியிருக் கிறார்.தியாகராஜரின் கீர்த்தனை களால்கவரப்பட்டு கோபால கிருஷ்ணபாரதி அவரைச் சந்திக்கப் போகிறார். அந்த நேரத்தில் அவருடைய சீடர்கள் ஆபோகி ராகத்தில் ஒரு பாடலைப் பாடிக்கொண்டிருக்கின்றனர். அது

பாரதியின் மனதைக் கவர்கிறது. தியாகராஜர்–பாரதி இடையே நடக்கும் சுவையான உரையாடல் இங்கு:தியாகராஜர் : "நீங்கள் எந்த ஊர்? "

பாரதி : "தாசன் மாயவரம்"

தியாகராஜர் : "அங்கே கோபால கிருஷ்ணபாரதி என்று ஒரு சங்கீத வித்வான் இருக்கிறாராமே. உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவர் சௌக்யமா? "

**பாரதி:** "தாசன்தான் அது"என்று சொல்ல தியாகராஜருக்கு பெரும் வியப்பேற்படுகிறது. சில கணங்கள் அவரையே பார்க்கிறார். பின்பு தியாகராஜர் : நீங்கள் ஆபோகி ராகத்தில் கீர்த்தனைகள் பாடியிருக் கிறீர்களா?"பாரதி மௌனமாக இருக்கிறார். மாணவர்கள் தொடர்ந்து சிலகீர்த்தனைகள் பாடுகின்றனர். பாரதி விடைபெற்றுத் திரும்புகிறார். வழிநெடுகிலும் ஆபோகியே மனதை ஆக்கிர மிக்கிறது. இரவோடிரவாக சபாப திக்கு வேறுதெய்வம் சமமாகுமா என்ற ஒரு கீர்த்தனையை உருவாக்குகிறார். அடுத்தநாள் தியாகராஜரைச் சந்தித்து அக் கீர்த்தனையைப் பாடிக்காட்டுகிறார். தியாகராஜர் : நேற்று ஆபோகி பற்றிக் கேட்டபோது ஒன்றும் சொல்லவில்லையே? "

**பாரதி :** "இதற்கு முன்பு ஆபோகியில் ஒன்றும் பாடியதில்லை. நேற்று இரவுதான் பாடினேன் "என்று பெருமையோடு பதில் தருகிறார். இது தியாகராஜரை ஆனந்தத்திற் குள்ளாக்குகிறது.

இதையடுத்து பாரதியிடம் சங்கீத அறிஞர்கள் தியாகராஜரின் பஞ்சரத்னக்கீர்த்தனை போலத் தமிழில் இயற்ற வேண்டுமென்று வேண்ட அவர் ஹரஹர சிவ சங்கர கருணாகர, சரணாகதியென்று நம்பி வந்தேன், பிறவாத முக்தியைத் தரும், மறவாமல் எப்படியும் நினைமனமே உள்ளிட்ட கீர்த் தனைகளைப் பாடுகிறார்.ஒருமுறை தியாகராஜர் ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதன் கோயிலருகே உள்ள ஒரு வீட்டில் தங்குகிறார். அப்போது ரங்கநாதரின் தேர் ஊர்வலம் அந்த வீதியில் வர, அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து தோடி ராகத்தில் "ராஜ வெடலெ" என்ற கீர்த்தனை யைப் பாடுகிறார். ஊர்வலம் வீட்டினருகே வர எதிர்பார்ப்போடு காத்திருக்க, தேர் வேறு ஒருதெரு வில் திரும்பி, அசையாமல் நின்று விடுகிறது. ஓர் உண்மையான பக்தன் மன வருத்தம் அடைந்த தால்தான் தேர்நகரவில்லை என்று சிலர் சொல்ல அவர் தேர்முன்பு

அழைத்து வரப்படுகிறார். அப்போது அவர் "வினரதநா மனவி" மற்றும் "ஓ ரங்கசாயி" என்று இரண்டு கீர்த்தனைகள் பாடுகிறார். தேர் நகர்கிறது. ஸ்ரீரங்க பஞ்சரத்னம் அப்படி உருவானதுதான். இப்படியே கோவூர் பஞ்சரத்னம், லால்குடி பஞ்சரத்னம், திருவொற்றியூர் பஞ்சரத்னம் ஆகியவை அவரால் பாடப் பட்டுள்ளன. தியாக ராஜருக்குப் பல சீடர்களிருந் தாலும் வெங்கடரமண பாகவதர், அவர் மகன் கிருஷ்ணசாமி பாகவதர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இருவரும் இணைந்துதான் தியாக ராஜரின் வாழ்க்கை வரலாற்றை உலகிற்குச் சொன்னவர்கள்.

தியாகராஜர் இயற்றிய மூன்று இசைநாடகங்களை நமக்கு அறிமுகப் படுத்தியவர் வெங்கடேச பாகவதர் என்பது குறிப்பிடத் தக்கது.பெங்களுரைச் சேர்ந்த நாகரத்னம்மா இசை, நடனம் இரண்டிலும் பேரார்வம் கொண்டவர். தியாகராஜரின்மீது எல்லையற்ற அன்பும், மரி யாதையும் உடையவர். அவருடைய பாடல்களில் யதுகுலகாம்போதி ராகத்திலமைந்தவை அவருக்கு மிகப் பிடித்ததாகும். எனவே "ஸ்ரீராமா ஜெயராமா "என்ற கீர்த்தனையை எல்லா நிகழ்வு களிலும் பாடித் தன்னையும், மற்ற வர்களையும் மகிழ்ச்சிப்படுத்துவார்.

ஒரு நாள் ராமபக்தனான தியாகராஜருக்கு சமாதிமண்டபம் கட்டுவது போன்ற காட்சி கனவில் நாகரத்னம்மாவுக்கு ஏற்பட்டது. அதற்குப் பிறகு தன் வசதியான வாழ்க்கைமுறையை மாற்றிக் கொண்டு நிதிதிரட்டியும், உதவி கேட்டும் மண்டபம் கட்டும் பணியைச் செய்து முடித்தாள். அந்த மண்டபத்தில்தான் ஆண்டுதோறும் இன்றும் தியாகராஜர் உற்சவம் நடத்தப்படுகிறது.மிகப் பெரிய அளவுடைய பஞ்சரத்ன கீர்த் தனைகள் மட்டுமின்றி, சிறியதான உத்சவ சம்பிரதாய கீர்த்தனைகள், திவ்யநாம சங்கீர்த்தனைகள் என்று பண்டிகைப் பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றில் அவர் தன் ஆழமான பக்திச் சிந்தனை களை வெளிப் படுத்தி இருப்பதோடு சமஸ்கிருத வார்த்தைகளை அதிகம் பயன் படுத்தியிருக்கிறார்.அவர் வாழ்ந்த காலகட்டத்தில், குறிப்பாகத் தஞ்சையில் இசை மற்றும் நடனத் தோடு இணைந்த இசை நாடகங் களுக்கு பெரிய அளவு வரவேற்பு இருந்தால் அந்தச் சூழலில் பிரகலாத பக்தி விஜயம், நௌகா

சரிதம், சீதாராம விஜயம் என்ற மூன்று இசை நாடகங்களைப் படைத்திருக்கிறார்.

வர்ணனைப் பாடல்கள், விளக்கப் பாடல்கள், உரை யாடல் பாடல்கள், அறிமுகவிளக்கம், உரை நடைப் பத்திகளாக அவை அமைந்துள்ளன. நாடகமாக நடிக் கப்படவில்லையெனினும் அவை அபிநயத்தோடு பாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பிரகலாத பக்தி விஜயம் பக்தியையும், நௌகசரிதம் கண்ணன் கோபி கையருக்கு முக்தியைக் காட்டிய நிகழ்வையும் விளக்குவதாகும். சாதாரண மக்களுமறிந்த எளிய ஆனால் மனதில் பதியும் உவமை களை பல கீர்த்தனைகளில் பயன் படுத்தியுள்ளார் வழக் கிலுள்ள பழமொழி, மரபுச் சொற்கள், அறநெறிக் கதைகள், உவமைகள், உருவகம் ஆகிய வையும் பயன் படுத்தப் பட்டுள்ளன. சில சான்றுகள் கையில் மோர் இருக்க நெய்க்கு கவலைப்படுதல் பாத்திரத்திற்குப் பாலின் சுவை தெரியுமா?
தலைக்கு வந்து தலைப் பாகை யோடு போனது
குழந்தையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுதல்
பிணத்திற்குச் செய்யும் அலங்காரம் போல மனமே !ராஜபாதை இருக்கும் போது குறுக்குப் பாதை யில் ஏன் போகிறாய்?
பாலும் நெய்யும் இருக்கும்போது சாராயத்தை ஏன் தேடுகிறாய்?

ஒரு காசுமில்லாத ஏழைக்கு வைரம் கிடைத்தது போல கஞ்சிகூட இல்லாதவனுக்கு அமிர் தம் கிடைத்ததைப் போல, தெருவில் ஆடுபவனுக்கு விழா மேடை கிடைத்ததுபோல என்று உவமைகள், சான்றுச் சொற்கள் இயல்பாக வந்து விழுகின்றன. தியாகராஜர் நாதோபாசனையாக தன் பக்தியை கீர்த்தனைகளின் மூலம் வெளிப்படுத்தி, அதிகமான உலக ஆசைகளின் விளைவையும், அதிலிருந்து விடுபடவேண்டியதன் அவசியத்தையும் காட்டுகிறார். எளிய நாமவழிபாட்டின் மூலம் அருளையடையும் உயர் தத்துவமும் அவரால் விளக்கப்பட்டிருக்கிறது. “ராமநாமத்தின் கோயில் . உணர்ச்சி வெளிப்பாட்டில் மீரர்பக்தியில் கபீர் இசையில் புரந்தரதாசன் தொலை நோக்கில் நம்மாழ்வார் என்று சுத்தானந்த பாரதி தியாகராஜரைப் பல உருவங்களில் போற்றுவது குறிப்பிடத்தக்கது.

# இசையும் வாழ்வும்

மனதை வசப்படுத்த வல்லது இசை எனின் மிகையில்லை. நிகரிலா இசை மனிதனை மனிதனோடு இசைவிக்கிறது. அஃதே இறைவனோடும் இசைவிக்கிறது. இசையை உணர்ந்தவன் படைப்பின் தத்துவத்தை அல்லது பிறப்பின் இரகசியத்தை உணர்பவன் ஆகிறான். முரண்படுகிற மன உணர்வுகளை சீர் செய்ய வல்ல கருவி இசை. ஆன்மாவை இசைவிப்பதனால் தான் இசை என்ற பெயர் பெற்றிருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. இசை ஸ்வரங்களுக்கு இடையே மட்டுமல்ல முரண்பட்ட அனைத்திற்குமிடையே அது இசைவை ஏற்படுத்துகிறது. உலகில் மொழி உருப்பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இசை எழுந்து விட்டது என்று மொழி நூற்புலவர் ஆட்டோ எபர்சன் கூறியுள்ளார்.

இசை இனியது. தமிழிசை அதனிலும் இனியது. ஆற்றல் அளவிடற்கரிய தமிழிசையை பல்லாயிரம் ஆண்டுகளுகளாகப் பேணி வளர்த்து வருபவர்கள் தமிழர்கள். இசையின் மெய்விளக்கியலை நுணுகி ஆய்ந்த நுண்மாண் நுழை புலம் வாய்ந்த பேரறிஞர்கள் இசையில் மேன்மை பொருந்து தெய்வீகத் தன்மை உண்டென்றும் புலனுணர்வுகளுக் கெட்டாத நாதப் பண்பை ஆழ்மனச் சக்தித்தேர்ச்சி பெற்றோரால் உய்த்துணர முடியும் என்றும் நிரூபணஞ் செய்துளார்கள். நம் ஆன்மாவை தாலாட்டும், மலர்த்தும், புத்துணர்வாக்கும் சக்தி இசைக்கு உண்டு. அதை மருத்துவ ரீதியாகவும் உண்மை என்று தெரிவிக்கின்றன ஆய்வுகள். அறிஞர். காண்ட் என்பவர் "இசையானது இன்பக் கலைகளின் முடி" என கூறுகிறார். டி. எம். பின்னி என்ற ஐரோப்பிய இசை வல்லுநர் இசையானது வரலாற்றின் வளமான ஊழியில் துளிர்த்த ஒரு சமுதாயக்கலையாக மிளிர்கிறது. சமுதாய மரபுரிமை பெற்ற ஒரு பகுதியாகவே இசை அமைப்பு உள்ளது. " என்கிறார்.

நீட்சே என்பவர் "இசையில்லாத வாழ்க்கை சுவைக்காது" என்கிறார். கன்பூஷியஸ் "இசை உண்டாக்கும் இன்பம் இல்லாது மனிதன் வாழ முடியாது" என்கிறார்.

மொகஞ்சதாரோ பண்பாட்டை கட்டி வளர்த்த திராவிடப்பெருங்குடி மக்களின் முன்னோர்களான நாகரிக மக்கள் இசையோடு இசைந்து இன்புற்று வாழ்ந்து வந்துள்ளனர். இவ் இசை சிந்துவெளி முதல் அசாம் எல்லை வரை













## கலாபூஷணம் வல்லிபுரம் செல்லத்துரை

1935.05.27 இல் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியில் பிறந்த இவர் இளமைப்பருவத்தில் இயற்கையாகவே பாடும் திறன் பெற்றிருந்தார். இவர் தனது பதினோராவது வயதில் நாதஸ்வரமேதை மாவிட்டபுரம் உருத்திராபதி அவர்களிடம் குரலிசையை முறையாகப் பயிலத் தொடங்கினார். 1961இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று பயின்று சங்கீத பூஷணம் பட்டத்தை முதற்பிரிவிற் பெற்றுக் கொண்டார்.

இவர் இசையாசிரியப் பணியைக் கண்டி, யாழ்ப்பாணம் முதலான இடங்களில் செய்துள்ளதுடன் வளவாளராகவும், விரிவுரையாளராகவும், வானொலி தொலைக்காட்சிகளில் முதற்தரக் கலைஞராகவும் பல பரிமாணங்களில் சேவையாற்றியுள்ளார். இரண்டரைக் கட்டை சுருதியில் மிகவும் நுட்பமான இராகங்களை அவற்றின் தூய்மை கெடாமல் மணிக்கணக்கில் கம்பீரத்தோடு பாடும் ஆற்றல் கொண்ட இவர்

"கலாபூஷணம் (1999) சங்கீதபூஷணம் (1945) கானாமிர்த பூஷணம் (1976) கலைஞானகேசரி (2001)" முதலான பல பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவருடைய 40 வருடங்களுக்கு மேலான கலைச் சேவையைப் பாராட்டி வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2012ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.



முகிழ்த்திருப்பினும் இமயம் தொட்டு குமரி வரை நின்று நிலவி எந்த இனத்தவர்களிடமும் காண முடியாத அளவில் இசைத்தமிழ் சீரும் சிறப்பும் பெற்று தழைத்தோங்கியமையே வரலாறு....தமிழன் இசையோடு தான் பிறந்தான். இசை பெற வாழ்ந்தான். இசையுடனே இறக்கின்றான். அவன் உடலோடும் உதிரத்தோடும் ஒன்றிய இசை அவன் உயிர் துறந்த பின்னரும் ஆன்மாவோடு பொருதி நிற்கும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இசையை இறைவனின் வடிவமாகக் கண்டவன் தமிழன். "பரந்த பாரிடம் ஊரிடைப்பலி பற்றிப்பார்த்துணுஞ் சுற்றமாயினீர் தெரிந்த நான் மறை யோர்க்கிடம் ஆகிய திருமிழலை இருந்து நீர் தமிழோடிசை கேட்குமிச்சையாற் காசு நித்தல் நல்கினீரந் தண்
நித்தல் நல்கினீரந் தண்
வீழிகொண்டடியேற்கும் அருளுதீரே"
எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்.

சிவபெருமான் எங்கும் நிறைந்தவன். எந்நாட்டவர்க்கும் இறைவன் தான். ஆனாலும் அவன் தென்னாட்டிற்கு வந்து காட்சியளித்தது தமிழிசை கேட்டு மகிழ்வதற்கு என்றே தேவார திருமுறைகள் கூறி நிற்கின்றன..
திங்களொடும் செம்பரிதி தன்னோடும் விண்ணோடும்
மண்ணோடும் உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்தது தமிழ். அத்தமிழை இசையோடு குழைத்து பாட விரும்பியவர் அப்பர்.
"சலம்பூவொடுதூப மறந்தறியேன் தமிழோடிசை பாட மறந்தறியேன் என்று பாடிய அவர் உள்ளத்திற்கு தான் ஆதி சிவனால் தோற்றுவிக்கப்பட்டு
அகத்தியனால் இலக்கணம் செய்யப்பட்ட அன்னை தமிழின் உண்மை தெரிந்தது போலும்.

தமிழன் தான் தன் மொழியை முத்தமிழாகக் கண்டவன். உலகிலே வேறெவரும் தம் மொழியை இயல் இசை நாடகம் என மூன்றாக வகுத்துக் காணவில்லை.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்.
கோலஞ்செய் துங்கக் கரிமுகத்து
தூமணியேநீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா"

என இறைஞ்சியவர் எங்கள் தமிழ்ப்பாட்டி ஒளவை.மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அதன் வழியாக காற்று எழுப்பப்படும் ஒலிகள், அருவி மலையிலிருந்து விழும்போது பாறைகளில் மோதி எழும் ஒலிகள், மலைச்சாரலில் வண்டுகள் முரன்று கூட்டும் ஒலிகள், என ஒலிகளை கண்டே இசை மொழிந்தவன் தமிழன். ஆதியில் தமிழர்கள் வாழ்ந்த நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பட்டது. இந் நிலங்களில் வாழ்ந்தவர்கள் முறையே குறவர், ஆயர், உழவர், பரதவர், மறவர் எனப்பட்டனர். இவர்களது இசை முறைமையியல் முறையே குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், செவ்வழிப்பண், பாலைப்பண், எனவாறு இருந்துள்ளது.

வில்லில் நாணேற்றி அம்பை எய்யுங்கால் அதில் எழும் இன்னோசை யைக்கண்டு வில்யாழை முதன் முதலில் உருவாக்கினர். வில் யாழ் குறிஞ்சி நிலத்தில் குற மக்களிடை முதலில் காணப்பெற்றதால் இது குறிஞ்சி யாழாக முதல் யாழாக தாய் யாழாக மலர்ந்தது. இந்த தெய்வ வாத்தியத்தினின்று எழும் இன்னொலி விலங்குகளையும் பறவைகளையும் ஊர்வனவற்றையும் ஏனைய உயிரினங்களையும் பறவைகளையும் கவரவல்லதாயிற்று. கோபத்தை தணித்து குளிர்விக்க வல்ல இன்னிசையாக அமையப்பெற்றிற்று. இராவணன் தன் யாழை மீட்டியே இறைவனின் கோபத்தை தணிவித்து அவரருளை அடைந்து வேண்டிய வரங்களைப் பெற்றுள்ளான் என்பது நமது பழங்கதை. புகழ்மிக வாய்ந்த பிற்காலப் புலவன் புகழேந்தியும்
"நெற்றித்தனிக்கண் நெருப்பைக்குளிர்விக்கும்
கொற்றத்தனி யாழ்"

என நளவெண்பாவில் சிறப்பிக்கிறார்.

பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில் பறையும் யாழும் வாழ்வின் கருப்பொருள் இசையாய் கொள்ளப்பட்டன.

தெய்வம் உணாவே மாமரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு
தொகையி அவ்வகை பிறவும் கருவென மொழிப" எனச் சான்று பகர்கின்றது.

கலித்தொகையில் "காழ்வரைநில்லாக்
கருங்களிற் றொருத்தல் யாழ் வரைத் தங்கி யாங்கு"

என்று கூறும் செய்யுள் மூலம் யானைகளும் யாழின் இசையைக்கேட்டு மதமடங்கிப் பசுப்போன்று நிற்கும் எனக்கூறக் காணலாம். யாழை மீட்டுபவர்கள் பொறுமையும் அமைதியும் உடையோராய் நன்மொழி பேசுபவர்களாய் மென்மொழி மேவுவர்களாய் விளங்குவார்கள். இதனை பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையில்

"செவி நேர்பு வைத்த செய்வுறு திவ்வின் நல்லி யாழ் நவின்ற நயனுடை
நெஞ்சின் மென்மொழி மேலவர் இன்னரம் புளர"

எனப்படுகிறது.

சிவபெருமான் இசை வடிவினன். மக்களுக்கு இசைப்பயனை அளிப்பவன். இசைக்கு உருகுபவன். சிவபெருமான் தன் செவிகளில் குண்டலமாக அசுவதரர் கம்பளர் ஆகிய இரு யாழ் வல்லோர்களை அணிந்து கொண்டு எப்போதும் அவர்களின் யாழ் இசையை செவிமடுத்தபடி இடையறாது ஆனந்தமாய் உள்ளார் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிவனடியாரான பாணபத்திரனுக்காக சிவபெருமான் விறகு விற்பவராய் வேடம் பூண்டு யாழ் மீட்டுவதில் வல்லோராய் ஏமநாதருடன் போட்டியிட்டு யாழ் மீட்டி அவனை வென்று வட நாட்டிற்கு விரட்டியடித்ததையும் அறியும் போது யாழ் இணையற்ற இசைக்கருவி என்பதையும் இறைவன் யாழின் பெருமையை காத்தமையும் உணரலாம்.கர்ணாமித சாகரம் என்ற இசைப்பெரும் நூலில் அறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் "தூல சரீரத்தின் அமைப்பையும் பிராணணின் நிலையையும் அதன் இயக்கத்தையும் நன்றாய் அறிந்த தெய்வ பக்தர்கள் எவ்விதத்திலும் அத் தூல உடம்பையே ஒத்திருக்கும் யாழ் என்னும் சிறந்த வாத்தியத்தை செய்து தங்கள் தெய்வ தோத்திரங்கள் அடங்கிய கானத்திற்கு உதவியாக உபயோகித்தார்கள். வாத்தியத்தின் அமைப்பும் அதன் இன்னிசைகளும் முற்றிலும் அதன் சரீரத்தின் சில இரகசியங்களை வெளிப்படையாக கொண்டன என்றும் எல்லா வாத்தியங்களிலும் இனிமை மிக்க தென்றும் கானத்தில் குறில், நெடில், ஒற்று, குறுக்கம், அளபெடை, முதலியவற்றை தெளிவாக சொல்லக்கூடியது யாழ் ஒன்று தான் என்றும் யாழினைக் கொண்டு இறைவனை வழிபட வேண்டும் என்றும் யாழிசை இல்லாத பிரார்த்தனை பயனற்றது என்றும் விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பெறும் சைவ வைணவ தோத்திரப்பாடல்கள் பலவற்றிலும் யாழ் காணப்படுகிறது. தெய்வீக இசைக்கருவியாகிய யாழ் இசையை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்தனர்.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்." என
மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

உள்ள திருப்பள்ளியெழுச்சியில் குறிப்பிடுகிறார். திருஞானசம்பந்தர் தன் பாடல்களில் "கூடரவ மொந்தை குழலியாழ்முழவினொடு மிசை செய்ய" என்றும்

"பறையுஞ் சிறு குழலும் யாழும் பூதம் பயிற்றவே
மறையும் பலபாடி மயானத்துறை மைந்தனார்" என்றும்
"இன்குரலிசை கெழுமி யாழ் முரல"

என்றும் யாழிசை பற்றி பாடியுள்ளார். அப்பர் சுவாமிகள் "அறை கலந்த முதல் மொந்தை வீணை யாழும் "என்றும்
" பண்ணோடு யாழ் வீணை பயின்றாய் போற்றி "என்றும்
" ஏழிசை யாழ் வீணை முரலக் கண்டேன் "என்றும்
பண்ணார்ந்த வீணை பயின்ற விரலவனே"
என்றும் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனார்
"மண்ணெல்லாம் முழவ மதிர் தர மாட மாளிகை கோபுரத்தின் மேல்"
"பண்ணியாழ் முரலும் பழனத்திருப்பனையூர்" என்றும் பாடியுள்ளார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பன வாக இறைவனை இசையின் வடிவாக கண்டு நாயன்மார்கள் துதித்துள்ளனர்.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்து மென் சிந்தை யுள்ளும் உறைவான் உயர் மதிற்கூடலினாய்ந்த வொண்தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோவன்றி ஏழிசை சூழ் புக்கோ இறைவா தடவரைத் தோட்கு என்கொலாம் புகுந்தெய்தியதோ"

எனத் திருக்கோவையார் ஏழிசை யையும் இறைவனையும் இணைத்துச் செப்புகிறது. பண்டு தொட்டு தமிழர் தம் திருக்கோவில்களில் இசைப்பதற்கென்று பாணர், பாடினியர், பிடாரர், பிடாரியர், ஓதுவா மூர்த்திகள், என்போரை

நியமித்ததோடு எழில், முழவு, பாணி, பேரிகை, தக்கை, இடக்கை, மத்தளம், உடுக்கை, சாரங்கி முதலாம் வழிபாடு சார்ந்து இசைப்பித்துள்ளமையையும் பாடல்கள் வாயிலாக அறிகிறோம்.

உழைப்பால் வாழ்தலில் வரு களைப்பிற்கு இசை மருந்தாகிறது. இசை மக்கள் உள்ளத்தில் பொருந்தும் போது இன்பம் ஊக்கம் ஆற்றல் பலவற்றை தருமெனக்கருதிய வள்ளுவரும் "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு பல்லவர் காலம் இசை வரலாற்றில் பொற்காலமாக மிளிர்கிறது. அதுவரை காலமும் அகப்பாட்டாக இருந்த இசை நாயன்மார்கள் காலத்தில் தெய்வீக இசையாக மாறியது. பண் கனிந்த பாடல்களை இசைக்கருவிகளின் துணை கொண்டு பாடித்தம் வாழ்வை இசைவுபெறச் செய்தனர்.

இசை வளர்த்தோர்களில் மகேந்திரவர்மன் சிறப்பும் நினைவு கூரத்தக்கது. "இசைப்பாக்களே எனது செல்வமும் வாழ்வும்" என தனது மத்தவிலாச பிரஹசனத்தில் கூறியதோடு பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை சங்கீரண ஜாதி எனக்கூறியுள்ளான். தாள வகைகளுள் தாள வகைகளுள் சங்கீரண ஜாதியை கண்டறிந்தவனாக இவன் போற்றப்படுவதுடன் வீணையில் வல்லவனாகவும் விளங்கியுள்ளான்.

மன்னன் இராஜசிம்மனும் வித்தியாதரன், வீணாதரன் போன்ற விருதுப் பெயர்களை பெற்றிருந்தான். ஆக ஆட்சியில் இருந்தோரும் மாட்சி பொருத இசையோடு வாழ்ந்த பெருமை நமக்கும் இசைக்கும் உண்டு. பதிகங்கள் தவிர இசைவிக்கும் கருவி நுட்பத்திற்கு உரித்துடையவர்களும் நாங்களே.

தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பெறும் சைவ வைணவ தோத்திரப்பாடல்கள் பலவற்றிலும் யாழ் காணப்படுகிறது. தெய்வீக இசைக்கருவியாகிய யாழ் இசையை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்தனர்.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்." என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உள்ள திருப்பள்ளியெழுச்சியில் குறிப்பிடுகிறார். திருஞானசம்பந்தர் தன் பாடல்களில்

"கூடரவ மொந்தை குழலியாழ் முழவினொடு மிசை செய்ய" என்றும்
"பறையுஞ் சிறு குழலும் யாழும் பூதம் பயிற்றவே
மறையும் பலபாடி மயானத்துறை மைந்தனார்" என்றும்
" இன்குரலிசை கெழுமி யாழ் முரல" என்றும் யாழிசை பற்றி பாடியுள்ளார்.

அப்பர் சுவாமிகள் "அறை கலந்த முதல் மொந்தை வீணை யாழும் "என்றும்
" பண்ணோடு யாழ் வீணை பயின்றாய் போற்றி "என்றும்
" ஏழிசை யாழ் வீணை முரலக் கண்டேன் "என்றும்
பண்ணார்ந்த வீணை பயின்ற விரலவனே"
என்றும் பாடியுள்ளார்.சுந்தரமூர்த்தி நாயனார்
" மண்ணெல்லாம் முழவ மதிர் தர மாட மாளிகை கோபுரத்தின் மேல்"
"பண்ணியாழ் முரலும் பழனத்திருப்பனையூர்" என்றும் பாடியுள்ளார்.

கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பன வாக இறைவனை இசையின் வடிவாக கண்டு நாயன்மார்கள் துதித்துள்ளனர். "சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்து மென் சிந்தை யுள்ளும் உறைவான் உயர்மதிற் கூடலினாய்ந்த வொண்தீந்தமிழின் துறைவாய் நுழைந் தனையோவன்றி

சூழ் புக்கோ இறைவா தடவரைத் தோட்கு என்கொலாம் புகுந்தெய்தியதோ" எனத் திருக்கோவையார் ஏழிசையையும் இறைவனையும் இணைத்துச் செப்புகிறது.

பண்டு தொட்டு தமிழர் தம் திருக்கோவில்களில் இசைப்பதற்கென்று பாணர், பாடினியர், பிடாரர், பிடாரியர், ஓதுவா மூர்த்திகள், என்போரை நியமித்ததோடு எழில், முழவு, பாணி, பேரிகை, தக்கை, இடக்கை, மத்தளம், உடுக்கை, சாரங்கி முதலாம் வழிபாடு சார்ந்து இசைப்பித்துள்ளமையையும் பாடல்கள் வாயிலாக அறிகிறோம்.

உழைப்பால் வாழ்தலில் வரு களைப்பிற்கு இசை மருந்தாகிறது. இசை மக்கள் உள்ளத்தில் பொருந்தும் போது இன்பம் ஊக்கம் ஆற்றல் பலவற்றை தருமெனக்கருதிய வள்ளுவரும் "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்கிறார்.

இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்கிறார்.
ஆக மிடறு முதல் கருவி வரை இசையோடிசைவுபட வாழ்ந்த பெருமைக்கும் சிறப்பிக்கும் உரியவர்களாக எமது பரம்பரை பாரம்பரியம் போற்றுதற்குரியது.

இன்றைய தலைமுறையினர் விரும்பி வணங்க வேண்டிய தேவையும் கடப்பாடும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் இன்றைய தலைமுறையினரும் இனிவரும் காலங்களில் தம் வாழ்வில் இசையோடு இசைவுபட இசைந்து வாழும் தகுதியை பெறுவார்கள்.

கால ஓட்டத்தின் நீட்சியில் தொழில்நுட்பவிஞ்ஞான வளர்ச்சி பழுக்களை சுலபப்படுத்துவதாக காண்பிக்கலாம். ஆனால் உள்ளத்தை இசைவாக்கவும் சமூகங்களோடு இசைவுபட வாழவும் இசையே துணை செய்யும் என்பதே உண்மை.

இறைவனை வழிபட்டு அவனருள் பெறச் சிறந்த வழியாகவும் இசை விளங்கிகிறது. ஆதலால் இசை மரபுகளை பேணி யாமும் இசைவுபட வாழ்வோமாக.

*நன்றி*

**திருமதி. பி. சுபாஷினி**
**ஆசிரியை**
**கொழும்பு இராமநாதன் இந்து**
**மகளிர் கல்லூரி**
**பம்பலப்பிட்டி.**



# நலம் மேவும் இசை

பண்டைய தமிழ் இலக்கியங்களான புறநானூறு, பரிபாடல் சிலப்பதிகாரம் உள்ளிட்ட பல நூல்களில் இசையின் நுணுக்கங்களையும் இசையின் வலிமையையும் அதனால் நிகழ்ந்த அபாரமான சம்பவங்களையும், ஏராளமாகக் காண முடியும்.புறநானூற்றின் "தீங்கனி இரவமொடு" என்று ஆரம்பிக்கும் பாடல் இசை மருத்துவமாகப் பயன்படுத்தப்பட்டு புண்பட்ட வீரனுக்கு இதமளித்ததைக் கூறுகிறது.

பெருங்கதை என்னும் காப்பியம் உதயணன் என்ற அரசன் யாழ் வாசிப்பதில் விற்பன்னன் என்பதைக் கூறி இசை பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கிறது. உஜ்ஜயினி நகரத்தில் பட்டத்து யானை மதம் பிடித்து ஓட, தன் யாழை வாசித்து யானையின் மதத்தை அடக்கினான் உதயணன்.

அக்பர் சபையில் இருந்த பிரபல இசை விற்பன்னர் தான்ஸேன் தீபக் ராகம் பாடுவதில் வல்லவர். அவர் அதைப் பாடினால் இருக்கும் இடமெல்லாம் ஒளிரும். இதை நேரில் பார்க்க விரும்பிய அக்பர் தான்ஸேனை அதன் வலிமையைக் காண்பிக்குமாறு வற்புறுத்தினார். எவ்வளவோ மறுத்தும் அக்பர் மசியவில்லை. இறுதியில் ஒரு பெரிய ஏரிக்கரையின் முன் மேடையை அமைக்கச் சொன்னார் தான்ஸேன். விவரம் என்னவென்று தெரியாத அக்பரும் அப்படியே மேடையை அமைக்க ஆணையிட்டார். தீபக் ராகத்தை பல்லாயிரக் கணக்கானோர் குழுமி இருக்க அக்பர் முன்னால் உளமுருகப் பாடலானார் தான்ஸேன். என்ன ஆச்சரியம், திடீரென்று ராகத்தின் உச்ச கட்டத்தின் போது அவர் உடல் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. உடனே முன்னால் இருந்த ஏரியில் குதித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டார் தான்ஸேன். மிகவும் வியப்படைந்த அக்பர் வருத்தமும் அடைந்தார். நிகழ்ந்த செயலுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டதோடு தான்ஸேனை தன் உச்சி மேல் வைத்துப் புகழ்ந்து மிகுந்த மரியாதை செலுத்தி வரலானார். இந்த சம்பவத்தை விரிவாக அக்பர் கால நூல்கள் எடுத்துரைக்கின்றன. இந்தச் சம்பவம் சைக்கிக் என்சைக்ளோபீடியாவிலும் இடம் பெற்றுள்ளது. ஆகவே இது உண்மையே என்பதை வரலாற்று ஆவணங்கள் சுட்டிக் காட்டுகின்றன!

தான்ஸேனின் ஒவ்வொரு நரம்பும் நாடியும் இசை மயம். அவர் இறந்தவுடன் நடந்த நிகழ்ச்சி இதை நிரூபிக்கிறது. கர்நாடக இசையில் உள்ள தோடியைப் போல இந்துஸ்தானி இசையிலும் ஒரு ராகம் உண்டு. அதை இசைப்பதில் தான்ஸேனின் புதல்வர்களுள் ஒருவரான பிலாஸ்கான் வல்லவர். தான்ஸேன் இறந்தவுடன் துக்கம் தாளாமல் அவரைச் சுற்றி இருந் தோர் வருந்தி அழ பிலாஸ்கான் புதுவிதமான தோடி ராகம் ஒன்றைப் பாடலானார். இசைக்காகவே வாழ்ந்து இசையே ஓர் உருவமாக வடிவெடுத்திருந்த தான்ஸேன் சடலமாக இருந்த போதும் அந்த ராகம் இசைக்கப் பட்டவுடன் அவரது தலை மட்டும் அந்த இசையைப் பாராட்டும் வண்ணம் ஆடியது. இதைப் பார்த்தோர் அனைவரும் வியந்தனர் பிரமித்தனர். ஆகவே அந்த ராகத்திற்கு பிலாஸ்கான் தோடி என்று பெயரிடப்பட்டது. இன்றும் பிலாஸ்கானியா தோடி யைக் கேட்போர் இந்தச் சம்பவத்தை நினைவு கூர்வர்.

சாம வேதமே இசையின் அடிப்படை என்று வேத விற்பன் னர்கள் கூறுவர். ஸ,ரி,க,ம,ப,த,நி ஆகிய ஏழு ஸ்வரங்களும் ஆகாயத் திலிருந்து ஒலிக்கக் கேட்டு பூமியில் இசையின் ஆதாரமாக வடி வெடுத்தது என்று மஹாபாரதம் கூறும். ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு தேவதை இருப்பதாக நமது பண்டைய இசை நூல்கள் கூறு கின்றன.

இசை ஒலியைக் கூர்ந்து நுட்ப மாகக் கேட்டு அனுபவித்தவர்கள் தமிழர்கள். சட்ஜம் மயில் அகவு தலையும் ரிஷபம் மாடு கத்து தலையும் காந்தாரம் ஆடு கத்து வதையும் மத்யமம் அன்றில் பறவை கூவுதலையும் பஞ்சமம் குயில் கூவுதலையும் தைவதம் குதிரை கனைப்பதையும் நிஷாதம் யானை பிளிறுவதையும் ஒத்து இருக்கிறது என்று தமிழர்கள் இனம் கண்டனர்.

திருஞானசம்பந்தரின் தேவாரமோ ஏராளமான அபூர்வ மான பண்களைக் கொண்டதாக உள்ளது. யாழையும் முரிக்க வல்ல யாழ்மூரிப் பண்ணையும் அவர் இசைத்ததை அவர் வரலாற்றில் விளக்கமாகப் படித்து மகிழலாம். தேவாரச் சுவடிகளில் உள்ள தேவாரம் பண் முறை வைப்புடன் இருப்பதால் தேவாரம் இன்றும் பாரம்பரிய வழியிலேயே இசைக்கப் படுகிறது.

பாரதமெங்கும் உள்ள பல்வேறு கோவில்களில் உள்ள இசைத் தூண்கள் ஹிந்து நாகரிகத்திற்கே உள்ள தனித்தன்மையுடைய இசைச் சின்னங்களாகத் திகழ்கின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோவில்,(வடக்கு கோபுர வாயில் வழியே நுழைந்தவுடன் இடப்புறம் திரும்பியவுடன் கம்பி போட்டுக் கட்டப்பட்டுள்ள இவற்றை இன்றும் காணலாம்) திருநெல்வேலி, தாடிக் கொம்பு, ஆழ்வார் திருநகர் உள்ளிட்ட பல இடங்களில் இந்த இசைத் தூண்கள் உள்ளன. கும்ப கோணம் கும்பேஸ்வரர் கோவிலில் உள்ள கல் நாதஸ்வரம் இசைக் கப்பட்டவுடன் அற்புத ஒலியை எழுப்பும். இந்த அதிசய நாதஸ்வரம் இசையையும் சிற்பத் தையும் இணைத்து வடிவமைக் கப்பட்டிருக்கும் மாபெரும் "இசை– சிற்ப" அதிசயமாகும்.

தாளவகைகள் எண்ணில் அடங் காதவை. இருந்தாலும் உச்சபட்ச மாக 175 தாளங்களை நம் முன்னோர் இனம் கண்டனர். ஆனால் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரோ இந்த 175 தாளங்களையும் கையாண்டதோடு அதையும் மீறிப் பல புதிய தாளங் களைத் திருப்புகழில் அமைத் துள்ளது இசையின் ஆழமும் அகலமும் எல்லையற்றது என்பதை விளக்கும் ஒரு செய்தியாக அமை கிறது.

தி டாவோ ஆஃப் ம்யூசிக்" என்னும் புத்தகத்தை எழுதிய ஜான் எம் ஆர்டிஸ் (தோற்றம் 31–1–1952 மறைவு 11–4–2012) இசையை ஒரு சிகிச்சை முறையாகப் பயன்படுத்தி ஏராளமானோருக்கு உதவி புரிந் துள்ளார். மூட்டுவலியாலும் மனச் சோர்வாலும் பாதிக்கப்பட்டிருந்த வயதான மூதாட்டியை பூரண குணமாக்கிய சம்பவத்திலிருந்து பல்வேறு வலியாலும் மன அழுத்தத் தினாலும் தூக்கமின்மை யாலும் அவதிப்பட்ட ஏராளமான பேர்களை அவர் மீட்டிருக்கிறார்.

முதுமையை அடைந்து விட்ட தால் கவலைப்படுவோரும் ஈடு செய்ய முடியாத இரத்த பந்தம் அல்லது சொந்தத்தில் இழப்பை அடைந்தோரும் இசையின் மூலமாக அற்புதமான ஆறுதலைப் பெற்று வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ள பல்வேறு வழிமுறைகளை "ம்யூசிகல் மெனு" என்ற உத்தியின் மூலமாகத் தங்களுக்குரிய குணப் படுத்தும் முறையைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும்படி தங்கள்

சிகிச்சைக்கான மெனுவைத் தாங்களே தயாரித்துக் கொள்ளும் அளவு வழி காட்டியுள்ளார்.அவரது அரிய ஆராய்ச்சிகளின் முடிவாக அவர் கண்டுபிடித்துள்ளவை: இசையானது

1) மகிழ்ச்சியைத் தரும்
2) உறவுகளை மேம்படுத்தும்
3) நோய்களைக் குணப்படுத்தும்
4) படைப்பாற்றலை ஊக்குவிக்கும்
5) உடலுக்கு வலிமையையும் ஆற்றலையும் தரும்
6) ஆத்ம திருப்தியை உண்டாக்கும்

நாடித் துடிப்பை சீராக்கி சுவாசத்தை ஒழுங்குபடுத்தி இதயத் துடிப்பையும் இரத்த அழுத்தத்தையும் சீராக்கி மூளை மின்னலைகளை சாந்த நிலைக்குக் கொண்டு செல்ல இசை ஒரு அற்புத வழியாகும் என்கிறார் அவர். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமே வைப்ரேஷன் எனப்படும் துடிப்பு என்பதால் இயற்கையின் லயத்திற்கு இணங்க இருக்கும் இசையை நாம் கேட்பதால் அளப்பரிய நன்மைகளைப் பெறலாம் என்கிறார் ஆர்டிஸ்.டான் காம்பெல் என்னும் பிரபல உளவியலாளர் "தி மொஜார்ட் எபக்ட்" என்று இசையின் ஆற்றலை விளக்கும் உலக பிரசித்தி பெற்ற நூலை எழுதியுள்ளார். அதில் பல்வேறு இசை வகைகளைக் கேட்டால் கிடைக்கும் நன்மை களையும் விவரித்துள்ளார்.

க்ரிகாரியன் சாண்ட் (Gregorian chant): மன இறுக்கத்தை நீக்கி மனதை சாந்தப்படுத்தும் பாரோக் இசை (Slower Baroque) வகைகளான பாச் ஹாண்டல் விவால்டி ஆகியவை படைப்பாற்றலை ஊக்குவித்து புதியனவற்றைக் கண்டு பிடிக்க உதவும் க்ளாஸிகல் இசை (மொஜார்ட் போன்றவை) ஒரு முனைப்படுத்தலை ஊக்குவித்து நினைவாற்றலை மேம்படுத்தும் (மாணவர்களுக்கு உகந்தது) காதல் (ரொமாண்டிக்) இசை ( ஷ்பெர்ட் ஷ்மென், ட்சாய்கோவ்ஸ்கி போன்றவை) நம் புலன்களைக் கூர்மையாக்கி காதல் உணர்வையும் இரக்க உணர்வையும் அதிகரிக்கும்.

ஜாஸ் நம் உணர்வுகளை மேம் படுத்தி ஆனந்தத்தை உருவாக்கி சமுதாயத்துடன் இணையும் ஆவலை ஏற்படுத்தும்.

மத சம்பந்தமான இசையோடு நம்மை உடல் மற்றும் உள வலியிலிருந்து மீட்கும். இப்படி இசை நிபுணர்கள் கூறுவதை அறிவியல் ஆராய்ச்சிகள் உண் மையே என்று கூறி நிரூபிக்கின்றன.

ட்ரினிடி காலேஜில் பேராசிரியராகப் பணியாற்றும் டான் லாய்ட் இசை பல்வேறு தரப்பட்ட மனிதர்களின் மூளைகளில் பல்வேறு விதமான மெல்லிய உணர்வுகளை எழுப்புவதாகக் கூறுகிறார். இதற்கு மூளையை ஸ்கேன் செய்து மியூசிகல் இன்ஸ்ட்ருமெண்ட் டிஜிடல் இண்டர்பேஸ் (MIDI) மூலம் ஏராளமான தரவுகளை (டேட்டா) சேகரித்தார். இதன் மூலம் ஒரு நோயாளியின் சீரற்ற செயல்பாடுள்ள மூளைக்கும் சாதாரண நிலையில் இருக்கும் மூளைக்கும் உள்ள வேறுபாடுகளை அவரால் சுலபமாக இனம் காண முடிந்தது.

நமது பாரம்பரிய இசையில் உள்ள பல்வேறு ராகங்கள் பல நோய்களைத் தீர்க்கும் அரிய விஷயத்தை அனைவரும் நன்கு அறிவர்.

பைரவி ராகம் பக்க வாத நோயைத் தீர்க்கும், காய்ச்சலைப் போக்கும் எப்போதும் உடனடி சுறுசுறுப்பை ஏற்படுத்தும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தனது "ராக ஆராய்ச்சி மையம்" மூலமாக பைரவியின் பெருமையைக் கண்டுணர்ந்த பிரபல இசையமைப்பாளர் குன்னக்குடி வைத்யநாதன் இதை பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் நிஜமாக நடந்த சம்பவங்கள் வாயிலாக விரிவாகக் கூறியுள்ளார்.

1933ஆம் ஆண்டு ப்ளோரென்ஸ் நகரில் நடந்த ஒரு மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பிரபல இசை விற்பன்னர் ஓம்கார்நாத் தாகூரை (1897–1967) இத்தாலிய சர்வாதிகாரி பெனிடோ முஸோலினி (1883–1945) சந்திக்க விருப்பம் தெரிவித்துத் தன் காரை பிரத்யேமாக அனுப்பி வைத்தார். ஓம்கார்நாத் தாகூர் ஹிந்தோள ராகத்தை அனுபவித்துப் பாடிக் காட்ட முஸோலினி அதில் உள்ள வீர ரஸத்தை அனுபவித்து உச்ச கட்டத்தில் நிறுத்துங்கள் நிறுத்துங்கள் என்று கூவினார். அவர் வியர்வையில் மூழ்கி கண்கள் சிவக்க வீரத்தைக் காண்பிக்கும் கம்பீரத்தின் உச்சத்தில் இருந்தார்.

இப்படியும் ஒரு இசை இருக்க முடியுமா என்று வியந்த முஸோலினிக்கு அடுத்து ஓம்கார் நாத் தாகூர் சாயாநாட் என்னும் துன்ப நிலையைச் சுட்டிக் காட்டும் ராகத்தைப் பாடிக் காட்ட முஸோலினி கண்ணீர் அருவியாகப் பொழிய இசையின் வலிமையைக் கண்டு அசந்து

போனார். தூக்கமில்லாமல் தான் தவிப்பதைக் கூறிய முஸோலினிக்கு பூரியா ராகத்தை தாகூர் இசைக்க அரை மணி நேரத்திலேயே வெகு நாட்களாகத் தூங்காத முஸோலினி அசந்து தூங்கினார். பாரத இசையின் வலிமையை தானே நேரில் அனுபவித்த முஸோலினிக்கு வியப்புத் தாளவில்லை.

சர்வாதிகாரி என்றாலும் கூட இசையில் அபார பிரியம் கொண்ட முஸோலினி சைவ உணவை சமைத்து ஓம்கார் நாத்தைத் தன்னுடன் உணவருந்தி விட்டே செல்ல வேண்டும் என்று வற்புறுத் தினார். பின்னர் ஓம்கார்நாத் தாகூர் பிரியா விடை பெற்றார்!

இன்னும் இலக்கியம் மற்றும் சரித்திரம் கூறும் சில செய்தி களையும் சம்பவங்களையும் காண் போம். கங்கை கொண்ட சோழ புரத்தில் சோழ மன்னனின் அரண் மனையில் தேவ கானத்தை ஒரு பெண்ணும் மானுட கானத்தை ஒரு பெண்ணும் இசைத்தனர். மன்னன் மானுட கானம் பாடிய பெண்ணைப் போற்றிப் பரிசளித்தான். இதனால் மன வருத்தமுற்ற தேவ கானப் பெண் அரண்மனையிலிருந்து வெளியேறி கோவில் தோறும் தன் தேவ கானத்தை இசைக்கலானாள். ஒரு முறை இதைக் கேட்ட நாதமுனிகள் உள்ளம் பரவசமாகி அதைப் பாராட்டினார். மன்னன் அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்து தேவ கானமே சிறந்தது என்று கூறிய அவரது இசைத் திறமையை நிரூபிக்க வேண்டி னான். நாதமுனிகள் பல்வேறு எடையுள்ள கற்களைச் செய்யப் பணித்தார். அவற்றிலிருந்து ஓசையை எழுப்புமாறு கூறினார். ஓசைகள் ஒவ்வொரு கல்லி லிருந்தும் எழுந்த உடனேயே அந் தக் கல்லின் எடையை நுட்பமாகச் சரியாகக் கூறினார். இதை நேரில் கண்ட மன்னன் பெரிதும் வியந்து நாத முனிகளின் இசை நுகரும் திறமையை வெகுவாகப் போற்றி அவரைப் பணிந்தான். அவர் கூறிய படியே தேவ கானத்தையே உயரிய கானமாக ஒப்புக் கொண்டான்.தேவ கானம் பாடிய பெண்ணிற்கு உரிய மரியாதையையும் செலுத் தினான். அறிவியலின் முக்கிய பிரிவான கணிதத்திற்கும் இசைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. கணிதம் இல்லாமல் இசை இல்லை! கிரேக்க நாகரிகத்தில் பிதகோரஸ் தான் கணிதத்திற்கும் இசைக்கும் உள்ள தொடர்பை முதலில் கண்ட வர். உடனே அவர் இசையையும்

கணிதத்தையும் ஒருங்கிணைத்தார். பிதகோரஸ் கமா (Phythaoral Comma) பற்றிய அதிசயச் செய்திகளை விரிவாகப் படித்தால் பிரமிப்பே ஏற்படும். பிதகோரஸின் பெரும் வருடம் என அழைக்கப் படும் தி பிதகோரியன் க்ரேட் இயர் 25920 வருடங்களைக் கொண்டது. இதற்கும் 25524 நோட்ஸ் கொண்ட சுழற்சிக்கும் உள்ள தொடர்பை "தி காஸ்மிக் ஆக்டேவ்" என்ற தனது நூலில் குஸ்டோ என்னும் பேரறிஞர் விளக்குகிறார்.

வானில் உள்ள ஒவ்வொரு ராசி வழியாகவும் வெர்னல் ஈக்வினாக்ஸ் (vernal equinox) எனப்படும் இளவேனில் புள்ளி (இராப்பகல் சமநாள் வருவது) பயணிக்க ஆகும் காலம் சராசரியாக 2160 வருடங்கள் ஆகும். 12 ராசிகளின் வழியே பயணிக்க ஆகும் மொத்தக் காலம் 25920 வருடங்கள்.வானில் உள்ள தெய்வீக இசைக்கும் ஒலியை உணரும் மனிதக் காதுகளுக்கும் உள்ள நுட்பமான தொடர்பை கிரேக்கர்கள் தெரிந்து வைத்திருந்ததோடு 25524 நோட்ஸ/களுடன் அவற்றுக்குள்ள தொடர்பையும் அறிந்திருந்தனர். வான இசையையும் மனித இசை யையும் லயப்படுத்திய அவர்களின் அற்புத ஆற்றலை குஸ்டோ விரிவாக விளக்குவதை காஸ்மிக் ஆக்டேவ் நூலில் படித்து மகிழலாம்.

தூங்கிக் கிடந்த தேசங்களை எழ வைத்தவை கீதங்களே! இந்திய நாட்டை பங்கிம் சந்திரரின் வந்தே மாதரம் கீதம் அசைத்து எழுப்பியது. எங்கு பார்த்தாலும் வந்தே மாதரம் கீதம் இசைக்கப்பட்டு தேசத்திற்கே ஒரு புதுத் தெம்பைத் தந்தது. அதன் வலிமையை உணர்ந்த மகாகவி பாரதியார் அதன் பெருமையை வெளிப்படுத்தும் பல பாடல்களை இயற்றியதோடு வந்தே மாதரம் கீதத்தையே இரு முறை தமிழில் மொழி பெயர்த்தார். சுதந்திரப் போராட்ட வீர்ர்களின் சுதந்திர உணர்வின் கீதமான வந்தே மாதரத்திற்கு பயந்த ஆங்கில அரசு அதை இசைக்கக் கூடாது என்று தடை போட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இந்த கீதத்திற்குத் தனி இடம் உண்டு.மகாகவி பாரதியாரின் தேசியப் பாடல்களும் சுதந்திர வேள்வியில் தமிழர்கள் தம்மை ஆகுதியாக அர்ப்பணிக்க வைக்கப் பெரும் காரணமாக அமைந்தவை!

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத் திற்கு எதிரான அமெரிக்க சுதந்திரப் போரில் இசை கீதங்களே முக்கியப்

பங்கு வகித்தன. திஃப்ரீடம் சாங் என்ற பாடலை ஜான் டிக்கின்ஸன் 1768ஆம் ஆண்டு இயற்றினார். அதுவே அமெரிக்கர்களின் சுதந்திர எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது. பின்னர் "யாங்கி டூடில்" என்ற பாடல் அவர்கள் தோல்வியுற்ற போது எழுச்சி பெறச் செய்தது. கடைசியில் இறுதி வெற்றி அடைந்த போது வெற்றி கீதமாகவும் இசைக்கப்பட்டது.

சீனர்களோவெனில் சமுதாயத்தை ஒரு கட்டுக்கோப்பாக லயத்துடன் இயங்க வைக்க வல்லது இசை ஒன்றே தான் என்று மனமார நம்பினர்.இசையின் மீது ஆர்வம் குறைந்தது என்றால் அது பண்பாடு அழிவதற்கான ஆரம்ப அறிகுறி என்பது அவர்கள் கொள்கை!வென் என்ற பிரபல இசை அறிஞர் தன் கருவியுடன் அவரது குருவான ஹ•சியாங்குடன் மூன்று வருட காலம் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் கருவியின் நரம்பிலிருந்து ஒரு ஒலியும் எழும்பவில்லை.பொறுமை இழந்த குரு வென்னை நோக்கி" போதும் நீ இசை கற்ற லட்சணம். வீட்டுக்குப் போ" என்று ஆணை யிட்டார். பெருமூச்சு விட்ட வென்."என்னால் கருவியை மீட்ட முடியாது என்பதில்லை. இசை என் இதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.சிறிது காலம் அவகாசம் தாருங்கள். பிறகு என்னை சோதியுங்கள்" என்று பணிவாகக் கூறினார். சிறிது காலம் சென்றது. வென் குருவிடம் வந்தார். "என்ன ஆயிற்று உன் இசை" என்றார் குரு.அது அற்புதமான இளவேனில் காலம்.வேன் தன் கருவியை எடுத்து ஷாங் நரம்பை மீட்டலானார்.என்ன ஆச்சரியம். திடீரென இளவேனில் காலம் முடிந்து இலையுதிர் காலம் தோன்ற ஆரம்பித்தது! இலைகள் அனைத்தும் மரங்களிலிருந்து உதிர்ந்தன.அடுத்து சியோ என்ற நரம்பை இசைத்தார்.அற்புதமான தென்றல் காற்று எழுந்தது. அருகிலிருந்த மரங்கள் ஆடின. செடிகள் பூத்துக் குலுங்கின. மரங்களில் பழங்கள் தோன்ற ஆரம்பித்தன. என்ன ஆச்சரியம்! கோடைகாலம் ஆரம்பித்தது. வென் அடுத்து யூ நரம்பை மீட்ட ஆரம்பித்தார். குளிர் காலம் தோன்றி பனித்துளிகள் விழ ஆரம்பித்தன. வென் தன் இசையைத் தொடர்ந்தார். சிப் என்ற நரம்பை மீட்டலானார். சூரியன் உதயமாகி பனித்துளிகள் உருக ஆரம்பித்தன.கடைசியாக குங் என்ற நரம்பை இதர நரம்பு

களுடன் ஒருசேர இசைத்தவுடன் வானில் மேகங்கள் குழுமின. இனிய துளிகள் விழுந்து ஜல பிரவாகம் பொங்கியது. அனைத்துப் பருவ காலங்களையும் மாறி மாறி இசை மூலம் அவர் காட்டியவுடன் குரு ஆச்சரியப்பட்டு அவரை நன்கு ஆசீர்வதித்தார். மேளகர்த்தா ராகங்கள் எனப்படும் அடிப்படை ராகங்கள் 72. "அவை

உடலில் உள்ள 72 முக்கிய நாடிகளைக் கட்டுப்படுத்துகிறது. குறிப்பிட்ட ராகத்தின் லக்ஷணத்தை உணர்ந்து அனுபவித்துப் பாடுபவர் அதற்குரிய நாடியைக் கட்டுப்படுத் துவார்" என்று பழைய இசை நூல்கள் தெரிவிக்கின்றன. சங்கீத மும் மூர்த்திகள் என்று அழைக் கப்படும் தியாகராஜ ஸ்வாமிகள், முத்துசாமி தீக்ஷிதர் சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் வாழ்வில் நடந்த ஏராளமான சம்பவங்கள் இசையின் ஆற்றலை உணர்த்து பவை.

ஜோதிஸ்வரூபிணி என்ற ராகத்தை இசைத்து குத்துவிளக்கை நெருப்புக்குச்சியின் உதவியின்றி தியாகராஜ ஸ்வாமிகள் ஏற்றி அருகிலிருந்தோரை வியக்க வைத் தார். ராகத்தின் ஸ்வரங்களுக்கு ஏற்ப எரியும் சுடர் ஓங்கியும் மங்கியும் எரிந்ததையும் அனை வரும் பார்த்து அதிசயித்தனராம். பிலஹரி ராகத்தில் அமைந்த அவரது "நா ஜீவ தாரா" என்ற கீர்த்தனை இறந்தவனை எழுப்பிய சம்பவமும் வரலாற்றில் குறிப்பிடப் படுகிறது. முத்துசாமி தீக்ஷிதரின் நவகிரக கீர்த்தனைகளைப் பாடினால் வயிற்று வலி நீங்கும் (குறிப்பாக ப்ருஹஸ்பதே என்று தொடங்கும் குரு பகவானைப் பற்றிய கீர்த்தனை) என்பதும் சியாமா சாஸ்திரிகளின் துரு சுகு கீர்த்தனை ஆரோக்கியத்தை மேம்படச் செய்யும் என்பதும் இசை விற்பன்னர்களின் நம்பிக்கை.

ரத்தக் கொதிப்பை நீக்க அசாவேரி, தலைவலி போக சாரங்கா, தர்பாரி மற்றும் ஜய்ஜய வந்தி காச நோய் போக மேக மல்ஹார் நெஞ்சு வலி நீங்க தர்பாரி, கோபமும் படபடப்பும் போக ஜய்ஜயவந்தி புன்னாகவராளி, ஸஹானா, மனச்சோர்வை நீக்க நடநாராயணி, தோல் சம்பந்தமான வியாதிகள் நீங்க அசாவேரி, வயிற்று வாயு நீங்க ஜோன்புரி பக்கவாதம் நீங்க பைரவி மற்றும் ஆஹிர் பைரவி பசியுணர்வு இல்லாமல் இருப்பதைப் போக்க

தீபக் இதய சம்பந்தமான நோய்களைத் தீர்க்க கல்யாணி., சங்கராபரணம் மற்றும் சாருகேசி என்று நோய் தீர்க்கும் ராகங்களின் பட்டியல் நீளுகிறது.

குறிப்பிட்ட ஒரு இசையைக் கேட்டவுன் உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. எண்டார்பின், கார்டிஸால் ஏசிடிஹெச் இண்டர்ல்யூகின்-1 இம்யூனோக்ளோபிலுன் -ஏ போன்ற பயோகெமிக்கல்கள் இசையைக் கேட்டவுடன் பெரும் மாறுதலை அடைகின்றனவாம். எண்டார்பின்கள் சிக்கலான மூளை அமைப்பில் உணர்வுகளைத் தூண்டுகின்றனவாம். நல்லதொரு இசையைக் கேட்டால் இவை நமது நரம்பு மண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி அதன் விளைவாக ரத்த அழுத்தம் உள்ளிட்ட பலவற்றை சீராக ஆக்குகின்றனவாம்.இவை அறிவியல் ஆராய்ச்சிகள் தரும் தகவல்கள்!

அமெரிக்க மருத்துவமனை களில் சிலவற்றில் கோரக் கல்யாண் ராகம் ஹைபர்டென்ஷன் நோயைத் தீர்ப்பதற்கு இசைக்கப்படுகிறது! ராக்ஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஓ.ஜே.ஷ்லெர் எலும்பு மஜ்ஜை பதியம் செய்து கொண்ட நோயாளிகளுக்கு வலியைக் குறைக்கவும் புதிய மஜ்ஜைகள் ரத்த செல்களை உருவாக்கவும் இசையின் உதவியை நாடுகிறார்.

மேளகர்த்தா ராகங்களான 72ஐத் தவிர்த்து ஜன்ய ராகங்கள் எனப்படும் ராகங்கள் எண்ணிக் கையில் அடங்காதவை. ஆக ராகங்கள் சங்கீதத்தை ஒரு சாகர மாக ஆக்குகின்றன.

சென்ற நூற்றாண்டில் திரைப்படத் துறை உருவானவுடன் புதிய இசைப் புரட்சி ஒன்று உருவானது. ராக சாகரத்தில் முத்துக் குளித்து நூற்றுக் கணக்கான திரைப்பட இசையமைப் பாளர்கள் பல்லாயிரக்கணகான பாடல்களுக்கு இசையை அமைக்க ஆரம்பித்தனர். திரைப்படங்கள் ஜன ரஞ்சகமாய் ஆகவே திரைப்படப் பாடல்கள் மெல்லிசையாக மலர்ந்து கோடிக் கணக்கானோரைப் பரவசப் படுத்த ஆரம்பித்தன. இவற்றில் அநேகமாக பிரபலமான ராகங்கள் அனைத்தும் கையாளப்பட்டு விட்டன!

தமக்குப் பிடித்த ராகங் களையும் அவற்றில் அமைக்கப்பட்ட பாடல்களையும் அட்டவணைப் படுத்திக் கொண்டு அவற்றைக்

கேட்டு மகிழ்ந்து உடல்நலத்தை யார் வேண்டுமானாலும் மேம் படுத்திக் கொள்ளலாம். அத் தோடு உரிய நிபுணர்களை அணுகி வியாதியைப் போக்கிக் கொள்ள அறிவுரை களைக் கேட்டு சிகிச்சை பெற்று பூரண குணத்தையும் அடையலாம்.

இசைச் சிகிச்சை (music therapy) எனபவத்தின் அடிப்படையாகவும் இசை அமைந்திருக்கிறது. இசை நம்மை அழ வைக்கிறது. ஆவேசம் கொள்ளவும் வைக்கிறது. மனதை அமைதிப்படுத்துகிறது. காதலைக் கற்றுத் தருகிறது.

சில சமயங்களில் நாம் சோர்வான ஒரு மனநிலையில் இருக்கும் போது நமக்குப் பிடித்த பாடல் ஒலிக்கும். அப்பாடல் செவிகளினூடு புகுந்து இதயத்தைத் தொட்டவுடனேயே நம்மனதில் ஒரு உற்சாகமும் புதிய உதவேகமும் ஏற்படுவதை உணர்கிறோம். இது இசைக்கும் நமது மன உணர்வு களுக்குமிடையே ஆழமான தொடர்பு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.

மனித மனத்திற்கும் உடலிற் கும் உள்ள தொடர்பு நமக்குத் தெரிந்ததே. உடல் பாதிக்கப்பட்டால் மனமும் பாதிக்கப்படுகிறது. அதே போல் மனது பாதிக்கப்படும் போது உடல் அதைப் பிரதிபலிக்கிறது. மனமும் உடலும் ஒன்றையொன்று சார்ந்தே இருக்கின்றன.

இசைக்கும் மனதிற்குமுள்ள தொடர்பு ஒரு புறம் உடலிற்கும் மனதிற்குமுள்ள தொடர்பு மறு புறம். எனவே இசையினால் மனதில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத் துவதன் மூலம் உடலிலும் அந்த விளைவுகளைப் பிரதிபலிக்க வைக்க முடியும் என்பதுதான் இசை மருத்துவத்தின் அடிப்படை விதி.

இசை அறிவியல் நுணுக் கமாகச் சொல்ல வேண்டுமாயின் மூளையின் கட்டுப்பாட்டிலுள்ள நரம்பு மண்டலத்தினுள் மிக நுட்ப மான மின்னலைகள் உற்பத்தி யாகிக் கொண்டேயிருக்கின்றன. அந்த மின்னலைகள் மூலமாகவே மூளைக்குச் செய்திகள் பரிமாற்றப் படுகின்றன. பின்பு மூளையி லிருந்து உடலில் எல்லாப் பாகங் களுக்கும் கட்டளைகள் எடுத்துச் செல்லப் படுகின்றன.

இசை என்பது ஒலி அலை களாலானது. மூளையின் மின் னலை வரிசைகளுக்கு ஏற்ப இசையின் ஒலி அலைவரிசை அமையும் போது நமது எண்ணங் களிலும் மனோநிலையிலும் பல் வேறு பாதிப்புக்கள் ஏற்படச் சந்தர்ப் பம் உள்ளது.

ஒலியின் அலைவரிசையை மாற்றியமைப்பதன் மூலம் மூளை யின் அலைவரிசையில் வேண்டிய தாக்கங்களை ஏற்படுத்தி, நமக்கு வேண்டிய மாற்றங்களை ஏற்படுத் துவதன் மூலம் நோய்களைக்

குணப்படுத்த முடியும் என்பதே இசை மருத்துவத்தின் நம்பிக்கையும் நோக்கமாகும்.

இசை வெறும் கலை வடிவம் மட்டுமல்ல. மனதுக்குள் பல்வேறு மாயாஜாலங்களையும் மாற்றங்களையும் உண்டாக்கக் கூடிய மந்திர சக்தி ஆகும். இசையை விஞ்ஞான பூர்வமாக நுணுக்கத்துடன் பயன்படுத்தினால் உடல் மற்றும் மனப் பிரச்சினைகள் பலவற்றையும் போக்கும் மருத்துவ சக்தியாகவும் மாற்ற முடியும் என்கிறார்கள் இசை சிகிச்சை பற்றிய பல ஆய்வினை மேற்கொண்டுள்ள வைத்தியர்களும் விஞ்ஞானிகளும் இசைக்கும் மனதுக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை நன்கு புரிந்து கொண்டதால் தான் ஆதிகாலத்திலிருந்தே இசையை ஒரு மருத்துவ முறையாக மக்கள் பின்பற்றி வந்தார்கள். ஆனால் நவீன விஞ்ஞானத்தின் அறிவும் ஆராய்ச்சியும் அதை ஏற்கத் தயக்கம் காட்டி வந்தன.

இந்த நிலை இப்போது மாறியிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக மூளையும் உடலும் மனமும் இசையால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை பலவித ஆராய்ச்சி மூலம் அறிந்து நரம்பியல் சிகிச்சையும் இசைச் சிகிசையையும் ஒன்று சேர்த்து நரம்பிசையியல் மருத்துவம் என்னும் ஒரு புதுப் பிரிவு மருத்துவத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இசை மருத்துவம் ஒரு பூரணமான மருத்துவம் என்ற நம்பிக்கை பல ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபணமாகியிருக்கிறது. மிக விரைவில் மருத்துவக் கல்வியில் ஒரு பிரிவாக இசை மருத்துவமும் ஆரம்பிக்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கை துளிர்விட்டிருக்கிறது.

இசை மருத்துவத்திற்கு முன்னோடியான கலாசாரம் இந்தியாவில் தான் இருந்தாலும் காலப் போக்கில் அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் விஷயத்தில் அவர்கள் பின் தங்கி விட்டார்கள். ஆனால் மேற்கத்திய நாடுகள் இந்த விஷயத்தில் விரைவாகவே சுதாரித்து விடடனர். இப்போது தான் இந்தியாவிலும் இசை மருத்துவத்தின் தார்ப்பரியம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. அங்கும் இசை மருத்துவம் பற்றி பல இசை வல்லுனர்களும் மருத்துவர்களும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

மேற்கத்திய நாடுகளில் இசை பற்றியும் அதை மருத்துவத்திற்கு உபயோகிப்பது பற்றியும் பல ஆராய்ச்சிகள் மிகத் தீவிரமாக நடைபெறுகின்றன. நரம்பியல் மருத்துவர்கள் மனநலவியல் மருத்துவர்கள் உடற்கூறு விஞ்ஞானிகள் இசை அறிஞர்கள் ஒன்று சேர்ந்து பலதரப்பட்ட நாதங்கள் அவற்றின் அலைகள் அலை மனித மனத்திலும்

உடலிலும் உருவாக்குகின்ற மாற்றங்கள் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

**இசையின் இயல்பு**

போட்டிகள் நிறைந்த இந்த நவீன உலகின் சுழற்சியில் மனித மனங்களுக்குள் ஏற்படும் ஏமாற் றங்கள், சுமைகள், உணர்ச்சிப் பிரவாகங்கள், எதிர் மறை எண்ணங்கள், ஒன்றி வாழ முடியாத நிர்ப்பந்தங்கள் அத்தனையும் மனிதர்களின் வாழ்வைப் பெரும் அபாயத்தில் தள்ளி விட்டிருக் கின்றன. இசையின் அலைகள் மனித உள்ளுணர்வைத் தூண்டி அவற்றைத் தூய்மைப்படுத் துகிறது என்பது அறிவியல் பூர்வமாகவே கண்டறியப்பட்டிருக்கிறது.

இசையின் அலைகள் மனித உள்ளுணர்வைத் தூண்டி அவற் றைத் தூய்மைப்படுத்துகிறது என்பது அறிவியல் பூர்வமாகவே கண்டறியப்பட்டிருக்கிறது.

இசை அலைகளும் லயங் களும் மூளையின் மின்னலை களைத் தூண்டி அவற்றை மாற்றி யமைக்க வல்லவை எனக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் இசையை வைத்து மனிதனுக்கு மூளையில் ஏற்படும் அபத்தங் களைச் சீர் செய்ய முடியும் என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது. சிதறிக் கிடக்கும் மூளையின் அலை களையும் துடிப்பையும் தகுந்த இசையின் அலைகளோடு ஒத் திசைய வைப்பதன் மூலம் நிவர்த்தி செய்து உணர்வுகளைத் தெளிவு செய்ய முடியும் என்பது புதிய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்பு.

மேற்கத்தேய நாடுகளின் இசை அலைகளால் சமுதாயத்தில் பெரும் சீர்திருத்தத்தைக் கொண்டு வருமளவிற்கு முயற்சிகள் நடை பெறுகின்றன. இதனால் கர்ப்பத்தில் வளரும் சிசு முதல் மரணப் படுக்கையிலுள்ள நோயாளி வரை பலர் பயனடைகிறார்கள். இந்த அறிவும் இசைச் சிகிச்சையும் பல விதமான மனோ வியாதிகளுக்கு மருந்தாக உபயோகிக்கப்படுகிறது.

இசை மனதை ஒழுங்கு படுத்தி அமைதியைக் கொடுக்கிறது. இசை மனிதரிடம் மறைந்துள்ள கவலைகளையும் குரூரத்தையும் துன்பத்தையும் களைந்து உடனிருப் பவர்களைப் புரிந்து கொண்டு அன்பு கருணையுடன் சமூகத்தில் நாகரிகமாக வாழ வைக்கிறது. கனடாவிலுள்ள ஒரு நாற் சந்தியில் இசையைத் தவழ விட்டார்கள். மக்கள் நடந்து கொள்ளும் முறையை ஆராய்ந்தார்கள். அவர் கள் ஒருவருக்கொருவர் அனுசரித் தும் வீதி ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி ஒழுக்கமாகவும் ஒழுங்

காகவும் வீதியைக் கடந்தார்கள்.

அலுவலகங்களில் இசையை ஒலிக்க வைக்கும் போது முக மலர்ச்சியும் புன்முறுவலும் வேலையில் நேர்த்தியும் அதிகரிக்கிறது. ஒரு தேவைக்காக நீண்ட வரிசையில் மக்கள் இருக்குமிடத்தில் இசையைப் பரவ விட்டார்கள். மக்களிடையே இறுக்கம் தளர்ந்து வரிசை குறைந்து போனது கூடத் தெரியாமல் நிம்மதியாக இருந்தார்கள்.

இசையோடு ஒன்றிவரும் போது நமது இதயம் இசையின் வசப்படுகிறது. இசைக்கு ஏற்றவாறு நமது இதயத்துடிப்பும் ஏறி இறங்குகிறது அவதானிக்கப்பட்டுள்ளது. நிதானமான இசை நிதான சுவாசச் சுழற்சியையும் நிதான இதயத் துடிப்பையும் கொடுத்து உடல் அழற்சியைப் போக்கி உடலை ஆரோக்கியமான நிலையில் வைத்திருக்கிறது. மாறாக, வேகமான இசை உடலை ஆட்டுவிக்கிறது. சுவாசம், இதயத்துடிப்பு எல்லாம் கூடி விடுகின்றன. உடலில் தொடுகை உணர்ச்சி குறைந்துவிடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதிக கூச்சல் இரத்த அழுத்தத்தை பத்து சதவீதம் அதிகரிக்கச் செய்வதும் ஆய்வுகளில் அவதானிக்கப்பட்டுள் ளது.

இரவில் படுக்கைக்குச் செல்லும் போது மெல்லிய நிதானமான இசை ஒருவரை அமைதியான ஆழ்ந்த உறக்கத்திற்கு கொண்டு செல்வதுடன் அவருடைய ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இசை அலைகள் நரம்பியல் மருத்துவர்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் மூளையின் கூறுகளை இசை சமப்படுத்துவதோடு மூளையின் அலைகளின் லயத் தையும் மாற்றியமைக்க வல்லது என உறுதிப்படுத்துகிறார்கள்.

மூளையின் மின் அலைகளை அவற்றின் வேகத்திற்கேற்ப நான்கு வகையாக வகுத்திருக்கிறார்கள். நாம் சுறுசுறுப்பாக வேலை செய்கின்ற நிலை. (பீற்றா அலைகள்) உயர்ந்த அறிவுநிலையும் அமைதியும் காக்கும் நிலை. (அல்ஃபா அலைகள்) தியான நிலையம் படைப்பாற்றலையும் உறக்கத்தையும் தூண்டும் நிலை ( தீற்றா அலைகள்) ஆழ்ந்த தியான நிலை ஆழ்ந்த உறக்கம் மற்றும் சமாதி நிலை. (டெல்டா அலைகள்) மூளையின் மின்னலைகளை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றும் சக்தி இசைக்கு உள்ளது என்பது தான் ஆராய்ச்சிகளின் முடிவு.

# இசைத் தமிழ்த் தன்மை

உலகில் எல்லா நாடுகளிலும் வாழும் மக்களறிவில் தோன்றி விளக்கமடைந்து வளர்ந்துள்ள கலைகளில் இசைக்கலையும் ஓர் ஒப்பற்ற கலையாகும். இந்திய நாட்டு இசைக்கலையும் கருவியிசை, கண்ட (குரல்) இசை எனும் பாகுபாட்டினோடே வளர்ந்து வருவதாகும். ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந்நாட்டுப் பண்பிற்கு மட்டும் ஏற்றவாறே கலைகளும் விளங்கி வருவது இயல்பு.

இந்திய இசையில் நுண்ணொலிகள், அவற்றின் சேர்க்கை, மாறி மாறி ஒலிக்குத் தன்மை, அவ்வவற்றால் கேட்கப்படும் ஒலிக் கூறுபாடுகள், அவற்றின் ஒப்புமை ஒப்புமையின்மை யாவும் கருவிகளின் வழியேதான் மிக்க பழங்கால இந்திய மக்களால் அறிந்துணரப்பெற்றன.

இந்திய இசையிலும் முறைமைபற்றி வட இந்திய இசை, தென்னிந்திய இசை எனும் பிரிவுமுறை எக்காலத்தும் உளது. ஒலிவகை ஒன்றாயிருந்தும் இசைவகை (கரவகை) ஒன்றாயிருந்தும் இசைக்கும் முறைமையே அப் பிரிவுமுறையாகும். பொது வகையில் வட இந்திய இசை இராகத் துறையிலும் தென்னிந்திய இசை பண்முறையிலும் பழங்காலந் தொட்டே வழக்கில் இருந்துள்து.

பாடிவரும் பழக்க முறை, இசை வகை இலக்கியமாகும். அதனையறிந்தோர், மறை தவறாதிருத்தற் பொருட்டுப் பழக்க வழக்கத் தன்மைகளை அறிமுகப்படுத்தி எழுதி வைத்துப் பாதுகாத்த முறை, இலக்கணமாகும். இலக்கணம் நூல் வடிவில் நெடுங்காலம் வரையிருந்து துணை செய்யும். இலக்கியம் அவ்வக்காலங்களுக்கு ஏற்ப மாற்றமடையும். ஆயினும் இலக்கியமே முதலில் வைத்து எண்ணப்பவடுவது வழக்கு இக்கருத்து, இசைத்தமிழ்க் கலைக்கும் பொருந்துவதாகும் மக்கள் வழக்கில் பாடி வரும் பழக்க முறை பொதுவியலைச் சார்ந்ததாகும். இயல், இசை, நாடகம் யாவுமே வேத்தியலாகவும் பொதுவியலாகவும் இருந்துள்ளன. இசையையும் நாடகத்தையும் மொழியோடு சேர்த்துக் கூறிய பெற்றிமை உலகில் தமிழ்மொழிக்கே தொன்றுதொட்டு அமைந்து உளது. அவ்வமைப்பினை






தமிழ
-201







இவ்வாறுங் காணலாகும். எதனையும் எழுதிக் காணுமிடத்துச் சிற்சில நுண்மையும் தன்மையும் புலப்படும் என்பதுறுதி.

**தமிழ்**

இயல் – தமிழ் – இயற்றமிழ்

தமிழ் – இயல் – தமிழியல்

இசை தமிழ் – இசைத்தமிழ்

தமிழ் – இசை தமிழிசை

நாடகம் – தமிழ் – நாடகத்தமிழ்

தமிழ் – நாடகம் – தமிழ்நாடகம்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" ஆதலின், இத்தகு சொற்களின் அமைதி முறைகளில் ஆழ்ந்த பொருள் தன்மை நிறைந்து விளங்குவதறியலாம். ஆயினும் தனித்தனியே அறிதலே சாலச் சிறப்புடைத்து. தமிழ்மொழிக்குத் தொல்காப்பியமே சிறந்த முதல் இலக்கண நூலாகும். "இயைபே புணர்ச்சி","இசைப்பு இசையாகும்" எனுமிவ்விரண்டு தொல்காப்பிய நூற்பாவிற்கும், இயைந்தொழுகும் எனவும் யாழிசையூப்புக்கும் எனவும் அதாவது ஊடே புகும் எனும் பொருள்பட,இயைபும், இசைப்பும், புணர்ச்சிக் குறிப்பும், இசைப் பொருண்மையையும் உணர்த்தியவாறு என அதன் உரைக் குறிப்புக் கூறுகின்றது. இசைத்தமிழ்க்கலை நரம்பின் மறை என்றும் கூறப்பெற்றது.

ஓலிவகைக் கலைப் பகுதியிலும் நுண்கலை முறைமை பலவாக உள்ளன. ஆதலின் நுண்கலைகளில் ஒன்றாய இசைக்கலை ஒப்பற்ற தனித்த மொழி போன்றே விளங்குவதாகும் எனக் கூறப்படும். நுண்ணிய ஒலியணுக்களின் திரட்சியே இசையென்பதும் அறியப்படும்.

அடியார்க்குநல்லார் காலத்து மறைந்த இசை நூல்களின் பெயரும், இருந்த இசை நூல்களின் பெயரும் தெரியவருகின்றன. இசை, தனித்தும் விளங்கும் மொழியுடன் சேர்ந்தும் விளங்கும். மொழியுடன் சேர்ந்து விளங்குங்கால், மொழிக்கு முன்னின்றும் பின்னின்றும் விளங்கும். இசை முன்னின்று விளங்கினால் அதனைச் சேர்ந்த தமிழ், இசைத் தமிழ் எனவும்,

பின்னின்று விளங்கினால் அதனைச் சார்ந்த தமிழ் தமிழிசை எனவும் பெயர் பெறுவதை, சான்றோர்கள் நன்கே நிறுவிப் போந்தனர். இக் கருத்தே இலக்கணத்தில் இடம் பெற்றது. இசைத்தமிழ் இலக்கணம் வெண்பாவானம், நாடகத்தமிழ் இலக்கணம் ஆசிரியப்பாவானும் இயற்றப்பெற்றது.

இந்தியத் தென்னகத்தில் சிறப்பாகக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணைகளும் இயல்பாகவே அமைந்துள்ளன. அம்முறையில் தமிழகத்தே மிக்க பழங்காலத்தில் முல்லை நிலத்து வாழ்ந்த ஆயர் பெருமக்களால் குழல் வழியும் யாழ் வழியும் இசைக்கலை தோற்றுவிக்கப் பெற்று அறிந்துணரப்பெற்றுப் பெருக வளர்க்கப்பெற்றன என்பதே தொன்னூல்களின் முடிபு. இக் கருத்தினை நம் விபுலாானந்த அடிகளார் பெரும்பாணாற்றப் படைப் பகுதியினின்றும் இவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்:

“தொடுதோல் மரீஇய வடுவாழ் நோனடி விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல் மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக் கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட பல்பூ மிடைந்த படலைக் கண்ணி ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன் கன்றமர் நிரையொடு கானத் தல்கி அந்து ணவிர்புகை கமழக் கைம்முயன்று ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழிச் செந்தீத் தோட்ட கருந்தளைக் குழலின் இன்றீம் பாலை முனையிற் குமிழின் புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின் வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப் பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும் பல்லார் வியன்புலம் போகி..” (பெரும்பாண். 169 184)

என்பதே அப்பகுதி அருட்டிரு விபுலாநந்த அடிகள் அவர்கள் இருபதாம் நூற்றாண்டு யாழ் நூலாசிரியர் மேலும் விபுலாநந்தர் தலைச் சங்கத்துக்குமுன் நடந்த இந் நிகழ்ச்சியினைக் கடைச் சங்கக் காலத்துப் புலவராகிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் கனவு கண்டு தாம் தொண்டைமான் இளந்திரையனைப் பாடிய பெரும்பாணாற்றுப்படையினுள்ளே பொதிந்து வைத்தார் எனவும் கூறினார்.

முல்லை நிலத்து ஆயர்கள் கண்ட குழல்களும் பல யாழ்களும் பல குழற்கருவிகள் பற்றிய ஒரு சில செய்திகளை நமக்குச் சிலம்பினது உரைப்பகுதி தெளிவுறக் காட்டுகிறது. அவை வருமாறு:

"குழலும் என்றது – வங்கியப் பாடலும் என்றவாறு குழல்–வங்கியம். அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம். என்னை?

"ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி–பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோரார் பார்த்து."

"இவற்றுள், மூங்கிலிற் செய்வது உத்தமம். வெண்கலம் மத்திமம் ஏனைய அதமமாம்.மூங்கில் பொழுது செய்யும் வெண்கலம் வலிது மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும்." "இக்காலத்துக் கருங்காலி செங்காலி சந்தனம் இவற்றாற் கொள்ளப்படும். கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து நாலு காற்று மயங்கின் நாதமில்லையாமாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து, அதனை நிழலிலே ஆற இட்டு வைத்துத் திருகுதல், பிளத்தல், போழ்ந்துபடுதல் இன்மையை அறிந்து ஓர்யாண்டு சென்றபின் இலக்கண வகையான் வங்கியம் செய்யப்படும்."

"இதன் பிண்டியிலக்கணம் நீளம்: இருபது விரல்:சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்."

"இனித் துளையளவிலக்கம்: அளவு இருபது விரல். இதிலே தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல் வாய்விட்டு இம் முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினு மிரண்டு நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரை என்று கழித்து நீக்கிநின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகம் கொள்ளப்படும்." "இவ் வங்கியம் ஊதுமிடத்து வளைவாய் சேர்ந்த துளையை முத்திரையென்று நீக்கி முன்னின்ற ஏழினையும் ஏழு விரல்பற்றி வாசிக்க.

"ஏழு விரலாவன: இடக்கையிற் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலும் ஆக ஏழு விரலுமென்க."

"இவ் வங்கியத்து ஏழு துளைகளில் இசை பிறக்குமாறு:அஃது ஏழெழுத்தாற் பிறக்கும்,எழுத்து ச, ரி, க, ம, ப, த, நி என்பன. இவ்வேழு எழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும்."

"ஏழிசையாவன: சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்."
ஆசிரியன் நல்லந்துவனாரால் பாடப்பெற்ற பண்டைய இசைப்பாடல்களில் ஒன்றானதும், மருத்துவன் நல்லச்சுதனார் என்பவரால் பண்ணுப் பாலை யாழில் இசையமைக்கப்பெற்றதானதும் கிடைத்துள்ள எட்டாவது பரிபாடலில் (அடி 22) "ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன" எனும் அடிகளுக்கு அந்நூல் உரைப்பகுதி "ஏழு துளையான வங்கியத்தும் ஐந்து துளையான வங்கியத்தும் யாழினும் பிறந்த இசைச் சுருதி யொத்து" எனக் கூறுகிறது.

மரபுத் தன்மைப்படி நோக்குமிடத்து ஏழ்புழைக் கருவிகள் ஏழு இருந்திருத்தல் வேண்டும்:அது போன்றே ஐம்புழைக் கருவிகள் ஐந்து இருத்தல் வேண்டும். புழை என்பது துளை. ஏழ்புழைக்கருவிகளில் ஒன்றான ஒரு கருவியையே அடியார்க்குநல்லார் அறிமுகப்படுத்தி இலக்கண மேற்கோள் காட்டினார். அவர் கூறிய அளவு முறைகொண்டு அருட்டிரு விபுலாநந்த அடிகள் பிற்கால ஓசை, ஒலி நூலறிவாலும் விளக்கந்தந்துள்ளார். அவ்விளக்கத் தினையும் ஈண்டுக் காணலாம். "நம்மைச் சூழவிருக்கும் பவனத்திலே ஓசையானது ஒரு செக்கண்டுக்கு 1, 081 அடி அல்லது 31 மீத்தர் வேகமாகச் செல்லுகிறது என்று கொள்ளலாம்."
"அடியார்க்குநல்லார் காட்டுகிற வங்கியத்தின் நீளத்தினை எடுத்துக் கொள்வோம். நீளம் இருபது விரல். சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒரு பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தால் அணைசு பண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்..."

"இனித் துளையளவிலக்கணம்:அளவு இருபது விரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு இம் முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு நீக்கி நடுவு நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்" என அடியார்க்குநல்லாரது சொற்களையே நாம் மீண்டும் விளங்கிக்கொள்ளவேண்டிக் குறித்த விபுலாநந்தர்.

"எல்லா இடைப்பரப்புகளும் ஓரளவாக இருத்தல் பொருந்தாது" எனவும் கூறி,"இப்பொழுது நாம் காணவேண்டியது இக் குழலிலே எழும் முதற் சுவரத்தின் நாதம் ஒரு செக்கண்டுக்கு எத்தனை சிற்றலைகளை உண்டு பண்ணிப் பவனத்திலே பரவுகிறது என்பதேயாம்" எனவும் கூறியதோடன்றி. இங்குக்" கூறிய விரலளவு அங்குலம் என்பவை ஒரு சாணின் பன்னிரண்டில் ஒரு கூறாகிய முக்கால் "இஞ்சு" ஆகும். வளைவாயிலிருந்து இரண்டு விரல் கீழாக நிற்பது முத்திரை என்னும் துளை. அதனினின்று ஒரு விரல் தாழ்ந்து நிற்பது முதற் சுவரத்தின் துளை. இதற்கும் அடைக்கப்பட்ட இடப்புறத்து முகத்திற்கும் தூரம் பதினேழு விரலாகும். இதுவே முதற் சுவரத்திற்குரிய குழல் நீளமாகும். இதனை நான்கிற் பெருக்கக் கிடைப்பது அலை நீளம்.மூஅங்ஙனமாதலின் அலைநீளம் 68 விரல் அல்லது 51 "இஞ்சு" ஆகிறது. ஒரு செக்கண்டு என்னும் காலவெல்லையின் முதலிலே புறப்பட்ட அலையானது 1,081 அடி (ஓசை ஒரு செக்கண்டிலே செலலும் தூரம்) அகன்று நிற்ப செக்கண்டின் இறுதியிலே புறப்பட்ட அலை துளைவாயிலே நிற்கும்."

இந்த எல்லைகளுக்கிடையே எத்தனை அலைகள் உண்டென்று காண்பதற்கு 1,081 அடி, அதாவது 12,972 இஞ்சுகளை 51 இஞ்சுகளால் வகுத்துக் காணவேண்டும். அவ்வாறு வகுத்துப் பெற்ற பேறு 254. மேனாட்டார் சட்ஜத்திற்கு 256 முதல் 261 வரையும் அசைவெண் கொள்வர். ஆதலினால் நாம் ஆராய்ந்த குழலில் இருந்து எழுகின்ற முதற் சுவரத்தினோசை இளி நரம்பினோசை என்பது பெறப்பட்டது.

"இனி, ஏழாவது துளையினின்றும் எழுகின்ற சுவரத்தினை அளவிடப்புகுவாம். தூம்புமுகத்திலிருந்து 9 விரலில் ஏழாவது துளை நிற்கிறது. இதன் அலை நீளம் 36 விரல் அல்லது 27 இஞ்சு ஆகும். ஆதலின் அதனசைவண் 12,972 27ஸ்ரீ480 ஆகிறது. முதற் சுவரத்தின் அசைவெண்ணினை 256 எனக்கொள்ளலாம். அப்படிக் கொள்ளுமிடத்து ஏற்படுகின்ற வழு நூற்றுக்கு ஒரு வீதமாதலின் கொள்வதில் தவறில்லை. ஏழாஞ் சுவரத்திற்கும் முதற் சுவரத்திற்கும் இடையேயுள்ள அசைவெண் விகிதம் 480ஃ256 ஆகும். இதனைப் பொதுச்சினை நீக்கிக் கொள்ளக்கிடைப்பது 15ஃ8 ஆகும். இதுவே 19ஆம் சுருதியாகிய கைசிகி நிஷாதத்திற்குரிய விகித எண். இது பழந்தமிழிசையிலே உழை எனப்படும் அடியார்க்கு நல்லார்,"காட்டிய வங்கியம் இளி முதல் உழையீறாக இசைத்தது என்பதைக் கணித நூல் கருவியாக மட்டிட்டறிந்து கொண்டோம்" என்றார்.

மேலும் அவர்,"மேற்கூறிய வங்கியத்தை அழுத்தமாக ஊதினால் அதனின்று எழும் அலைகளின் தொகை முன்னையிலும் மூன்று மடங்காகும்.. முன்னின்ற அசைவெண் 256 ஆயின் இப்பொழுதுள்ள அசைவெண் 768 ஆகும். இது மேற்றானத்துப் பஞ்சமத்திற்குரியது. பஞ்சமத்தைப் பண்டையோர் துத்தம் என்றனர். இளியினுள்ளே துத்தம் தோன்றுமெனப் பழைய இசையாசிரியர்கள் கூறிய உண்மையினை இது நமக்கு வெளியிட்டுக் காட்டுகின்றது."

ஊதப்படுகிற ஏழு துளைகளிலும் நடுவில் நின்ற துளையிலே முன்பு குரல் (மத்திமம்) இசைத்தது. இப்பொழுது இளி (சட்ஜம்) இசைக்கின்றது. குரலினுள்ளே இளி தோன்றும் எனும் உண்மையினை இது நமக்கு வெளியிட்டுக் காட்டுகின்றது. ஏழாந்துளையினுள்ளே முன்பு உழை பிறந்தது. இப்பொழுது அத்துளையில் குரல் நரம்பினிசை பிறக்கின்றது. உழையினுள்ளே குரல் தோன்றும் எனும் உண்மையை இது நமக்குக் காட்டுகிறது. உழையுனுட் குரல்,குரலினுள் இளி, இளியுனுள் துத்தம் என்பவற்றை நினைவில் வைப்போமாக" எனவே கூறினார்.

"தாரத்துட் டோன்றும் உழையுழை யுட்டோன்றும் ஓருங் குரல்குரலி னுட்டோன்றிச் – சேருமிளி யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட் கைக்கிளை தோன்றும் பிறப்பு" என்பது பண்டைய இசைத்தமிழ் வெண்பா. அது கூறும் ஒப்பற்ற உண்மையினை விபுலானந்தர் ஒலி நூற்பகுதி கொண்டும் இசைத்

தமிழ்த் தன்மையினை நமக்குப் புலப்படுத்தினார்.

அடியார்க்குநல்லார் கூறிய குழலினின்று ஏழிசை தோன்ற அதன் குறியீட்டு எழுத்துகள் சரிகமபதநி என்பதே. இதனைப்பற்றியும் நாமறிதல் வேண்டும். பண்டைய இசைத் தமிழ்த் தன்மையில் முதலிசை முதல் எனும் பொருள்பட தாரம் எனவே கூறப்பெற்றது. இதனைத் "தலையினத் தாரஞ் செய்யுந் தாரம்" என்றெடுத்துக்காட்டிய அடியார்க்குநல்லார். "இவற்றுள் முற்றோன்றியது தாரம். அது வந்தவழிக் கண்டுகொள்க" எனவும் கூறியிருப்பதறியலாம். விபுலானந்த அடிகளும் ஓரிடத்தில் "முதலிசையைத் தாரம் எனக் கூறுவது பழந்தமிழிசை நூற்றுணிபு" எனவும் கூறுவார். இனி, அம்முறையில் குறியீட்டுத் தன்மையுணர எழுத்துகளையும் எழுதிக் காணலாம்.

"ஆங்குள ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் ஏழிசைக்குரிய" என்பது நிகண்டு. பிறப்பு முறையிலே தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை எனத் தோன்றி ஏழிசைகள், நிரல் அளவு முறைமையில் தாரம்,குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என அமைந்து விளங்கி நிற்கும். இவற்றின் உயிர்க் குறியீட்டு எழுத்துகள் நிகண்டு முறைப்படி, ஓசையானது பவனத்தினூடே சிற்றலைகளின் வடிவமாகப் பரவும். ஒரு பக்கம் மூடப்பட்ட துளைக்கருவி (புல்லாங்குழல்) ஒன்றினை ஊதி இசையெழுப்ப, குழலின் நீளத்தினைப்போல் நான்கு மடங்கு நீளமுள்ள அலைகள் எழும்.

இவ்வட்டவணையைக் கூர்ந்து காணுமிடத்து ஒரே உயிர் எழுத்து எழிசைகளுக்கும் வருவதறியலாம். ஆயினும் ஒவ்வோர் இசைக்கேயுரிய குறியீட்டெழுத்துகள் நல்ல கரணியத்துடன் சான்றோர்களால் குறித்து உணரப் பெற்றுள்ளன என்பதும் போதரும். அதாவது ஒரு குறியீட்டெழுத்து எழுதியறியின் அவ்வெழுத்து ஒரு குறிப்பிட்ட இசையேயே குறிக்கும் என்பதாம். முதல் இசையாகிய தார இசையின் குறியீட்டெழுத்து, முதலிசை எனும் பொருள்படியும் முதலெழுத்து மெய்ழெத்தில் க என்பதும்: குரலிசையின் குறியீட்டெழுத்து, மகளிர் குரலினை ஒத்து ஒலிப்பது அறிந்தமையால் ம என்பதும் துத்த இசை மூன்றாமிசையாதலால் ஏழிசைகளில் மூன்றாமிசை பகை

| ஏழிசைகளின் உயிர்க் குறியீட்டு எழுத்துகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |

எனப்படுவதால் ப என்பதும் குறியீட்டெழுத்தாயிற்று. கைக்கிளை இசையின் குறியீட்டெழுத்து ஏற்கனவே ஐந்தாம் இசையாகிய உழை கிளையாயிருந்தலின் இவ்விசைசிறியகிளை எனும் பொருள்படக் கைக்கிளையானதால் த என்பதும் உழையிசையின் குறியீட்டெழுத்து தாரத்திற்கு உழை கிளை ஆதலான் நற்கிளை எனும் பொள்பட ந என்பதும் இளியிசையின் குறியீட்டெழுத்து ஆறாமிசையாக நின்று பகையாகி என ஒலித்தலால் மேற்பகை அல்லது சமப்பகை எனும் பொருள்பட ச என்பதும் விளரியிசை ஏழாமிசையாதலால் ஒரு நிரலினை நிறைவு செய்தலால் விளர் எனும் பொருள்பட விளரி எனப்பட்டதாலும் ர என்பது குறியீட்டெழுத்தாயிற்று. கமபதநசர எனும் இசைத் தமிழ்க் குறியீட்டெழுத்துகள் கண்டத்தாற் பாடுங்கால் கமபதநிசரி எனப்பட்டது. அன்றியும் அலகுமுறை எண்களை அறிய வேண்டியும் அவ்வவ்வெழுத்து இனங்களும்

பயன்படுத்தப்பெற்றன. இவ்வாறே விரிவடையும் எழுத்துகள் அனைத்தையும் யாழெழுத்துகள் எனத் தனித்த முறையில் விதந்தோதப் பெற்றன. இவ்வெழுத்துகளை யாழெழுவல் யாழின் கிளவி என்றெல்லாம் கூறப்பெறும். யாழிசை யூப்புக்கும் எழுத்துகள் அதாவது யாழின் இசையூடே புகும் ஏழுத்துக்கள் என்றும் கூறப்பெறும்.

இந் நிரல்களைக் காணுமிடத்து ஆறாம் நிரலான இளி முதல் உழையீறாய நிரலே சரிகமபதநி எனும் குறியீட்டினைக் கொண்டு விளங்குவதறியலாம். இந் நிரல்தான் அடியார்க்குநல்லார் காட்டியவங்கிய இலக்கணமும் அதனின்று எழுப்பப்படும் ஒலிமுறையாகிறது. அவற்றின் குறியீட்டெழுத்துகளுமாகிறது. விபுலாநந்தர் அறிந்து உணர்த்திலரேல் நம்மால் அறிந்துணர இயலவே இயலாது. சரிகமபதநி எனும் குறியீட்டெழுத்துள்ள பாலை,கோடிப்பாலை எனப்படும். பண்டைய கோடிப் பாலை அதனிசை, அலகுமுறைகள் அவற்றைக் கணித்தறிந்த விபுலாநந்தர், பண்டைய கோடிப்பாலை, பிற்கால இசை வல்லுநரால் கரஹரப்ரியா எனப்பட்டதென்றார். ஆகவே, சிலம்பு தரும் இசைத் தன்மை, மாதவியின் அரங்கேற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டு ஊதியிசைத்த ஒருஜ

| ஒவ்வோரிசைக்கே உரிய மெய்க் குறியீட்டெழுத்துகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி |
| க | ம | ப | த | நி | ச | ரி |
| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
| ம | ப | த | நி | ச | ரி | க |
| துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் |
| ப | த | நி | ச | ரி | க | ம |
| கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் |
| த | நி | ச | ரி | க | ம | ப |
| உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை |
| நி | ச | ரி | க | ம | ப | த |
| இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை |
| ச | ரி | க | ம | ப | த | நி |
| விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி |
| ரி | க | ம | ப | த | நி | ச |

குழற்கருவி கோடிப்பாலையை ஊதும் அளவிற்குத் துளையிடப்பட்டதென நமக்குக் காட்டுகிறது. அதுபோன்றே மற்றும் ஆறு பாலைகள்,விளரிப்பலை, மேற்செம்பாலை, செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வ வழிப்பாலைா, அரும்பாலை எனும் ஒவ்வொரு பாலையையும் ஊதும் அளவிற்குக் குழற் கருவிகள் தனித்தனி துளை இயிடப்பட்டிருந்தன என்பதையும் அறிதல் வேண்டும்.

குழற்கருவிகளும் பல என்பதுபற்றி அடியார்க்கு நல்லார், கொன்றை, ஆம்பல், முல்லை என்பன சில கருவி இதனுள் குழலென்றது வங்கியத்துப் பொதுப் பெயர், இவற்றுட் கூறியது எல்லாமுணர்ந்து கருவியாதல் கொள்க. அவ்வாறு கொள்ளுங்கால் கருவியென்பதனை இடுகுறியாகக் கோடுமோ காரணக்குறியாகக் கோடுமோவெனில் காரணக் குறியாகக் கோடும். என்னை காரணமெனில்?

"கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசு பண்ணிச் செறித்தலின் ஆம்பற் குழுலாயிற்றெனவும, கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்து ஊதலிற் கொன்றைக் குழலராயிற்றெனவும். முல்லைக் கொடியால் முப்புரியாகத் தெற்றிய வளையை வளைவாய்க்கட்செறித்து ஊதலின் முல்லைக் குழலாயிற்றெனவும் கொள்க."

இவ்வுரை குறித்து நோக்குங்கால் குழற்கருவிகளும் பலவென்பது கூறாமலே விளங்கும். இக்காலத்தும் குழற்கருவிகள் பற்பலவாய் தமிழகத்து மக்களிடையே உள்ளன. ஊதும் தொழிலும் நடைபெற்று வருகின்றன. நாதசுரக்கருவிகள், கருங்கல் நாதசுரம், முகவீணை, புல்லாங்குழல், குறுங்குழல், நெடுங்குழல் எனப் பலவாக இருப்பதும் தெரியவரும். கொம்பு வகைகளும், தாரை, திருச்சின்ன வகைகளும் பலவே. இனி, யாழ்க் கருவிகள் பற்றி அறியலாம். பரிபாடலில் "யாழிசை கேழ்த்தன்ன" என்னுமிடத்தும்,"பருக் கோட்டியாழ்ப்பக்கம்", சுவர் தொடை நல்யாழ்" எனும் பகுதியிலும் சிலப்பதிகாரத்தில் பலவிடத்தும். பத்துப்பாட்டிலும் இன்னும் பழந்தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் ஏன்? இலக்கண நூல்கள் சிலவற்றுள்ளும் யாழ் எனும் கருவி அதனதன் உறுப்புகளோடு நன்கு எடுத்துக்காட்டிக் கூறப்பெற்றுள்ளன. யாழ்க் கருவிகளே பற்பலவாம்.

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியும் செங்கோடு செப்பினார்–தார்

பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற"

எனும் பாடலைப் பயிலுமிடத்து,"பின்னுமுளவே பிற" என்ற சொற்களால் ஐந்து நரம்புடைய வில் யாழ் முதல் ஆயிரம் நரம்புகளையுடைய ஆதி யாழ் வரை எத்துணையோ யாழ்க் கருவிகள் இசைத் தமிழ்க் கருவிகளாக இருந்துள்ளமை பெரிதும் தெரியவரும். இக் கருவிகளைப்பற்றி ஒவ்வோர் உறுப்பும் மிகச் சிறந்த உவமைகளோடு சங்கநூல்களில் நன்கே கூறப்பெற்றுள்ளது. இவற்றினை இசைத்தோர் பாணர் எனப்பட்டனர். இவர்களுள் பெண்பாலார் பாணினியார் அல்லது பாடினியார் எனப்பட்டனர். யாழ்க் கருவியின் இசைநலங்களே பிற்கால இசைவல்லுநர் பலரானும் கைக்கொள்ளப்பெற்று வழிமுறைகள் கூறப்பெற்றன. பாணர்கள் என்போர் பேரியாழ் இசைப்போர் பெரும்பாணர் என்றும்,சீறியாழ் இசைப்போர் சிறு பாணரென்றும் அழைக்கப்பெற்றனர். ஆற்றுப் படை எனும் இலக்கியம் பெருவேந்தர், குறுநில மன்னர் முதலானோரைப் பாடும் முறையிருந்தும் பாணர்களை ஆற்றுப்படுத்தும் பெற்றிமையில் பாடுவதையே பழங்காலப் புலவர்கள் பெருமையாகக் கொண்டு விளங்கினர். அத்துணைச் சிறப்பு இசைத்தன்மைக்கும் இசை எழுப்பும் கருவிகளின் தன்மைக்கும் பொருந்தி யிருந்துள்ளது.

சகோடயாழும் அதனை இசைத்த பாணர் மரபும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தில் இருந்தது. நன்கு தெரிய வருகின்றது.தமிழகத்தில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் அரசுச் செல்வாக்கில் எஃகுத் தந்திகள் கட்டிய வீணைக் கருவிகள் வழக்கில் வந்த காலத்து அக் கருவிகள் வேத்தியல் முறையில் நிரம்பப் பயிலப்பெற்றன. பொதுவியல் முறையில் பல்லாயிரம் ஆண்டாக விளங்கிவந்த யாழ்க் கருவிகள் கேட்பாரற்று, செல்வாக்கிழந்து அருகிப் போனதால் எங்கோ அங்குமிங்கும் ஓரிடத்தே மட்டும் இருந்தும் இல்லாததுமாய் வழக்கொழிந்தன என்பர்.

யாழ்க் கருவிகளில் ஒவ்வோரிசைக்கும் ஒவ்வொரு நரம்பு கட்டப்பெறுவது மரபு. வீணைக் கருவிக்கு ஒரு தந்தியைக் கட்டி அதன் இடையே மெட்டுகள் அமைப்பது மரபு. இஃது அடிப்படை எல்லாவகை முறை பலவாற்றானும் அறியுமிடத்து யாழ் வேறு வீணை வேறு என்பதே சிறப்புறத் தெரியவரும்.

யாழ்க் கருவிகளின் பெயர் முறைகளும் பல. கேள்வி, கைவழி முதலிய பழஞ் சொற்களைக் காணலாம். அறிவுடைய மனிதனன்றி விலங்கு பறவைகளும் இசையுணர்வுடையனவாக இருந்துள்ளனவாம். பெரியயானை, யாழோசையின் எல்லையிலே தங்குமாம். குதிரை, இசை கேளட்பின் முனிவு கொள்ளுமாம். யாழே தெய்வம் அன்றி யாழுக்குரிய தெய்வம் மாதங்கி எனப்படும். பன்னிரண்டு இராசிகளிலே மிதுன ராசியானது யாழ் என்னும் பெயரினால் வழங்கப்பட்டு இணை, யாழருவத்தினாலே குறியீடு செய்யப்பட்டதென அறிஞர் கூறுவர் என்றார் விபுலானந்தர்.

புத்துப்பாட்டு எனும் தொகுப்பிலிருந்து நன்கு எடுத்துக்காட்டுகள் மூலம் “பத்தலினையும் பொல்லம் பொத்திய பச்சையாகிய போர்வையினையும் ஆணியினையும், வபறுவாயினையும் மருப்பினையும் திவவினையும் நரம்பின் தொடர்ச்சினையும் காட்சியினையுமுடைய யாழ்“ எனவும் பிறவும் குறித்து “கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்னுந்தோன்றிய சான்றோர் செய்யுட் களினுளிளே வில்யாழும், சீறியாழும், பேரியாழும் குறிக்கப்பட்டிருக்கின்றன. சகோட யாழும், மகரயாழும், செங்கோட்டியாழும் மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் பெருங்கதையிலும், சிந்தாமணியிலும் காணப்படுவ என்று எழுதியுள்ளார். இவ்வாறான குழற்கருவிகளும் யாழ்க்கருவிகளும் முதன் முதல் தந்த ஐந்திசைகளும் ஏழிசைகளும் வருமாறு:

அட்டவணையிற் காட்டிய முதலேழிசை நிரல் களாம். மேற்செம்பாலை, மேசகல்யாணி எனவும்செம்பாலை, ஹரிகாம்போதி எனவும் படுமலைப் பாலை, நடபைரவபி எனவும்: செவ்வழிப்பாலை, ஒரு மேளமாகக் கருதப்படாமலும்: அரும்பாலை, தீர சங்கராபரணம் எனவும்: கோடிப்பாலை, கரஹரப்பிரியா எனவும்: விளரிபபாலை ஹனுமத் தோடி எனவும் பிற்கால இசைநூல் பெயரிடப்பட்டு, தற்காலத்திலும் வழக்கில் இருந்து வருவதை விபுலாநந்தர் நன்கு குறித்துக் காட்டியுள்ளார்.

இசைத் தமிழ்த் தன்மையறிந்த சான்றோர்கள், இசைகள் நிற்கும் ஏழிடங்களையும் பகுதிப்படுத்தியறிந்து (பால்–பகுதி) பாலையெனப் பெயரிட்டு அந்தரம் ஐந்தினையும் பகுதிப்படுத்தியறிந்து சிறுபாலை எனப் பெயரிட்டுக் கணித்தறிந்து பன்னிருபாலையெனக் கொண்டு நன்கே உணர்ந்தறிந்து. பல்வேறு இசைத்தமிழ் நூல்களை இயற்றியிருந்துள்ளனர்.

| | அலகெனப்படும் சுருதிகளுடன் முதலைந்திசைகளும் - முதலேழிசைகளும் | | | | | | | | பண்பெயரும்பாலைப்பெயரும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க ஐந்திசை | தாரம் 0 | குரல் 4 | துத்தம் 8 | □ | உழை 13 | இளி 17 | | ஆசான் திறம்காந்தாரம் மோகனம் |
| க | ஏழிசை | தாரம் 0 | குரல் 4 | துத்தம் 8 | கைக்கிளை 12 | உழை 13 | இளி 17 | விளரி 21 | மேற்செம்பாலை |
| | உ ஐந்திசை | குரல் 0 | துத்தம் 4 | □ | உழை 9 | இளி 13 | தாரம் 18 | | செந்நிறம் செந்துருத்தி மத்ய மாவதி |
| | ஏழிசை | குரல் 0 | துத்தம் 4 | கைக்கிளை 8 | உழை 9 | இளி 13 | விளரி 17 | தாரம் 18 | சேம்பாவை |
| உ | ஞ ஐந்திசை | துத்தம் 0 | □ | உழை 5 | இளி 9 | □ | தாரம் 14 | குரல் 18 | இத்தளம் வடுகு இந்தோளம் |
| ங | ஏழிசை | துத்தம் 0 | கைக்கிளை 4 | உழை 5 | இளி 9 | விளரி 13 | தாரம் 14 | குரல் 18 | படுமலைப் பாலை |
| | கைக்கிளை குரலாய செவ்வழிப்பாலை | | | | | | | | |
| ச | ஏழிசை | கைக்கிளை 0 | உழை 1 | இளி 5 | விளரி 9 | தாரம் 10 | குரல் 14 | துத்தம் 18 | புண்கண்டு திறனெய்தாப் பண் |
| | சு ஐந்திசை | உழை 0 | இளி 4 | - | தாரம் 9 | குரல் 13 | துத்தம் 17 | - | சுதாளி சுத்தசாவேரி |
| ரு | ஏழிசை | உழை 0 | இளி 4 | விளரி 8 | தாரம் 9 | குரல் 13 | துத்தம் 17 | கைக்கிளை 21 | அரும்பாலை |
| | ரு ஐந்திசை | இளி 0 | - | தாரம் 5 | குரல் 9 | துத்தம் 13 | - | உழை 18 | துனாசி சுத்த தனியாசி உதயரவிச் சந்திரிகா |
| சு | ஏழிசை | இளி 0 | விளரி 4 | தாரம் 5 | குரல் 9 | துத்தம் 13 | கைக்கிளை 17 | உழை 18 | கோடிப்பாலை |
| எ | ஏழிசை | விளரி 0 | தாரம் 1 | குரல் 5 | துத்தம் 9 | கைக்கிளை 13 | உழை 14 | இளி 18 | விளரிப்பாலை |

"குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச்
சொன்னார்
களரிசோர் கண்ணுற் றவர்."

எனும் முறையறிந்தே இசையையும், அதனதன் அலகுகளையும் நிறுத்துமிடம் நிறுத்தி, நிரனிறை, எதிர் நிரனிறையாகக் கண்டு பாலைப் பெயர்களைப் பொருண் முறையிலும், இராசி முறைமையிலும் அமைத்து, கற்போர்க்கு இசை நுணுக்கத்தனைத் தெளிவுற உணர்த்தி, பல்வேறு யாழ்க்கருவிகளிலும் எந்தப் பாலை எவ்வாறு அமைக்கப்பெற்றது என்பதையும் விளக்கி,"இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும் எனவும்,பன்னிரு பாலையினுருத் தொண்ணூற்றொன்றும் "பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்று மூன்றாதற்குக் காரணமாம் எனக் கொள்க" என்றுங் கூறிய பெற்றிமையெல்லாம் இசைத்தமிழ்த் தன்மையினையெல்லாம் ஒருங்கே விளக்கும் தன்மையதாகும்.

பண்களையும் பாலைகளையும் பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், முல்லையாழ் எனக் கருவிப் பெயர் கொண்டும் அவைஒவ்வொன்றையும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் எனக் கணித்தும், பாலையும், பண்ணுமாவதற்கு நிலைக்களமான இசைகளை மிகப்பழைய தொன்னூல்களைச் சான்றாகக் கொண்டு ஆதியிசைகள் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்றும் கூறிப்போந்துள்ளனர்.

பெருகக் காணும் அவாவுடையோர் யாழ்நூல் என்னும் பெருநூலிலும் பஞ்சமரபு என்னும் தொன்னூலிலும் யான் எழுதி வருகின்ற சிறு நூல்களிலும் இசைத் தமிழ்த் தன்மை எனுமிவற்றை ஓரளவு உரைநடை வடிவிலேனும் நன்கே படித்துப் படித்து பயின்று அறிந்துணர்வார்களாக.

**பண்ணராய்ச்சி வித்தகர்**
**குடந்தை**
**திரு.ப. சுந்தரரேசனார்**

# இசைக் கூறுகள் ஓர் அறிமுகம்

– ரா.கிரிதரன்

இயல், இசை, நாடகப் பகுதிகளாக பிரிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாமல் இருந்தது இசைப்பாடல்கள்தாம். பாணர்கள், ஞானிகள், கதைசொல்லிகள் அனைவரும் இசையின் ஊடகத்திலேயே செய்தி சொல்லி வந்திருக்கின்றனர். இங்கே இசை என்பது ஒலிகளாலான சத்தம், சந்தம் ஆகும். பலதரப்பட்ட இசை இலக்கண குறிப்புகள் பண்டைய காலத்திலிருந்து நம் வாழ்வு முறையில் கலந்து வந்திருக்கிறது. இருநூறுக்கும் மேற்பட்ட ராகங்களை அமைத்த பெருமை சாரங்க தேவைச் சாரும். இது நடந்தது பதினான்காம் நூற்றாண்டில். இசைத் தமிழ் எனச் சொல்லப்படும் சங்கத்தமிழில் பரிபாடல், தொல்காப்பியம், குறுந்தொகை முதலே தமிழ் இசை பகுக்கப்பட்டு வந்திருக்கிறது.

மாதவி பயன்படுத்திய யாழ் இசைக்கருவியில் 12 சுரங்களை இசைத்திருக்கிறார். சகோட யாழ் என்ற இதில் இரண்டு ஸ்தாயிகள் (Octaves) இசைக்க முடியும். இப்படிப்பட்ட செய்திகளை அடித்தளமாகக் கொண்டு சிலப்பதிகாரம் பின்னப்பட்டிருக்கிறது. கதை கோவலன், மாதவி, கண்ணகி என்ற மூவரைச் சுற்றி வந்தாலும், சிலப்பதிகாரம் தமிழர் வாழ்ந்த அந்தக் காலகட்டத்தைத் துல்லியமாகக் காட்டுகிறது.

இணைகிளை பகைநட் பென்றிந் நான்கி
னிசைபுணர் குறிநிலை யெய்த நோக்கி (சிலம்பு 202)

**இதில் சுர வகைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.**

| | |
|---|---|
| இணை | Harmony |
| கிளை | Branch |
| பகை | Enmity |
| நட்பு | Friendship |

சுரங்களை பகுக்கும்போது காலம், பருவம், சமயம், பொருள் என பகுத்துள்ளனர். இதையே சுரங்களுக்குள்ள உறவுமுறையாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள சுர அமைப்புகளைப் புரிந்துகொள்ள நாம் தமிழிசையை முறையான நோக்குடன் அணுக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நம்நாட்டின் பாரம்பரிய இசைக் கூறுகளை இழந்து, பலதரப்பட்ட இசைவகைகளுக்கு வழிவகுத்திருக்கிறோம். பல நூற்றாண்டுகளாகவே இந்தி வரலாற்றின் வேராக இருக்கும் இசையை, அதன் அடித்தளத்திலிருந்து பிரித்து விட்டோம். இன்று அதன் பாதிப்புகளைப் பார்க்கையில் குழப்பமே மிஞ்சுகிறது. அவற்றில் பெரும்பான்மையானவற்றை நம் பழங்கால இலக்கியம், பெருங்காப்பியங்கள் வழியாக சுலபமாக நிறுவமுடியும். சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளவையே பல கேள்விகளுக்கு பதிலாய் அமையும். பண்டைய காப்பியங்கள் கூறுவது என்னென்ன? தமிழர் வரலாறும், அவர்தம் வாழ்வு முறை மட்டுமே. சமய மாற்றங்கள், பக்தி இலக்கியங்களினால் இந்த இசை பாரம்பரியம் இன்னும் தழைத்தது என்றே குறிப்பிடவேண்டும்.

## இசை பற்றிய மீள்பார்வை

இன்றைய காலகட்டத்தில் முறையான பழங்கோப்புகள் இல்லாத காரணங்களினால், பல காப்பியங்களை மீள்பார்வை பார்க்க வேண்டிய கட்டாயத்திலுள்ளோம். அவரவர் வசதிக்கேற்ப இதைச் செய்யலாம். இசை கூறுகள், மொழி மாற்றங்கள், பக்தி ஒழுங்கியல், மனிதர்கள் வாழ்வுமுறை, அரசு அதிகாரம் என்ற பல தலைப்புகளில் நாம் பழைய இலக்கியங்களை ஆராய முடியும்.

இன்று ஜாஸ், ஹிந்துஸ்தானி பாணி, ஒத்திசைவு போன்ற புதிய இசைக்கூறுகளின் தாக்கத்தில் கர்நாடக இசையும், கிராமிய இசையும் தங்கள் தனித்தன்மையை ஊர்ஜிதம் செய்தால் மட்டுமே நிலைத்து நிற்கும் என்ற நிலை இப்போதுள்ளது. இது எந்த இசைப் பாங்கி ற்கும் கெடுதல் அன்று. எந்த ஒரு நாகரிகத்திலும் இசைக்கான அணுகுமுறை ஒரே மாதிரிதான் இருந்திருக்கிறது, ஆரம்ப கட்டத்தில் அதன் தனித்தன்மையை கன்னித்தன்மை போல் போற்றுவதும், காலம் மாறும்போது மற்ற கலாசார தாக்குதலால் சில ஒழுங்கீனங்களை ஒத்துக்கொள்வதும் நடப்பவைதான். இப்படிப்பட்ட இந்த நேரத்தில் இசை கூறுகளை அதன் வேரிலிருந்து மீள்பார்வை பார்ப்பது அவசியமாகிறது. அதில் முனைப்பாக இருப்போருக்கு பல கேள்விகளே முதலில் மிஞ்சும்.

அ. இன்று கர்நாடக இசையை தமிழிசை எனச் சொல்லலாமா. இவற்றிற்கான

தொடர்பென்ன? இதை அனுபவிக்கும் அதே பாணியில் மற்ற இசையை ரசிக்க முடியுமா?

ஆ. கருணாமிர்த சாகரம் என்ற புத்தகத்தின் வழியே அபிரகாம் பண்டிதர் நிறுவியது என்ன? அதிலுள்ள இசைக் கூறுகளை இன்று எவ்விதம் பார்க்க முடியும்?

இ. ஐரோப்பா இசை, ஆப்ரிக்க இசை போன்றவற்றுடன் தமிழிசையை ஒப்பிட முடியுமா? இதில் எந்த ஒன்றாவது மற்றதின் வளர்ச்சியை தொடர்ந்ததா?

ஈ. தமிழிசையின் அடிப்படை கூறுகள் என்னென்ன? அவற்றை ஹிந்துஸ்தானியிலிருந்து பிரித்துப் பார்க்கலாமா?

மிக மிக உயரமான விமானப் பார்வையிலிருந்து இவற்றை வரும் பகுதிகளில் ஆராயலாம். அடிப்படை நோக்கம் சங்கத்தமிழ் காப்பியங் களிலிருந்து சில முக்கியமான இசைச் செய்திகளை சேகரிப்பது. அதிலிருந்து சில அனுமானங்களையும், இசைத்தமிழின் வேர்களை இன்றைய இசையிலும் தேடிப் பார்ப்பதுமே ஆகும். எந்த விதமான வரலாற்றுப் பார்வையைப் போல இதிலும் பல திரிபுகளும், முழுதும் உண்மை தெரியாத சமயங்களும் வரக்கூடும். அபிப்பிராய பேதம் இன்றி அவற்றை பகுக்க முயலலாம்.

## இசையைக் கேட்பது எப்படி?

இது ஓர் ஆதிகாலத்து கேள்வி. இசையை ரசிக்க அதன் இலக்கணம் புரியத் தேவையில்லை. ஆனால் இசையில் ரசித்த பகுதிகளை ஏன் பிடித்தது எனக் கேட்டால் “இனிமையாக இருந்தது“, “தாளம் போட வைத்தது“, “டான்ஸ் ஆட வைத்தது“ போன்ற வார்த்தைகள்தான் வருமே தவிர, அதன் நிஜக் காரணங்களை அறியவது கடினம். திரைப்பட பாடல்கள் வேறுவகை. மெல்லிசையைச் சார்ந்த இது பாடல் வரிகளுக்கு முக்கியத்துவம் அதிகமாக கொடுத்துவரும் துறை. இதனாலேயே பாடல் வரிகள் பிடித்துவிட்டால், பாடத்தோன்றும் இசை வடிவம்.

பொதுவாகவே இசைக்கேட்பதை மூன்று வகைப்படுத்தலாம் ஒலிக்காகக் கேட்பது, அதன் உணர்வுகளுக்காக கேட்பது, அழகியல் புரிந்ததினால் கேட்பது.

நாம் எல்லோரும் பொதுவாக ஒலிக்காக கேட்கும் ஜாதி. அடிப்படையில் நாம் இசையைக் கேட்கும்போது சுலபமாக பாடக்கூடிய பகுதிகளையே விரும்புவோம். இது மனிதனின் ஆதார குணம். குழந்தை நாம் பேசுவதைக் கேட்டாலே, தானும் பேச முற்படுவதுபோல் நமக்கு பாடகர்கள் பாடும் வரிகளையோ, இசையையோ முணுமுணுக்கத் தெரிந்தால் அந்த இசை நமக்கு பிடித்துவிடும். சுலபமாக விளக்க எம்.எஸ். சுப்புலட்சுமி அம்மையார் பாடிய பாடலையும், எந்தத் தமிழ் திரைப்பட பாடலையும் கேட்டுப் பார்க்கலாம். நம்மில் பலர் முதலாவதை கேட்டு முடிக்கக் கூட மாட்டோம். இது முதல் ரக ஆசாமிகள்.

உணர்வுகளுக்காக கேட்பது பக்தி பாவத்தை அடிப்படையாகக் கொண்டாலும், சமூகப் பாடல்ஃஇசை வடிவத்திலேயே அதிக கவனம் பெற்றது. பாரதியார், பாரதிதாசன் பாடல்களை கர்நாடக ராகத்திலோ, திரைப்படங் களிலோ (காக்கைச் சிறகினிலே நந்தலாலா) கேட்பது இந்த சமூகஃ விடுதலை உணர்வு போன்றதினால்தான். இந்த வகை இசை நம்மில் இருக்கும் உணர்வுகளுக்கு வடிகாலாகவோ அல்லது அதை மீட்டெடுத்து வருவதால் உண்டாகும் அனுபவத்தையோ பொருத்து நம்மில் நிலைக்கும். சோகம் , காதல், சின்ன வயது ஞாபகங்கள் இசை வடிவம் கொள்வது இப்படிப்பட்ட இசையா லேயே. இது இரண்டாம் ரகம்.

மூன்றாவது ரகம் இசையை அதன் இலக்கணத்திற்காகவும், அழகியல் (aesthetics) அனுபவத்திற்காகவும் கேட்பவர்கள். இவர்களை எளிதில் அடையாளம் காணலாம். நமக்கு புரியாத இசையை விடாப்பிடியாகக் கேட்பவர்கள் ! இந்த வகையில் இசையைக் கேட்க இசை கூறுகள் பற்றிய விவரங்கள் தெரியவேண்டியதுள்ளது. ராகம், தாளம், கர்நாடக சங்கீத இசையை மெல்லிசையில் எங்கே நுழைத்துள்ளனர் போன்ற கேள்விகளை சதா கேட்டுக்கொண்டேயிருப்பவர்கள். இவர்களுக்கு இசை அனுபவம் ஒரு புதிர் போல. அக்கு, ஆணியென இசையை பிரிப்பதில் இன்பம் காண்பவர்கள். ஆனால் இந்த ஞானம் மட்டும் இசையை ரசிக்க வைக்காது, அதன் லயத்திலும் சஞ்சாரப்பட்டு அனுபவிப்பதே இசைக்கு செய்யும் உண்மையான சேவையாகும். இது மூன்றாவது ரகம்.

இத்தொடரில் தமிழிசைக்கான கேள்விகளை பற்றி விவாதிக்கும் அதே வேளையில், எந்த ஒரு நிலையிலிருந்தும் மூன்றாம் ரக இசை அனுபவத்தை அடைவதே நம் நோக்கமாகும்.

## தாளம் மற்றும் ஸ்வரம்

தென்னக இசை நான்கு முக்கிய இலக்கணங்களின் மேல் நிற்கும் யானை போன்றது. சுரம், தாளம், சுருதி, ஸ்தாயி. பொதுவாகவே நம் இந்திய இசை தனிச் சுரங்களால் ஆனவை. இந்த நான்கும் இசையமைப்பாளரின் முக்கிய பொருட்களாகும். மர நாற்காலி, மேஜை செய்யும் தச்சன் மரம், ஆணி போன்றவற்றினால் ஒரு கட்டமைப்பை உருவாக்குவதுபோல் இசையமைப் பாளர் இந்த நான்கையும் பயன்படுத்துவர்.

நாம் கேட்கும்போது இவை எதுவும் தனித்து நிற்காது. தாளம் அடித்தளமாக அமைய, சுரங்கள் அணிவகுத்து நடைபோட, பாடல் ஸ்தாயி மேலும் கீழும் பயனிக்க இசை என்னும் சம்மேளனம் நடந்தேறும். ஒன்றை தனியாக கவனிக்கத் தொடங்கினால் மற்ற மாற்றங்களை கவனிக்கத் தவறிவிடுவோம். இவை அனைத்தும் சேர்ந்த விளைவே விவரிக்க இயலாத கூட்டு ஒலியே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய சங்கதியாகும்.

நம்மைப் போன்ற சாதாரண இசை ரசிகர்களுக்கும், இந்த அடிப்படை ஞானமிருந்தால் ஆழமான இசை அனுபவத்தை பெற முடியும். இதைப் பற்றி நுணுக்கமான விவரணைகள் இசை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு வேண்டு மானால் முக்கியமாக இருக்கலாம், நம்மை போன்றோருக்கு தேவையான அளவு புரிந்தால் போதுமானது.

## தாளம்

பல கலாசாரங்கள் வெவ்வேறு விதமாகத் தோன்றினாலும், அவை அனைத்தும் ஒத்துக்கொள்ளும் விஷயம் ஒன்றிருக்கிறது. அது இசை தொடங்கிய முதல் நேரம். தாளம் என்னும் அமைப்பினாலேயே இசை தொடங்கியதாக கூறுகின்றனர். இதற்குச் சாட்சியாக இந்திய இசை, ஆப்ரிக்க இசை, ஐரோப்பா

இசை என பல கலாசார இசை வடிவங்களிலும், தாளமே மிகப் பழமையான சங்கதியாக இருந்து வந்திருக்கிறது. இதற்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், நம் உடம்பினுள் இருக்கும் தாள அமைப்பே, ஆதி காரணமாகும். நம் இதயத் துடிப்பு மிகத் துள்ளியமான தாள அமைப்பை அதனுள் வைத்திருக்கிறது. அடுத்து நம் உடம்பு அமைப்பினால் அமையும் சீரான நடை, சமச்சீர் விகிதத்தில் கண்ணாடி பிம்பம்போல் இருக்கும் உடம்பின் இரு பகுதிகள் என அனைத்தும் தாள கச்சிதங்களே ஆகும்.

தாள அமைப்பை நாம் குறியீட்டு பாஷயில் எழுதத் தொடங்கி பல நூற்றாண்டுகள் ஆகின்றன. தென்னக இசையாகட்டும், ஐரோப்பா இசையாகட்டும் இந்த குறியீட்டு வடிவத்தில் முதலில் தோன்றி இன்றளவும் கச்சிதமாக இருப்பது தாளம் மட்டுமே. தென்னக இசையில் துருவம், திரிபுடை,ரூபகம்,ஜம்பை, ஏகம், மட்டியம், அட என ஏழு தாளங்கள் உள்ளன. இதில் நாம் கர்நாடக சங்கீதத்தில் ரூபக தாளம் மிகப் பரவலாக கேள்விப்பட்டிருப்போம்.

ஒவ்வொறு தாளத்தையும், ஐந்து வகையாகவும் பிரித்தனர். திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம். ஆக, முப்பத்தைந்து தாள வகைகள் நம் தென்னக மரபின் புழங்கி வந்திருக்கின்றன.

சரி தாளம் என்றால் என்ன? தாளம் இசையை நேர பகுப்பின் படி பிரிக்கும் ஒரு விதியாகும். உதாரணத்திற்கு, ராணுவ மற்றும் என்ஸிஸி அணிவகுப்புகளில் இருக்கும் ஒற்றுமை தாள அடிப்படையிலேயே அமைந்திருக்கும். டுநுகுவு, சபைாவ, டுநுகுவு, சபைாவ, ழுநே, வறழ, ழுநே, வறழ என அணிவகுப்பு செல்வதைப் பார்த்திருப்போம். டுநுகுவு என்றபோது வலது காலையும், சபைாவ என்றபோது இடது காலையும் முன்னகர்த்தி செல்வோம். இதன்மூலம் நாம் இருவகை இயக்கங்களை ஒரே நேரத்தில் செய்கிறோம். அப்படி செய்யும்போதே ஒரு ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் நிகழ்கின்றது. இதைப் போன்று தொடந்து செய்து வந்தால் இரு பகுதிகளாக மட்டுமே பிரிக்க முடியும். ஒரே போன்ற இசை அமைப்பு மட்டுமே உருவாகியிருக்கும்.

இந்த தாள அமைப்பை பலவித வேகங்களுக்கு ஆட்படுத்தும் போது தான்

நமக்கு பல வடிவங்களிலும், உணர்வுகளிலும் இசை கிடைக்கின்றது. ஹத க தி மி ஹ என மெதுமாகச் சொல்வதற்கும், அதையே வேகமாக சொல்வதற்கும் நம் இயக்கங்களில் மாற்றங்கள் நடக்கும். தென்னக இசை என்றைக்கும் நாடகத்திற்கு, அதன் நடன ஆகிருதிகளுக்கும் பெரிய உறுதுணையாகவே இருந்திருக்கிறது. அதனால் முதல் சங்கம் வரை தொல்காப்பியம் போன்ற நூல்களில், இசையையும் நாட்டியத்தையும் பிரித்து பார்த்ததாக விவரங்கள் கிடையாது. இசை என்றபோதே நாட்டியம், நாடகம் போன்றவையும் வரையறுக்கப்படும். தாள வேகத்தில் நாடகம் மற்றும் நாட்டியம் பெரிய மாறுதல்களைக் கொண்டுவந்தது.

பொதுவாக தாளத்தை நம் உடம்பின் அசைவுகளோடும், இயக்கங்களோடும் ஒப்பிடுவர். அவர் நடை சீரான தாளம் போன்று இருந்ததுஹ, ஹமெல்ல மெல்ல நடந்து வந்தாள்ஹ. இந்த வாக்கியங்களில் ஹமெல்ல மெல்லஹ என்பது உடலியக்கத்தின் வேகத்தை சீராக காட்டுவதற்காக எழுதப்படுவது. இப்படி நகர்தல் இயக்கத்தை சித்தரிப்பது தாளம்.

## சுரவரிசைகள்

ஏழு சுரங்கள் இருப்பது நமக்குத் தெரிந்ததே. அவற்றின் முழு பெயர்கள்:

ஸ ஷட்ஜம்
ரி ரிஷபம்
க காந்தாரம்
ம மத்யமம்
ப பஞ்சமம்
த தைவதம்
நி நிஷாதம்

இவை கர்நாடக இசைக் கூறுகளில் முக்கியமாக வகிக்கின்றது. இந்த ஒவ்வொரு சுரமும் ஒரு ஒலியமைப்பே ஆகும். இவற்றிற்கு தனி அலைவரிசை உண்டு. நமது ஸ ஐரோப்பா இசையில் ஆனைனடந ஊ என்றழைக்கப்படும் அலைவரிசையுடன் ஒத்துப்போகிறது. இதே போல் பண்டைய காலத்தில் தமிழிசையிலும் இதற்கான சமமான ஒலி அலைவரிசைகளை பகுத்துள்ளனர். அவை:

ஸ குரல்

ரி துத்தம்

க கைக்கிளை

ம உழை

ப இளி

த விளரி

நி தாரம்

இதைச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில்:

குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங்

குரையா வுழையிளி நான்கு–விரையா

விளரியேனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்

களரிசேர் கண்ணுற் றவர்

மிகக் கச்சிதமாக அந்தந்த சுரங்களின் மாத்திரைகளுடன் வருகின்றது. இந்த ஏழு சுரங்களில் ஸ, ப ஆகிய இரண்டும் ப்ருக்ருதி ஸ்வரங்கள் எனக் கூறப்படும். அதாவது இவை மாறுதல் இல்லாத சுரங்கள். அப்படியென்றால் என்ன? ஸ மற்றும் ப சுரங்கள் முழுமையான சுரங்கள் இதன் அலைவரிசையில் சற்று கீழோ, அல்லது மேலோ மாறுதல் இருக்கும் போது அடுத்த சுரத்திற்குத் தாவிவிடும். சுரஸ்தானத்தில் ஒரே ஒரு ச, ப மட்டுமே இடம்பெற முடியும். இந்த சுரங்களில் இருக்கும் அலைவரிசை அல்லது அசைவு எண்கள் (Frequency Hz) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | நி | க | ம | ப | த | நி | ச் |
| 240 | 256 | 300 | 320 | 360 | 384 | 450 | 480 |

ஆரோகனம் சுரங்கள் மற்றொன்றைவிட அதிகரித்துச் செல்லும்போது ஆரோகனம் என்று பெயர். தமிழிசையில் இதற்கு ஏறுநிரல் எனப் பெயர்.

சரிகமபதநிச

அவரோகனம் சுரங்கள் ஒன்றுக்கொன்று குறையும்போது அவரோகனம்

என்று பெயர். தமிழிசையில் இதற்கு இறங்கு நிரல் எனப் பெயர்.
அவரோகனம் ச நி த ப ம க ரி ச

இதுவே ஒரு சுரஸ்தானம் (Octave) ஆகும். இப்படி ஏற்ற இறக்கங்களோடு இருக்கும் சுரக் கோர்வையை ராகம் என்பர்.

## ரஸபாவம் ராகம்

இந்திய இசை அமைப்பில் மிக முக்கியமான அம்சம் ரஸபாவம். ஒரே ஒரு ராக ஆலாபனையை பல மணிநேரங்கள்கூட செய்ய முடியுமென்றால் அதற்கு ரஸபாவமே காரணம். ஆரோகனம்,அவரோகனம் என ஏறி இறங்கும் சுரக்கோர்வை, மீண்டும் மீண்டும் மாற்றங்களுடன் பாடும் சுரங்கள் என அலைபோல இருக்கும் இசை வடிவம் இந்திய இசையின் அடிநாதம். ஏற்ற இறக்கங்கள் இல்லாத இசை கோர்வைகளே இருக்காது. தட்டையான வடிவத்தில் இந்திய இசையில்,குறிப்பாக கர்நாடக இசையின் எல்லைகளைத் தொட முடியாது கொஞ்சம் கொஞ்சமாக சுரங்களை பின்னிப்பின்னி ஒரு சுரமாலையைக் கட்டுவர். அவை கொள்ளும் வெவ்வேறு வடிவங்களே ராகமாகும். பல ராகங்களை ஒன்றாய் வரிசையாகப் பாடுவது ராகமாலிகா எனப்படும். நம் கர்நாடக இசை ராகங்களை அடிப்படையாகக் கொண்டதனால், வடிவத்திலும் கட்டமைப்பிலும் அவற்றை மீற முடியாது.

ஒவ்வொறு ராகத்திற்கும் சில ரஸங்களுண்டு. ரஸங்களை நாம் அழகியலோடு ஒப்பிட முடியும். காலை ராகம், மாலை ராகம், கோபம் ,அழுகை , சிரிப்பு போன்ற உணர்ச்சிகளையும் ராகத்திற்கான அர்த்தங்களாய் கொள்ளலாம். காலப்போக்கில் இந்த அர்த்தங்கள் அழிந்து வந்தாலும், இன்றும் திரைப்படங்களில் மெல்லிசை பாடல்கள் அந்தந்த உணர்வுகளை மீட்கவே ராகங்களின் அடித்தள அர்த்தங்களைக் கொண்டு எழுதப்படுகின்றன.

அடிப்படையில் கர்நாடக சங்கீதம் பக்தி பாவத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துவந்துள்ளது. இதற்கு மும்மூர்த்திகள் ஒருகாரணாயிருந்தாலும், அடிப்படையில் கர்நாடக சங்கீதத்தின் சாரம் வேதங்களிலும், உபநிஷத்துகளிலும் இருப்பதாய் கூறுகின்றனர். இதன் உண்மையை பற்றி ஆராயாமல், பக்தி பாவத்தின் ஒருங்கிணைப்பை கர்நாடக சங்கீதத்தில் பார்க்கலாம். தென் இந்தியாவில் இசை, குறிப்பாக கர்நாடக இசை ஒரு ஒலி வடிவமாய் மட்டும்

இல்லை. பல நூற்றாண்டுகளாக நடனத்திற்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. சாத்தனார் இயற்றிய கூத்த நூலில் நாட்டியத்திற்கான அடிப்படை விளக்கப்பட்டுள்ளது. ஒன்பது பகுதிகளைக் கொண்ட கூத்த நூலில் 108 தாளங்களும், சுவை மற்றும் தொகை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. பரதரும் நாட்டிய சாஸ்திரத்திற்கு அடிப்படை நூலை எழுதியுள்ளார்.

இவை இரண்டிலும் இருக்கும் ஒரு பொதுத்தன்மை இசைக்கும் நாட்டியத்திற்கும் இருந்த தொடர்பு. இசை உணர்த்தக்கூடிய ரஸங்களை, கேட்பவர் தன் மனதில் மட்டும் வடிவமைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், பார்வையாலும் அதை உணர முடியும். கோபம் / சிரிப்பு / காதல் / பக்தி போன்ற உணர்வுகளை நாட்டியக் கலைஞர்கள் தங்கள் அவயங்களால் நிகழ்த்துவர். ஒலி நிகழ்த்தும் இந்த உணர்வு பரிமாற்றம், நம் நடனக் கலைஞர்களுடன் சேர்ந்து கண்களுக்கும் விருந்து படைக்கும்.

கர்நாடக சங்கீத கட்டமைப்பிற்குள், ராகம் மற்றும் தாளம் இன்றியமை யாதவை. முதல் முறை கேட்கும் போது சம்பந்தமேயில்லாத இசை வடிவம் போல காட்சியளிக்கும். ஒரே மாதிரியான சுரங்களை ஒப்பிப்பதும், ராக ஆலாபனை என சுரங்களை நீட்டி முழக்குவதும் கேட்பதற்கு வித்தியாசமாகவே இருக்கும். ஒத்திசைவு வடிவம் போல பல வாத்தியக் கருவிகள் கிடையாது, ஏற்ற இறக்கங்களை சீரான வேகத்திலோ கால அளவிலோ கணக்கெடுக்க முடியாது, மிக நுண்ணிய "ம்ருகா" எனச் சொல்லப்படும் வேகமான ஏற்ற இறக்கங்கள் புரியாது. எப்படி கர்நாடக சங்கீதத்தை அணுக முடியும் / கேட்க முடியும்? இதற்கு ராகங்களைப் பற்றி சிறு எளிய விளக்கம் தேவை.

## இராகங்கள் பற்றிய எளிமையான விளக்கம்

ராகங்கள் வரிகளைப் போன்றவை. ஒரு வரியை எழுத எப்படி நமக்கு இலக்கணம் தெரிந்திருக்க வேண்டுமோ, அதேபோல் ஒரு ராக அமைப்பிலும் இலக்கணம் உண்டு. ஒரு வரியை நம்மால் எப்படியும் எழுத முடியாது. அதற்கான சரியான வார்த்தைகள் வேண்டும். இந்த வார்த்தைகளே ச முதல் நி வரையான

சுரங்கள். ஏழே வார்த்தைகள். இந்த ஏழு வார்த்தைகளைக் கொண்டு எத்தனை வரிகள் (ராகங்கள்) எழுத முடியும் ? எண்ணிலடங்கா.

ராகத்திற்கான இலக்கணம் போல, அதைப் பாடவும் ஒரு கட்டமைப்பு உள்ளது. ராகத்தில் நான்கு பகுதிகள் உண்டு.

ஆலாபனை மெதுவாக, அதே சமயம் கால வரையறையற்ற அமைப்பு.
ஆரோகனம் ஏறு முகத்தில் இருக்கும் சுர வரிசை.
அவரோகனம் இறங்கு முகத்தில் இருக்கும் சுர வரிசை.

ஆரோகனம் மற்றும் அவரோகனத்தில் எல்லா சுரங்களும் இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஒரு ராகத்தில் எல்லா சுரங்களும் அதே வரிசைப் படி இருந்தால் அது சம்பூர்ண ராகம் என்று பெயர்.

ஆலாபனை மிக முக்கியமானதொரு பகுதி. இந்தப் பகுதியில் பாடகர் தான் பாட இருக்கும் ராகத்தின் வளைவு நெளிவுகளில் வளம் வருவார். பல சமயங்களில் அதிகமான நேரம் ஆலாபனை செய்ய செலவாகும். ஒரு பாடலுக்கு நேர்த்தி சேர்ப்பது ஆலாபனையே. சுரவரிசை மற்றும் சுர சஞ்சாரங்களில் பவனிவரும் பாடகர், கேட்பவர்களை ஒரு பயணத்திற்கு கூட்டிச் செல்கிறார். அந்தப் பயணத்தில் சுரங்கள் ஏறும் இறங்கும், ஒரே சுரத்தில் பல மணிநேரம் கூட சஞ்சாரிக்க முடியும். வேகவேகமாய் உச்சாணியில் ஏறி சுரத்தை நிறுத்தமுடியும். இறங்குவது பாடகருக்குத் தோனும் கால அளவுக்குள் கொண்டு வர முடியும். பாதி அவரோகனத்தில், மீண்டும் ஏறு முகத்தில் பயணிக்க முடியும்.

இதைப் போல பல சாகசங்கள், யுத்திகளையும் பாடுபவர் கையாள்வார். அப்படி பாடும்போது கேட்பவர்களை ஒரு விளையாட்டில் இழுத்துவிடுகிறார். அந்த விளையாட்டில் மயங்கவைப்பதே ரஸபாவத்தின் செயலாகும்.
இப்படி அடுக்கடுக்காக கட்டப்பட்ட ஆலாபனை என்னும் சுவற்றை சுரவவரிசையால் கடப்பர். சுரங்களை இந்த விதத்தில் பாடும்போதே அவற்றின் உணர்ச்சியும் வெளிப்படும். ஒரு ராகத்தின் உணர்வை இப்படி தக்கவைப்பதில் ஆலாபனைக்கு மிகுந்த பங்குண்டு.

ராகங்களை வகைப்படுத்த கடபயாதி திட்டம் என்ற அமைப்பு உள்ளது. கடபயாதி திட்டம் குறித்த அடுத்தப் பகுதியில் பார்க்கலாம். அதற்கு முன்னர் ஒரு தாய் ராகத்திற்கான இலக்கணத்தைப் பார்ப்போம்

அ. ஆரோகணத்திலும், அவரோகணத்திலும் ஏழு சுரங்களும் வர வேண்டும்.

ஆ. அந்த ஏழு சுரங்களும் வரிசையாக இருக்க வேண்டும் (ச,க,ம,ரி என இருக்கக் கூடாது)

இ. ஆரோகண சுரமும் அதன் இடமும் அவரோகணத்திலும் இருக்க வேண்டும்.

இதைப் போல 72 தாய் ராகங்கள் உள்ளன.

## மேளகர்த்தா ராகங்கள்

எல்லாவிதமான ராகங்களும் ஜன்ய (தாய்) ராகங்களை அடிப்படை யாகக் கொண்டவை. ஹிந்துஸ்தானி இசை பாணியில் இதை "தாட்" எனக் கூறுவர். இந்த "தாட்" களிலிருந்து பலவிதமான ராக அமைப்புக்களை ஹிந்துஸ்தானி இசை பெற்றுள்ளது. மொத்தம் பத்துவகையான தாட்களே இருந்தாலும், நம் கர்நாடக இசையில் 72 தாய் ராகங்கள் (மேளகர்த்தா ராகங்கள்) இருக்கின்றன.

அடிப்படையில் ஸ்வர வரிசையின் பல வடிவப் பிணைப்புகளே இந்த மேளகர்த்தா ராகங்களாகும். இந்த மேளகர்த்தா ராக சூத்திரத்தை அறியுமுன், நாம் சில அடிப்படைகளை நிறுவ வேண்டும். ஸ்வர வரிசைகளில் ஏன் ஏழு ஸ்வரங்களே இருக்கின்றன என்பது பல இசை வல்லுனர்களைக் குழப்பிய படியே உள்ளது. இதற்கான காரணத்தை நவீன கணிதம் மற்றும் இயற்பியல் சார்ந்த அலைக் கோட்பாடுகளின் (wave theory) படி ஆராய முடியும். ஆனாலும், பண்டைய காலத்தில் இதற்கான அடிப்படையை எப்படிக் கண்டடைந்தார்கள் என்பது இன்றளவும் ஆச்சர்யமாக இருக்கிறது.

ஸ்வரங்களின் ஒலியை குறிப்பிட்ட நுண்ணலைகளாக (அலைவரிசை) பிரிக்க முடியும். இயற்பியலில் மனித காதுகளால் வித்தியாசத்தை உணரக்கூடிய அலைவரிசைகள் என்று ஒரு பாகுபாடு உள்ளது. நம்மால் கேட்கக்கூடிய அலைவரிசை 16 ஹெர்ட்ஸ் (உண) முதல் 16, 384 ஹெர்ட்ஸ் வரை மட்டுமே. இதற்குள்ளாகவே நம்மால் ஒலியை உணர்ந்து, பகுக்க முடியும். குறிப்பாக 240 ஹெர்ட்ஸ் முதல் நம் காதுகளால் அலைவரிசை மாற்றங்களை நன்றாக உணர

முடியுமென விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆக, 240 ஹெர்ஸ் என்பதை நம்முடைய முதல் ஒலிக்கான அலைவரிசையாகக் கணக்கிடலாம். இதன் மூலம் ஹார்மானிக்ஸ் (Harmonics) எனப்படும் மற்ற அலைவரிசைகளைக் கணக்கிடமுடியும்.

இயற்பியலின் படி ஒவ்வொரு அலைவரிசையும் பலதரப்பட்ட ஹார்மானிக்ஸ்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தையும் நம்மால் உணர முடியாது. Fourier Series எனப்படும் கணித இயலின் படி இதைக் கண்டறிய முடியும். ஆனால், நம் காதுகளால் இந்த அனைத்து விதமான ஒலிகளின் அலைவரிசையின் வித்தியாசத்தை உணர முடியாது. நம் காதுகள் ஒலியை மற்ற ஒலிகளோடு ஒப்பிடும்போது அதன் அலைவரிசை மூலமே வித்தியாசப்படுத்த முடியும். ஒரு ஒலியமைப்பானது மற்றொன்றைவிட இரு மடங்கு அதிகமான அலைவரிசையில் இருக்கும்போது நம் காதுகளுக்கு ஒன்றாகவே இருக்கும். இதனாலேயே நாம் Octaves எனக் கூறுவது அடிப்படை அலைவரிசைக்கும் அதைவிட இரு மடங்கு அதிகமாக இருக்கும் அலை வரிசைக்கும் இடையே இருக்கும் ஒலிகளே ஆகும். அதாவது 240 ஹெர்ட்ஸ் முதல் 480 ஹெர்ட்ஸ் வரை.

நாம் முன்னரே பார்த்த படி, நம் காதுகளால் வித்தியாசத்தை உணரக்கூடிய ஒலியமைப்புகள் harmonic series இல் அமைவதாய் இருக்கும். 240க்கும் அடுத்த ஒலிநிலை இருப்பது Geometric progression என்ற விதிப்படி வகுக்கப்பட்டுள்ளது. இதனாலேயே ச முதல் நி வரை இருக்கும் ஒலியமைப்பு இவ்விதமாக அமைகிறது:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *ச* | *ரி* | *க* | *ம* | *ப* | *த* | *நி* | *ச:* |
| *240* | *256* | *300* | *320* | *360* | *384* | *450* | *480* |

*சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் பின்வரும் பாடல் உள்ளது*

*"ச ரி க ம ப த நி யென்று ஏழெழுத்தால் தானம்*
*வரிபரந்த கண்ணினாய் வைத்துத் தெரிவரிய*
*ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்*

சூழ்முதலாம் சுத்தத் துளை"

ஏழு சுரங்களுக்கு தமிழிசையில் போடப்பட்ட நமக்கு கிடைத்த முதல் வாக்கியங்கள் இவையே. ச–ப வரிசையை குரல்–இளி என தமிழிசையில் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

அகநிலைக்குரிய நரம்பின திரட்டி
நிறை, குறை கிழமை பெறுமென மொழிப.

மேற்கூறிய சிலப்பதிகார வரிகள்படி, சுர வரிசையை குறை, நிறை எனப் பகுத்துள்ளனர் எனத் தெரிகிறது. அதாவது கீழே உள்ள பட்டியல் படி, சுரங்களை குறை, நிறையென 12 சுரங்களாய் வகுத்துள்ளனர். ஆங்கில எழுத்துக்கள் மூலம் சுலபமாக இவற்றைக் குறிக்க முடியும்.

ச ஷட்ஜம் குறை, நிறை கிடையாது ஞ

ரி சுத்தரிஷபம் –குறை சு2
ரி சதுசுருதிரிஷபம் நிறை. சு3

க சாதாரண காந்தாரம் –குறை பு2ஸ்ரீ சு3
க அந்தரகாந்தாரம் நிறை பு3

ம சுத்தமத்யமம் குறை –ஆ1
ம பிரதிமத்யமம் நிறை ஆ2
ப –பஞ்சமம் ீ
த சுத்த தைவதம் குறை னு1
த சதுசுருதி தைவதம் நிறை னு2ஸ்ரீமே1

நி கைசிகி நிஷாதம் குறை னு3ஸ்ரீமே2
நி காகலி நிஷாதம் நிறை– மே3

இதில் ச–ப எனும் ஒலி நிலைகளில் நிறை/குறை நிலைகள் கிடையாது. ஷட்ஜம் முதல் நிஷாதம் வரையிலான சுரக்கோர்வையை ஸ்தாயி எனக்கூறுவர்.

தமிழிசை மரபில் இதற்கு மண்டிலம் என்றும் பெயருண்டு.

“வட்டம் என்பது வகுக்கும் காலை
ஓர் ஏழ் தொடுத்த மண்டிலம் ஆகும்“

*சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை.*

முதல் மண்டிலத்தின் அலைவரிசை 240 ஹெர்ட்ஸ் எனக்கொண்டால், இரண்டாவதை 480 ஹெர்ட்ஸ் எனப் பண்டைய தமிழிசையில் கண்டு பிடித்துள்ளனர். இதற்கு இரட்டித்த குரல் என்றும் பெயர்.

இப்படியாக ஏழு சுரங்கள் பன்னிரண்டாகப் பிரிவது போல், இந்தப் பன்னிரண்டும் நுண்ணிய சுரங்களாய் இருபத்திரண்டு ஆகப் பிரிக்கலாம். ஆபிரகாம் பண்டிதர் போன்றோர் சங்க கால இலக்கியங்கள் மூலம் இதனை நிரூபித்துள்ளனர். இதுவரை நாம் பார்த்தவை மேளகர்த்தா ராக அமைப்புக்கு அடிப்படையாகும்.

## மேளகர்த்தா ராகம் அமைப்பு

மேளகர்த்தா ராக அமைப்புகளை அடைய, சில அடிப்படை விதிகள் உள்ளன.

1. ஒவ்வொரு தாய் ராகத்திலும், எல்லா சுரங்களும் இருத்தல் அவசியம்.
2. ஆரோஹணம் (ஏறுநிரல்), அவரோஹணம் (இறங்குநிரல்) இவை இரண்டிலும் சுரங்கள் வரிசைப்படி இருக்க வேண்டும்.
3. மேல் ச, கட்டாயம் இருத்தல் வேண்டும்.

ஆக, கண்டிப்பாக ஒரு ச, ப இருத்தல் வேண்டும். இரண்டு “ம“க்களில் (மத்யமம்) ஒன்றாவது இருத்தல் வேண்டும். இரண்டு ரி, க வில் ஒன்றாவது இருத்தல் வேண்டும். ஒரு த, நி இருத்தல் வேண்டும்.

மேளகர்த்தா ராகங்கள் மொத்தம் 72 ஆகும். இவற்றை நாம் கடபாயதி என்ற முறைப்படி சுலபமாக நினைவில் வைத்துக்கொள்ள முடியும். இந்த முறைப்படி, சமஸ்கிருத எழுத்துக்களின் எண்களை ராகத்தின் பெயரோடு இணைத்துப் படிக்க வேண்டும். சமஸ்கிருத மொழிப்படி:

1 2 3 4 5 6 7 8 9 0

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| KA | KHA | GA | GHA | NGA | CA | CHA | JA | JHA | NYA |
| Ta | Tha | Da | Dha | Na | Ta | Tha | Da | Dha | Na |
| PA | PHA | BA | BHA | MA | | | | | |
| YA | RA | LA | VA | SHA | SHA | SA | HA | | |

01. ராகத்தின் முதல் இரு எழுத்துக்களை தனியாக எடுத்து, அதற்கான எண்களை இந்த கட்டத்தின் மூலம் நிரப்ப வேண்டும்.
72 ராகங்களில் முதலாவதாக இருக்கும் கனகாங்கி ராகம்.
கனகாங்கி -முதல் இரு எழுத்துகள் க, ன (1, 0)

02. இரண்டாம் விதிப்படி, இந்த எண்களை கடைசியிலிருந்து படிக்க வேண்டும். (பழைய இந்திய முறைப்படி)

**கனகாங்கி 01.**

ஆக, இது முதல் மேளகர்த்தா ராகம்.

இப்போது இந்த எண்ணிலிருந்து, சுர அமைப்பை பெற என்ன விதியைக் கடைபிடிப்பது? இதற்கும் விதிகள் உண்டு.

01. ஒன்று முதல் 36 வரை உள்ள மேளகர்த்தா எண்களுக்கு
ஆ 1. 2. 37 முதல் 72 வரை
ஆ2

03. கிடைக்கும் மேளகர்த்தா எண் 36ஐ விடக் குறைவாக இருந்தால், அந்த எண்ணில் ஒன்றைக் குறைத்துக்கொண்டு, ஆறால் வகுக்க வேண்டும். 36ஐ விட அதிகமாக இருந்தால், அந்த எண்ணிலிருந்து 36ஐக் கழித்துக் கிடைக்கும் எண்ணில் ஒன்றைக் குறைத்துக் கொண்டு ஆறால் வகுக்க வேண்டும். இப்படி வகுத்துக் கிடைக்கும் ஈவு (Quotient) எண்ணையும், மீத எண்ணையும் வைத்து மற்ற சுரங்களைக் கணக்கிடலாம்.

| ஈவு எண் | ரி | க |
|---|---|---|
| 0 | சு1 | பு1 |
| 1 | சு1 | பு2 |
| 2 | சு1 | பு3 |
| 3 | சு2 | பு2 |
| 4 | சு2 | பு3 |

| | | |
|---|---|---|
| *5* | *சு3* | *பு3* |

| மிச்ச எண் | த | நி |
|---|---|---|
| *0* | னு*1* | ே*1* |
| *1* | னு*1* | ே*2* |
| *2* | னு*1* | ே*3* |
| 3 | னு2 | ே2 |
| 4 | னு2 | ே3 |
| 5 | னு3 | ே3 |

இதன்படி கனகாங்கி ராகத்தின் அமைப்பை கண்டுபிடிக்கலாம்.

*01. தாய் ராகம் ஆதலால் ச, ப கண்டிப்பாக உண்டு.*

*02. முதல் மேளகர்த்தா எண்ணானதால் இதற்கு ஆ1*

*03. மேளகர்த்தா எண் 1 36ஐ விட சிறியது. எனவே (1-1)/6.*

*ஈவு:0, மிச்சம் 0*

*04. ஆகையால் சு1, பு1, னு1, ே1 ஆகிய சுரங்களே சேரும்.*

*05. இதன்படி கனகாங்கி ராகத்தின் சுர அமைப்பு :*

*ஆரோஹணம் ச ரி க ம ப த நி ச:*

*அவரோஹணம் ச:நி த ப ம க ரி ச*

என்ற வரிசைக்கிரமப்படி அமைந்துள்ளது.

அடுத்தது இன்னொரு உதாரணத்தின் மூலம் கடயபாதி வழக்கத்தை எடுத்தாளலாம்.

**ராகம் ஹேமாவதி.**

*01. மேளகர்த்தா எண் –ஹே, மா ாய, அய 8, 5*

*02. இதன் மேளகர்த்தா எண் 58.*

*03. மேளகர்த்தா எண் 37க்கு மேல் உள்ளதால் இதில் ஆ2 உள்ளது.*

*04. மற்ற சுரங்களைக் கண்டுபிடிக்க: 36ஐ விட 58 பெரியது் எனவே 58-36 ஸ்ரீ 22. (22-1)ஃ6.ஈவு, 3 மிச்சம் 3.*

*05. இதனால் மேலேஇருக்கும் கட்டத்தின் மூலம்- சு2, பு2, னு2, ே2 என்ற சுர அமைப்புகளை அடைகிறோம்.*

*ஆரோஹணம் –ஞ, சு2, பு2, ஆ2,*°*, னு2, ே2, ஞ*

அவரோஹணம் ஸ, ரே2, னு2, ஆ2, பு2, க2, ஸ

சுலபமான சில பயிற்சிகள் மூலம், இதை எளிதில் கணக்கிட முடியும்.

## சக்கரம்

இந்த 72 மேளகர்த்தா ராகங்களை, பனிரெண்டு குழுக்களாக பிரித்துள்ளனர். இதைச் சக்கரங்கள் எனக் கூறுவர். ஆக மொத்தம் 12 சக்கரங்கள். ஒவ்வொன்றிலும் ஆறு ராகங்கள் இருக்கும்.

## மேளகர்த்தா ராக சக்கரம்

ஒவ்வொரு சக்கரத்திலும் இருக்கும் ராகங்களில் தைவதமும், நிஷாதமும் மட்டுமே மாறுபடும். இந்தப் பன்னிரண்டு சக்கரங்களுக்கும் கீழ்க்கண்டவாறு பெயர்கள் இடப்பட்டுள்ளன. இந்தப் பெயர்கள் அந்தச் சக்கரத்தின் எண்ணைக் குறிக்கும் குறியீட்டுச் சொற்கள்.

*01. இந்து (நிலவு , ஒரே நிலவு)*
*02. நேத்ரம் (இரு கண்கள்)*
*03. அக்னி (மூன்று வகை வேள்வித் தீ, முத்தீ).*
*04. வேதம் (நான்கு வேதங்கள்)*
*05. பாணம் (மன்மதனின் 5 பாணங்கள்)*
*06. ருது ( 6 ருதுக்கள், அதாவது பருவ காலங்கள்)*
*07. ரிஷி (சப்த ரிஷிகள்)*
*08. வசு (அஷ்ட வசுக்கள்)*
*09. பிரம்மா (நவ பிரம்மாக்கள்)*
*10. திசி (பத்து திசைகள், வழக்கமான 8 திசைகளோடு, மேல், கீழ் இரண்டும் சேர்த்து).*
*11. ருத்ரர் (ஏகாதச ருத்ரர்கள்)*
*12. ஆதித்யர் (துவாதச ஆதித்யர்கள்).*

# தமிழில் யாழ்க் கருவிகள்

பண்டைத் தமிழர் இசையை மிக விழுமிய கலையாகக் கருதி அதை ஆழ்ந்து பயின்றனர். தமிழ் மொழியை இயல், இசை, கூத்து, என முக்கூறு படுத்தியதிலிருந்தே அவர்கள் இசையின் பெருமையை உணர்ந்திருந்தனர் என்பது புலனாகும். உலகிலேயே இசை நூல்களைச் சுவடி வடிவில் முதன் முதலாக வெளியிட்டவர்கள் தமிழர்களேயாவர். கடைச் சங்க காலத்தில் அதாவது, சுமார் 2000 ஆண்டு களுக்கு முன்பே அத்தகைய நூல்கள் பல இருந்தன என்பது சிலப்பதிகார உரைகளின் வாயிலாக நமக்குத் தெரியவருகின்றது. சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி, கல்லாடம் முதலிய பழந்தமிழ் நூல்களிலும் இசையின் இலக்கணங்களும் இசைபற்றிய பல குறிப்புகளும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், பரிபாடல் முதலியன இசைத்தமிழ் விரவிய இலக்கிய நூல்களே. தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறை களும், திவ்விய பிரபந்தமும், திருப்புகழ் முதலியனவும் இசைப் பாட்டுக்களாலாகிய நூல்களே. பண்டைத் தமிழ் வேந்தர் மூவரும் தமிழிசையைப் பெரிதும் ஆதரித் துப் போற்றி வந்தனர். அவர்கள் மண்டபங்களில் இசையொலி எப்பொழுதும் கேட்ட வண்ணமாக இருக்கும். அவர்கள் இசைப் பாணர்களுக்கும் விறலியர்களுக்கும் பெருங் கொடைகள் வழங்கினர். இவ்விதமாக வளர்க்கப் பட்ட இசையானது இசை வல்லுன ரிடத்தும் உயர்ந்தோரிடத்தும் மட்டுமே நின்றுவிடவில்லை. பாமர மக்களும் இசைக் கலையை ஆர்வத்தோடு உணர்ச்சியோடும் பாராட்டினர். ஐந்திணை மக்களிடத்தும் தனித்தனி பெயர் கொண்ட இசைக் கருவிகளாய் யாழும், பண்ணும், பறையும் வழக்கத்திலிருந்தன.

இசை தோன்றியபொழுதே இசைக் கருவியும் தோன்றின. இசைக்கருவிகளில் மிகப் பழைய காலத்திலிருந்து வருவன தோற் கருவிகளேயாகும். மானிட வரலாற்றின் பிற்காலங் களில்த் தான் துளைக் கருவிகளும் நரம்புக் கருவிகளும் ஏற்படலாயின. பண்டைத் தமிழர் களிடையே தோலால் செய்யப்பட்ட முப்பத்தொரு முழவுகள் வழங்கின என்று சிலப்பதிகாரம் (3:27) அடியார்க்குநல்லார் உரையிலிருந்து தெரிய வருகிறது. புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனார் அகப் பொருள் ஆகிய பழைய நூல்கள் வேறு சில முழவுகளின்

பெயரையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு கூடியிருந்தன எனவும் தெரிகிறது. தமிழகத்தில் யாழ், குழல், முரசு போன்ற இசைக்கருவிகள் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்பர் தமிழறிஞர்கள். இயற்கையோடு ஒத்து வாழ்ந்த பழந்தமிழர்கள் இயற்கையில் காணும் பொருள்களின் அசைவினாலும், அவை ஒன்றோடொன்று மோதிக்கொள்வதனால் உண்டாகும் அதிர்ச்சியினாலும் ஏற்படும் பலவித ஒலிகளைத் தங்களது நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். வேட்டுவர் தங்கள் தொழிலைச் செய்யுங்கால் இறுகக் கட்டிய வில் நாணினின்று எழும் இன்னொலிகளைக் கேட்டு இன்புற்று, அவ் வில்லும் ஓர் இசைக் கருவியாகப் பயன்படக் கூடுமென்பதை நாளடைவில் உணரலாயினர். அங்ஙனமிருக்க, 2 பசுத்திரளைக் கானகத்தில் மேய்கச் சென்ற இடையன் தானே செய்து கொண்ட குழலில் பாலைப்பண் வாசித்து அலுத்திருக்கையில், வேடன் வில்லின்மீது கவனஞ் செலுத்தலானான். அவன் உடனே குமிழ மரத்தின் உள் துளையுடைய கொம்பு ஒன்றை வெட்டி வளைத்து, தன் இரு நுனியிலும் துளையிட்டு, அத்துளையின் வழியாக மரல் என்னும் மரத்தின் நாரை உரித்துத் திரித்த கயிற்றை நாணாகக் கட்டினான். நாண்கள் சிறிதும் பெரிதுமாய் உணர்த்தியும் தாழ்த்தியும் கட்டப் பெற்றன. ஆயன், நரம்புகளைத் தொட்டு யாழை மீட்டி இசையொப்புமை செய்கின்றான். சோலையெல்லாம் இன்னொலி பரவி அங்கிருந்த அனைத்து உயிர்களும் அந்த இன்னொலியைக் கேட்டு இன்புற்று மெய்மறந்து நின்றன.

இந்த வில் யாழ்தான் தமிழன் – ஏன் முல்லை நில ஆயன் முதன் முதலாகக் கண்ட இசைக்கருவி. இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் முதலாவதாக ஒரு நரம்புடைய வில் யாழ் எழுந்தது. இது சங்க காலத்திற்கு முற்பட்டது. இது பழங்கற்காலம். இருப்பாணியோ, செம்பாணியோ, உளியோ, சுத்தியோ இல்லாத காலம். எனவே, கையால் கம்புகளை வளைத்து மர நார்களால் வில்லைக் கட்டி மரல் நாரினைத் திரித்து நரம்பாகக் கட்டி யாழை உருவாக்கினர். அப்பால் நாளடைவில் அது வளர்ச்சி அடைந்து மூன்று நரம்புகளும், ஐந்து நரம்புகளும், பின் ஏழு நரம்புகளுமாக எழுந்தன. இதற்கு இலக்கணமும் வகுத்தனர். யாழுக்கு எத்தனை வில்கள், எத்தனை நரம்புகள், ஏன் கொம்பால் யாழ் செய்யப்பட வேண்டும்? யாழின் நீளம் அகலம் ஆகிய

அளவுகள், முறுக்காணிகளின் எண்ணிக்கை, ஒற்றுறுப்புகள் அமைக்கும் முறை இவை களுக்கெல்லாம் இலக்கணம் வகுத்தனர். அவை மிகவும் விரிவு டையன. வில் யாழைப் பற்றிய செய்தி பெரும் பாணாற்றுப்படை 175 184 அடி களில் காணப்படு கின்றது. தமிழ கத்தில் மிகப் பழைய காலத்தில் தோன்றிய இவ் வில் யாழே வளர்ச்சியுற்று, பல்வேறு அனுபவங் களுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் பின்னர் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் நுண்ணிய உறுப்புகள் அமைந்த பலவித யாழ்களாக உருப் பெறலாயிற்று எனத் திண்ணமாக கூறலாம். பண்டைத் தமிழர்கள் உபயோகித்து வந்த இக் கருவி களைப் பற்றிய செய்திகள் யாவும் பழந்தமிழர் நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. சங்க காலத் தமிழ் மக்கள் பேரியாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ், மகரயாழ் என்னும் நால்வகை யாழ்களை உபயோகித்தனர். மகர யாழ் மகர மீனின் உருவுமுடை யதாகலின் அப்பெயர் கொண்டது என்பது பொருநராற்றுப்படை (4-18), சிறுபாணாற்றப்படை (221-229), பெரும்பாணாற்றுப்படை (10-16) முதலிய பாட்டுகளிலிருந்து தெரிகிறது. தமிழ் மக்களின் பண்டைச் சிறப்பாக இருந்த இந்த யாழ்கள் அதிக வேலைப்பாட மைந்தனவொன்றும், பாணர்கள் விலையுயர்ந்த இரத்தினங்களை இக்கருவிகளில் பதித்து இருந்தனர் என்றும், அவர்கள் இவற்றைப் பட்டுத் துணியால் போர்த்திப் பெட்டிக்குள் வைத்திருந்தன ரென்றும் பத்துப்பாட்டியிலிருந்து தெரியவருகின்றது. இவை மைதீட்டிய கண்களைடையுடைய மணப்பெண்போல அழகு வாய்த் திருந்தனவென்றும், இவற்றின் கோடுகளில் மலர் மாலைகள் கட்டப்பட்டிருந்தன வென்றும், இவை சித்திரம் எழுதிய அழகிய உறையினுள் வைக்கப்பட்டிருந்தன வென்றும் சிலப்பதிகாரம் கானல் வரிப் பாடல் கூறுகின்றது. சிந்து வெளியில் சிறப்பாக, ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங் களில் அகழ்ந்து ஆய்ந்து கண்ட அரிய தெய்வத் திரு உருவங்கள், குழல் உருவங்கள், யாழ் உருவங்கள், பல்வேறு விதமான பறை உருவங்கள், வெண்கலத் தாலான நாட்டிய நங்கையின் படிமங்கள், சுண்ணாம்பிலான அழ கிய சிவன் உருவங்கள், கொற றவை உருவங்கள், 3 இன்னோ ரன்ன பலவும் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை. இவற்றிலிருந்து 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் முன்னோர் கள் - சிந்துவெளியில் வாழ்ந்து வந்த பண்டைய திராவிட மக்கள் - இசை பயின்றிருந்ததோடு இணை யற்ற தெய்வீக இசைக் கருவிகளா கிய யாழும் குழலும் இசைத்து வந்தார்கள் என்பதை அங்குள்ள முத்திரைகள் மெய்ப்பிப்பதாக இருக்கின்றன. திரு.ஸ்டுவேர்டு

பிக்காட் என்ற அறிஞர், க்ஷக்ஷசிந்து வெளிச் சீரிய மக்கள் கண்ட ஏழிசை எழுப்பும் இனிய இசைக் கருவியை உறுதிப்படுத் தியிருப்பது அவர் களது நனிசிறந்த நாகரிகத்தையும் நுண்ணிய இசை யறிவையும் உணரப் போதிய சான் றாகும்;; என்று அழகாக எடுத்துக் காட்டியுள் ளார்.

இதுபோன்ற எடுத்துக் காட்டு கள் வரலாற்றுக் காலத்திற்கு முந் திய பாபிலோனியப் பண் பாடு களில் பெரிதும் காண் கின்றோம். ஒரு சில இசைக் கருவிகள் பாபி லோனிய நாட்டின் அகழ்வாராய்ச் சியில் கண்டு ஆரா யப்பெற்றுள் ளன. ஆராய்ச்சியாளர் திரு. மு. வே. தீக்சித் அவர்கள் பின்வரு மாறு கூறுகிறார் :

"Some of the pictographs appear to be representations of a crude stringed instruments a prototype of the modern Veena While a pair of castnuts like the modern karatala have also been found."

மங்காப் புகழ் வாய்ந்த வங்கப் பேரறிஞரும் சிந்துவெளி நாகரி கத்தை ஆரம்பகாலத்திலேயே அகழ்ந்து கண்ட பேரறிஞரு மான ஆர்.டி.பானர்ஜி அவர்கள், சிந்துச் சமவெளியில் இருந்த முந்தைய நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதில் எட்டுணையும் ஐய மில்லை" என்று உறுதி கூறியுள் ளார்.

சிந்துவெளி நாகரிகத்தை அகழ்ந்து கண்ட சர்ஜான், மார்சல் என்பவரோடு சேர்ந்து அகழ்ந்து ஆராய்ந்தவர். மார்சலுக்குப் பிறகு அங்கு நீண்ட காலம் அகழ்ந்து பல நூற்கள் எழுதியவர். சிந்துவெளிப் பண்பாடு உலகில் உச்ச கட்டத்தை அடைந்த உயரிய பழம்பெரும் பண்பாடு. அங்கு அகழ்ந்து கண்ட முத்திரைகளில் பொறிக்கப்பட்ட யாழ் உருவங்கள் - சுமேரிய நாட்டின் மன்னர்களின் கல்ல றைகளின் கண்டெடுக்கப்பெற்ற யாழ்கள் - தமிழ் நாட்டில் கண்ட யாழ்களோடு ஒப்புமை உடையன (Father Hearas Lecturer, 1937 'Madras Mail' 21.10.1937) சுமேரியர்கள் யாழ்ப் பண் என்று பகர்ந்தனர். அப் பதம் தமிழர் கண்ட தனித் தமிழ்ச் சொல்லான பண், பண்ணியம், பாண், பாணி என்ற வார்த்தைகளோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக மிளிர்கிறது. இக்காலத் தமிழர்கள் பண் என்பதை இசை என்றும் இராகம் என்றும் கூறுவர். சிலப்பதிகார உரையுள், "பண்ணென்பது நரப்படைவால் நிறந் தோன்றப் பண்ணப்படா நின்ற பண்ணும் பண்ணியற்றிறமும் திறத்திறமும் என்றவாறு" (சிலப். அரங்கேற். வரி 46 உரை)
என்றும்,

*"பண் பண்ணியம் திறம் திறத்திறம்*
*என்னு மிவை 4*

சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் எனும் வடமொழிப் பெயரானும் வழங்கும்"

(சிலப்.புறஞ்சேரி, வரி 106 உரை) என்றும் கூறப்படுவது ஆராயத்தக்கது.

டாக்டர் எண்டிறிசியார்க் பிர்மர், பழைய பாபிலோனிய இசையைப் பற்றி ஆய்ந்து சுமேரியர்களிலிருந்து அசீரியர்கள் காலம் வரை மக்களின் சமுதாய வாழ்வில் இசை ஒரு சிறப்பான இடம் பெற்றிருந்தது என்று கூறியுள்ளார்.

டூாக்டர் பால்மர் என்ற அறிஞர், இசை நிபுணர்களின் இதயத்தை ஈர்க்கும் மெசபடோமிய இசைக் கருவிகள், நரம்புப் கருவி களின் உயர்ந்த இனத்தைச் சேர்ந் தவை என்று போற்றுகிறார். அவை அனைத்தும் அழகிய அமுதூறும் யாழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று அறிஞர்களால் கருதப்படு கின்றன.

1926ஆம் ஆண்டில் சால்டியா (கல்தேய) நாட்டின் தலைநகரான க்ஷஊர்; என்னும் இடத்தில் அரச குடும்பத்தார்களின் கல்லறைகளை அகழ்ந்து ஆய்ந்து அறிஞர் சி.எல்.உல்லி என்பவர் பல அரிய பொருட்களைக் கண்டெடுத்துள் ளார். அவற்றில் இங்கு குறிப்பிடத் தக்கது கலைநயம் வாய்ந்ததும் கவர்ச்சி மிக்கதும் காளை தலை யுள்ளதுமான யாழ் உருவமே யாகும். இந்த யாழில் முன் பக்கம் உள்ள எருதுத்தலை பத்தரை மாற்றுப் பசும் பொன்னால் ஆனது. யாழின் ஏனைய உறுப்புகள் எல்லாம் சிவப்பு, நீல வண்ணந் தீட்டப்பெற்று எழில் பெற்றிலங்கு கின்றன. இந்தப் பழம்பெரும் யாழ் கிறிஸ்துவ ஊழிக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்னர் – அதாவது இன்றைக்கு 4600 ஆண்டுகளுக்கு முன் உருவாகப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது பேரரசி சுபாத்தின் அழகிய யாழாக மதிக்கப்படுகிறது. அவளைப் புதைத்த கல்லறையில் அவளுக்குப் பிரியமான ஆடைகள், அணி கலன்கள், பண்ட பாத்திரங்கள், இசைக் கருவிகள் எல்லாம் வைத்து முடப்பட்டிருக்கின்றன. இந்த சுபாத் அரசியின் யாழ் செங்குத்தாகச் சிறிய ஒலிப் பலகைகள் இலங்க நன்மரத்தினால் செய்யப்பட்டுள் ளது. இதில் ஏழு நரம்புகள் கட்டப் பட்டுள்ளன. இந்த யாழ் தமிழக யாழினின்று சில வேறுபாடுகள் உள்ளதாய்க் காணப்பட்டாலும் தமிழக யாழ் இனத்தைச் சேர்ந்தது என்று திட்டவட்டமாகக் கூறு முடியும். 1947ஆம் ஆண்டில் அறிஞர் திரு.மிகு.விபுலானந்த அடிகள் தமது யாழ் நூலில் இந்த யாழைப் பற்றி ஆய்ந்து இதன் புனையா உருவத்தையும் தீட்டிக் காட்டியுள்ளார்.

மேனாட்டுப் பேராசிரியர் பானும் என்பவர் எகிப்தியச் சுவர் ஓவியங்களில் வில்யாழ் கிறிஸ்துவ ஊழி எழுவதற்கு 3000 ஆண்டு முதல் 4000 ஆண்டு வரையுள்ள கால எல்லையை உடையது என்று

கூறியுள்ளார். தமிழகத்தில் கிடைக்கும் சான்றுகள் மூலம் யாழ் என்னும் தொன்மையான இசைக் கருவியே எகிப்தியச் சுவர் ஓவியங் களில் ஒளிர்கின்றது என்பதை நாம் நன்கு மெய்ப்பிக்க முடியும். மேலும் ஆசிரியர் பானும் அரிஸ்டாட்டிலும் குறிப்பிடும் கி.மு.4ஆம் நூற்றாண்டி லுள்ள சுருதி வாத்திய இசையைச் சேர்ந்த இசைக் கருவிகளும் அடியிலிருந்து நுனிவரை நாண்கள் கட்டப்பட்டதாக இருந்தன என்று தெரிகிறது. இத்தகைய முறை தமிழக இசைக் கருவிகளான பண்டைக்கால வில் வடிவமான இசைக் கருவியின்று 5 பிற்காலத் தில் தோன்றியது என்று எண்ணப் படுகிறது. மேலும் எகிப்தியர்கள் பண்டு என்ற நாட்டினின்று வந்து எகிப்தில் குடியேறியவர்கள் என்று தங்களைக் கூறிவருகின்றார்கள். பண்டு நாடு என்பது பாண்டிய நாடு என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இதன் மூலம் எகிப்தியர்களுக்கும் தமிர்களுக்கும் உள்ள தொடர்பு நன்கு தெரிகிறது. இதனால் தமிழகத்தினின்று வில் யாழ் எகிப்திற்குப் போயிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எகிப்தியரும் பழந்தமிழரைப் போலவே, தாரம் முதலாக நரம்பு களைப் பிறப்பித்தார்களென அறி கின்றோம். எகிப்து நாட்டிலே இறந்த மன்னர்களுடைய உடலி னைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஈமக் கோபுரங்களிலே வரையப் பட்ட யாழ் வடிவங்களைக் கண்ட மேனாட்டறிஞர்கள் அவற்றின் உருவச் சாயல்களை வெளி யிட்டி ருக்கின்றனர். எகிப் திய மொழி யிலே யாழ் க்ஷநங்கா; எனப்பட்ட தென்பர். இன்றைக்கு மூவாயிரத் தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த எகிப்திய யாழ்கள் சிலவற்றை பிரித்தானிய காட்சிச் சாலையிலே (British Museum) நாம் இன்றுங் காணலாம். அனைத்துலகக் கலைமேதை உயர்திரு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் பழமையான யாழ் என்னும் இசைக் கருவியை அமராவதியில் உள்ள சிற்பத்தில் கண்டுகளித்து, பண்டைக்காலத் தமிழர்கள் கண்ட இச்சீரிய இசைக் கருவி தமிழ் நாட்டிலே வழங்கி வந்தது என்பதையும் உலகில் உள்ள இசை நிபுணர்களுக்கு எடுத்துக் காட்டினார். யாழின் சிற்ப வடிவில் அதன் உருவினைத் தமிழகத்தில் திருமெய்யம் (திருமயம்) திரு எருக்கத்தம்புலியூர், தாராசுரம் முதலிய இடயங்களில் உள்ள கோயில்களில் இன்றும் காண முடிகிறது. திரு எருக்கத்தம் புலியூர்க் கோயிலில் உள்ள திரு நீலகண்ட யாழ்ப்பாணர் சிலையில் ஒரு யாழை அவர் தாங்கி நிற் பதைக் காண முடிகிறது.

இஃதன்றி ஆந்திராவில் உள்ள அமராவதியில் உள்ள கோலி என்னும் இடத்தில் கி.பி.2ஆம்

நூற்றாண்டில் எழுந்த சிற்ப வடிவங்களில் அழகிய யாழையும் காண முடிகிறது. அவை இன்றும் இலண்டன் தொல்பொருள் காட்சிச்சாலையில் உள்ளன. அவை கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் தீட்டப்பெற்றுள்ளன என்று தெரிகிறது. இவற்றில் சில யாழ் உருவங்கள் காணப்படுகின்றன. இவை திராவிடச் சிற்பக் கருவூலமாக அறிஞர்களால் போற்றப்படுகின்றன. இவற்றில் யாழ் வாசிக்கும் அணங்குகளுடைய அழகிய சிற்பங்கள் பல உள. இவற்றை அனைத்துலகக் கலை அறிஞர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் கண்டு ஆய்ந்தார். சிலப்பதிகாரக் காலத்திலும் அதற்கு முன்பும் பின்னும் தமிழ் நாட்டிலே பழமையான யாழ்கள் வழங்கி வந்துள்ளன. பழமையான இசை மரபு நிலவி வந்தது. அதை மெய்ப்பிப்பதுபோல் அமராவதி கோலி சிற்பம் காணப்படுகின்றது என்று முதன் முதலாக உலகிற்று எடுத்துக் காட்டினார் அறிஞர் ஆனந்த குமாரசுவாமி.

கும்பகோணத்திற்கு அண்மையில் உள்ள தாராசுரம் என்னும் கோயிலிலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் உருவச் சிற்பத்தில் யாழ் உருவம் காணப்படுகின்றது.

தமிழ் நாட்டிற்கும் யவனபுரம் எனப்படும் கிரேக்க நாட்டிற்கும் பண்டைக்கால்திலே நெருங்கிய தொடர்பிருந்தது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கரனார் பாண்டின் இலவந்திகை பள்ளித் துஞ்சிய நன்மாரனைப் பாடிய புறப்பாட்டினுள்ளே, 6

*.......யவன*
*நன்கலந் தந்த தண்கமழ் தேறல்*
*பொன்செய் புனைகலத் தேந்தி*
*நாளம்*
*ஒண்டொடி மகளிர் மடுப்ப*
*மிழ்சிறந்து*
*அங்கினி தொழுகுமதி*
*யோங்குவாள் மாறா"*


எனக் கூறியிருக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுப் பேராசிரியர், திரு. வி. ஆர். இராமசந்திர தீட்சிதர் அவர்கள், "தென்னாட்டிலிருந்து தமிழ் நாகரிகம் உரோமாபுரிக்கும் கிரேக்க நாட்டிற்கும் பரவியது. இன்னும் தக்காண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி நில மக்கள், யவன தேசத்திற்குச் சென்று தங்கள் அரசை நிலை நிறுத்தித் தங்கள் பெயரையும் அந்த நாட்டிற்குக் கொடுத்தார்கள். இதுவே கிரீட் (Crete) தேசம். இதன் நாகரிகத்திற்கும் தமிழ் நாகரிகத் திற்கும் ஒப்புமை மிகுதியுள்ளது" என எழுதியிருக்கிறார்கள். வில்லவர்" என்னும் சேரர் குடிப் பெயரை 'Hunters' என

மேனாட்டார் மொழிபெயர்க்க, அது திரும்பவும் தமிழுக்கு மொழி பெயர்க்கப் படும்போது கூஷவேட்டு வர்; என அமைவது இயல்பு. ஆதலினாலே, கூஷதக்காண பீட பீமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி நில மக்கள்; என, தீட்சிதரவர்களுடைய உரையிலே குறிக்கப்பட்டோர், வில்லவராகிய சேரர் குலத்தவரே என்பது தெளி வாகின்றது.

சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப் பத்திலும் காணப்படும் சேரர் தீவு கிரீத் ஆகியிருக்கலாம். தமிழ் நாட்டு வேந்தர் யவனர்களைத் தமது கோட்டை வாயில்களிலே காவலர்களாக வைத்திருந்த செய்தியும் உரோமாபுரி வேந்த னாகிய அகஸ்டஸ் மன்னனுக்குப் பாண்டியன் தூதனுப்பிய செய்தியும் பிறவும் ஆதாரமாகக் கொண்டால் மத்தியதரைக்கடல் நாகரிகம் என்று இப்போது வழங்கப்படுவது தென்னிந்திய நாகரிகம்(அ) தமிழ் நாகரிகம் என்று துணிவாய்ச் சொல் லலாம்.

**கலைமாமணி**
**ப.தாமோதரன்**
















# இசை வளர்க்கும் கலைக்கூடங்களான ஆலயங்கள்

உலகில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் தனித்துவமான வரலாறு, பண்பாடு மற்றும் பாரம்பரியம் உண்டு. அதிலும் தமிழர் வாழ்வியல் பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழருக்கென்று செம்மொழி அங்கீகாரம் கொண்ட தமிழ் மொழியும், கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றுடன் மிக நீண்ட வரலாறும் உண்டு.

தமிழர் வாழ்வியலில் வழிபாட்டு மரபும் இசை பாரம்பரியமும் ஆலயங்களை மையப்படுத்தி வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அவர்கள் பிறப்பு தொடக்கம் இறப்பு வரையான வாழ்வியல் படிநிலைகளில் இசைக்கு இன்றியமையாத இடத்தைக் கொடுத்ததுடன், ஆலயங்கள் ஊடாக முக்கியத்துவம் பெற்ற வழிபாட்டு மரபுக்கும் இசைக்கும் மிக நெருக்கமான இணைப்பைப் பேணுகிறார்கள். குறிப்பாக வழிபாட்டில் இசைக்கு இருக்கும் இடத்தினை வேறு எதனைக் கொண்டும் நிரப்ப முடியாது. ஆலயங்களில் ஒலிக்கும் வேதமந்திரங்கள் ஒருவித ஒலி அலைகளை ஏற்படுத்தி, மனதை ஒருமுகப்படுத்துகின்றன.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே" என்னும் பழமொழி மூலம் சமயத்தின் மேல் பழந்தமிழன் வைத்திருந்த சமயப்பற்று மாத்திரமன்றி ஆலயத்தைச் சுற்றியே அன்றையத் தமிழர்களின் வாழ்வியல் அமைந்திருந்தது என்பதனையும் தெளிவாகக் காட்டுகின்றது. ஆலயம் வெறுமனே வழிபாட்டு மையமாக மாத்திரம் செயல்படவில்லை கற்றறிந்த சான்றோருக்கு ஓர் அறிவு மேடையாகவும், சிற்பிகளுக்கு சிற்பக் கலைக்கூடமாகவும், ஓவியர்களின் கற்பனைகளுக்கு உயிரூட்டும் உன்னத இடமாகவும், இசை மற்றும் நாட்டியக் கலைஞர்களுக்கு கலைத்தாயின் கோயிலாகவும் விளங்குகின்றன.

பண்டைக் காலம் தொடக்கம் இறைவனை வழிபடும்போது இசைக்கு மிகமுக்கிய வகிபாகம் வழங்கப்பட்டு வருகிறது. தொன்றுதோட்டு பேணப்படும் இசை மரபு இன்றும் ஆலயங்களை மையப்படுத்தித் தொடர்வது குறிப்பிடத்தக்கது. "குன்றகச் சிறுகுடி கிணையுடன் மகிழ்ந்து தொண்டகச் சிறுபறைக் குரவை அயர" (திருமுருகு.196-197) சிறு ஊரிலே இருக்கின்ற சுற்றத்தாருடன் கூடி தொண்டகம் எனும் சிறிய பறை இசைக்கருவியை இசைத்து

குமரக்கடவுளுக்கு முன் குரவைக்கூத்து ஆடினர் என்று இப்பாடல் கூறுவதன் மூலம் இசையும் வழிபாடும் தமிழர் வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ளமை புலப்படுகின்றது.

பண்டைக் காலத்தில் ஆலய வழிபாட்டின்போது “அதிகாலைக் காந்தாரப்பண்ணையும், பின்னர் சடாவம் என்ற பண்ணையும், உச்சிக்காலத்தில் நட்டராகம் என்ற பண்ணையும் பின்னர் கௌசிகத்தையும், மானிச்சந்தியில் சைந்தவம் என்னும் பண்ணையும் பாடியதாக ஆகமங்கள் கூறுகின்றன. வீணை வாசிக்கும் கலைமகள், குழல் ஊதும் கண்ணன், உடுக்கை ஏந்திய சிவன், மிருதங்கம் வாசிக்கும் நந்திகேசர், தம்புரா ஏந்திய நாதமுனி என்று கடவுளர்களையே இசை மீட்டச் செய்து கடவுளே ஏழிசையும், இசைப்பயனும், இன்னமுதமாய் வணங்கிய தமிழர்கள் இசைத் தொண்டு செய்ய ஆலயங்களில் கலைஞர்கள் பலரை கடவுளுக்கு தொண்டு செய்ய நியமித்தார்கள்.

ஆலயமும் இசையும் வேதநெறியானது தழைத்தோங்க, சைவத்துறை விளங்க இறையருளால் திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்பதை சேக்கிழார்ப்பெருமான் கூறியருளினார். மூவேந்தர்களும் குறிப்பாக சோழ வம்சத்தினர் இந்தியாவில் மாத்திரமன்றி, தாம் வெற்றி கொண்ட தேசங்களில் பெரிய பெரிய திருக்கோயில்களைக் கட்டினார்கள். குறிப்பாக சோழர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட பல ஆலயங்கள் இன்றும் இலங்கையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மட்டுவில் கல்வத்தை சிவன் கோயில், சாவகச்சேரி வாரிவனேஸ்சரம், மண்ணித்தலை சிவாலயம், பூநகரி சிவன் ஆலயம், திருமங்களாய் சிவன் ஆலயம் முதலிய ஆலயங்கள் சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அக்காலங்களில் ஆலயங்களை அமைத்த மூவேந்தர்கள், பூசை முறைகளையும், திருவிழாக் களையும் ஆகம முறைப்படி நிகழ்த்துவதற்கு ஏற்ப வழி வகைகளை முறைப்படி பின்பற்றினார்கள்.

ஆலயங்களில் தமிழ்ப் பாசுரங்கள் ஒரு பக்கமும் வேதகானம் மறுபக்கமும் பிழையின்றி பாடப்பெறல் வேண்டும் என்பதே அக்கால ஆட்சியாளர்களின் விருப்பம். “குலோத்துங்கச்சோழன், அம்பலத்து ஆடுவான் பட்டன், திருவரங்கமுடையான் பட்டன் முதலிய 500 தமிழ்ப் பட்டர்களை

அவர்கள் குடும்பத்தோடு வேதானம் சொல்லிக் கொடுக்கவும் ரூபவதாரம் என்ற சமஸ்கிருத இலக்கணம் போதிக்கவும் வேங்கி நாட்டுக்கு அனுப்பி வைத்தான் என்று செப்பேடு (குலோத்துங்கனால் வரையப்பட்டது) கூறுகிறது.

தமிழர் வரலாற்றில் மொழிக்கும் இசைக்கும் இருக்கும் இறுக்கமான பிணைப்பு காலங்காலமாக தொடர்வதுடன், இசை வளர்க்கும் கலைக்கூடங்களாக ஆலயங்களே விளங்குகின்றன. ஆலயங்களில் இடம்பெறும் ஆறு கால பூசை வழிபாடுகளில் ஒலிக்கும் மந்திர உச்சாடனங்கள், தவில் – நாதஸ்வரம் கச்சேரிகள், பண்ணிசைகளாக பாடப்பெறும் தேவாரங்கள், இசை முழக்கும் பறையொலி என இசை ஒலிக்கும் கலைக் கூடங்களாக ஆலயங்கள் திகழ்கின்றன.

குறிப்பாக நல்லூர் கந்தசாமி பெருங்கோயிலின் வருடாந்த உற்சவத்தில் பதினொராம் நாள் தொடக்கம் சுவாமி உள்வீதி வலம் வரும்போது, ஒவ்வொரு இசை வடிவங்களும் நிகழ்த்தப்படும் மரபு குறிப்பிடத்தக்கது. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலயத்தில் பறை முழங்க பங்குனித் திங்கள் உற்சவம் ஆரம்பமாகும் மரபு இன்றும் தொடர்கிறது.

ஆகவே அன்று தொட்டு இன்று வரை இசைக்கலை வளர்க்கும் தன்னிகரில்லாத பணியை ஆலயங்கள் வளர்ப்பதுடன், இன்னும் அந்த மரபு தொடர்வது தமிழ் இடத்திற்கே உரித்தான சிறப்பாகும்.

**உமாச்சந்திரா பிரகாஷ்**
**மட்டுவில்.**

## வழக்கத்தில் இருக்கும் கர்நாடக சங்கீத குறியீட்டு முறைமையும் அதனை தற்காலத்திற்கேற்ப சீர்திருத்துவதனால் பெறும் புதிய பரிமாணமும்.

**யோ-சௌ த்வனி விசேஷத்து ஸ்வர வர்ண விபூஷிதே**
**ரஞ்ஜகோ ஜனசித்தானாம் ஸச ராக உதாஹ்ருத**

(ப்ருஹ தேசி)

என்ற மதங்க முனிவரினால் கூறப்பட்ட இரு அடிகளும்,

**யோ-சௌ த்வனி விசேஷத்து ஸ்வர வர்ண விபூஷிதே**
**ரஞ்ஜகோ ஜனசித்தானாம் ஸ ராக கத்திதோ புதை**

(சங்கீத ரத்னாகாரம்)

என்ற சாரங்கதேவரால் கூறப்பட்ட இரு அடிகளும், எந்த த்வனி விசேஷ ஸ்வரங்களாலும், வர்ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுச் செவிக்கு இன்பத்தை அளித்து விளக்குகின்றதோ, அதுவே இராகம் என வரையறை செய்து கர்நாடக சங்கீதத்தின் தனித்துவத்தையும் மகத்துவத்தையும் விளக்குகின்றன.

கர்நாடக சங்கீதமானது இராகம், தாளம், கதி, ஜாதி, கமகம், அணிகள், மற்றும் மனோதர்மம் என பல்வகைப்பட்ட அம்சங்களை தன்னகத்தே அடக்கிய பெருங்கடல் ஆகும். இந்த பெருங்கடலானது வேதகாலத்திலேயே தோற்றம் பெற்ற இறைவனுக்கு பிரியமான மற்றும் தொண்மை மிக்க ஓர் இசை வகையாகும்.

இத்தனை பெருமை பொருந்திய புராதன இசை வகையானது தற்காலத்தில் நம்மவர்கள் பலரால் பயிலப்படாமலும் ஆதரிக்கப்படாமலும் இருப்பது கவலைக்குரிய விடயமே ஆகும். இதற்கு முக்கிய காரணமாக இருப்பது சர்வதேச குறியீட்டு முறைமை பயன்பாட்டில் இல்லாமையே என்றும் கூறலாம். இக்காலத்தில் வழக்கத்தில் இருக்கும், அனைவரையும் கவர்ந்தீர்க்கும் இசை வகைகளை உற்று நோக்கினால் அவை நம் மக்களிடையே நிலைபெறுவதற்கு காரணமாக இருப்பது அவற்றின் இலகுத் தன்மையும், தெளிவுத் தன்மையாகும்.

ஆகவே இந்த கவலைக்குரிய விடயத்தை நிவர்த்தி செய்யவும் கர்நாடக சங்கீதத்தின் சுயரூபம் மாறா வண்ணம் அனைவராலும் பாடபடுவதற்கும், இசைக்கப்படுவதற்கும் வழக்கத்தில் இருக்கும் கர்நாடக சங்கீத குறியீட்டு முறைமையை சீர்திருத்தி அமைப்பது இன்றியமையாததொன்றாகும்.

அவ்வகையில் குறியீடு மற்றும் அதன் முக்கியத்துவம் என்னவென்பதை அறிதல் அவசியமாகும். எந்த மொழியை எடுத்தாலும் அதில் குறியீடுகள் பயன்படுத்தப்படாது வெறும் வார்த்தைகளோடு ஒரு கட்டுரை வரையப்பட்டால், அது வாசகர்களுக்கு எவ்வளவு தூரம் விளக்கமாக இருக்கும் என்பதை மதிப்பிட முடியாது. அவ்வாறே ஒரு பாடல் உருப்படியும் எழுதப்படும் பொழுது அதற்கு அவசியமான குறியீட்டினை பயன்படுத்தாது எழுதப்படுவதனால் கலைஞர்கள் அவற்றை இசைக்கும் போதோ அல்லது பாடும் போதோ அந்த பாடலானது வெவ்வேறு வடிவத்தினைப் பெறுகின்றது. சங்கீத குறியீடுகள் என்பது எழுப்பப்படும் இரஞ்சனை மிகுந்த த்வனிகளின் எழுத்துருவமே ஆகும். எழுத்துரு வழங்குவதனால் பாடல்களை சேகரிக்கவும் தொன்மை மிகுந்த பாடல்களின் உண்மைத்துவம் (Originality) மாறாது புகட்டுவதற்கோ/ இசைப்பதற்கோ வழிகோலும்.

மேலும் குறியீடானது ஒரு விடயத்தை சுருங்க சொல்லி விளங்க வைக்கும் தன்மை கொண்டது. எனவே கர்நாடக சங்கீத பாடல்களை அனைவரும் ஒரேவிதமாக (Uniform) இசைப்பதற்கோ/ பாடுவதற்கோ வேறு சில குறியீடுகளும் இணைக்கப்படுவது இன்றியமையாததொன்றாகும்.

**கர்நாடக சங்கீத குறியீடுகள் (அறிமுகம்)**

இந்திய இசையானது பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் தோற்றம் பெற்ற இசை வகைகளாகும். இந்த இசையானது கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என இரு வகைப்படும். ஹிந்துஸ்தானி இசை இந்தியாவின் வடக்கிலும் கர்நாடக இசை தெற்கிலும் பிரபல்யம் பெற்று வழக்கத்தில் இருந்தன.

இந்த ஹிந்துஸ்தானி இசையானது கர்நாடக சங்கீதத்தையும் பாரசீக, அரேபிய இசைகளின் தாக்கம் பெற்று உதித்த ஒரு இசை வடிவம் ஆகும் என பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுவும் கர்நாடக சங்கீதத்தின் புராதனத்தன்மையை எடுத்து காட்டும் ஒரு நெருங்கிய ஆதாரமாகவும் விளங்குகின்றது. இந்த இசைவடிவங்களுக்கு அக்காலத்திலேயே குறியீட்டு முறைமை வழக்கத்தில் இருந்தமை வியக்கத்தக்க விடயமாகும். அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடு முறைமை காலப்போக்கில் விஸ் (Viz) முறைமை மற்றும் சர்கம் (Sargam) முறைமை போன்ற பல்வேறுபட்ட குறியீட்டு முறைமைகளாக திரிபு அடைந்து ஒருமைப்பாடற்று போகலாயிற்று.இவை முறையே பழைய குறியீட்டு முறைமை மற்றும் புதிய குறியீட்டு முறைமை என்றும் கூறுவர். விஸ் குறியீடு முறைமை ஆதி காலத்தில் பயன்பாட்டில் இருந்தமைக்கு ஆதாரமாக, சுப்பாராம தீக்ஷிதர் எனும் சங்கீத அறிமுறையாளரால் எழுதப்பட்ட "சங்கீத சம்பிரதாய பிரதர்ஷினி" எனும் நூல் திகழ்கின்றது.

மேலும் விஸ் குறியீட்டு முறைமையில் (பழைய குறியீட்டு முறைமை) குறைபாடுகள் காணப்பட்டதனால் தான் சர்கம் குறியீட்டு முறைமை (புதிய குறியீட்டு முறைமை) தோற்றம்

பெற்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த புதிய குறியீட்டு முறைமையே நாம் பயன்படுத்தி வரும், கல்வி முறைமையில் கையாளும் முறைமையாகும்.

**வழக்கத்திலுள்ள குறியீடுகள்:**

ஸ்வரங்களையும் ஸ்தனங்களையும் குறிக்கும் குறியீடுகள்

| ஸ்வரப் பெயர்கள் | குறியீடு | நவீனத்துவப்படுத்தி பயன்படுத்தப்படும் குறியீடு |
|---|---|---|
| சட்ஜம் | ஸ | ஸ |
| சுத்த ரிஷபம் | ர | ரி$_1$ |
| சதுஸ்ருதி ரிஷபம் | ரி | ரி$_2$ |
| ஷட்ஸ்ருதி ரிஷபம் | ரு | ரி$_3$ |
| சுத்த காந்தாரம் | க | க$_1$ |
| சாதாரண காந்தாரம் | கி | க$_2$ |
| அந்தர காந்தாரம் | கு | க$_3$ |
| சுத்த மத்யமம் | - | ம$_1$ |
| பிரதி மத்யமம் | - | ம$_2$ |
| பஞ்சமம் | ப | ப |
| சுத்த தைவதம் | த | த$_1$ |
| சதுர்த்தி தைவதம் | தி | த$_2$ |
| ஷட்ஸ்ருதி தைவதம் | து | த$_3$ |
| சுத்த நிஷாதம் | ந | நி$_1$ |
| கைசிகி நிஷாதம் | நி | நி$_2$ |
| காகலி நிஷாதம் | நு | நி$_3$ |

காலம், நீட்சி தொடர்பான குறியீடுகள்

| காலம், நீட்சி பெயர்கள் | காலம், நீட்சி குறியீடு |
|---|---|
| துரித காலம் | — |
| அதி துரித காலம் | = |
| ஒரு மாத்திரை | , |
| இரண்டு மாத்திரை | ; |
| குறில் ஸ்வரம் | ஸ/ s |
| நெடில் ஸ்வரம் | ஸா/ S |

தாள அங்கங்களைக் குறிக்கும் குறியீடுகள்

| அங்கப் பெயர்கள் | அங்கக் குறியீடு |
|---|---|
| அனுத்ருதம் | U |
| திருத்தம் | O |
| த்ருத விராமம் | UO |
| லகு | \| |
| லகு விராமம் | U\| |
| லகு த்ருதம் | O\| |
| லகு த்ருதம் விராமம் | UO\| |
| குரு | 8 |
| குரு விராமம் | U8 |
| குரு த்ருதம் | O8 |
| குரு த்ருத விராமம் | UO8 |
| ப்லுதம் | 3 |
| ப்லுத த்ருதம் | U3 |
| ப்லுத விராமம் | O3 |
| ப்லுத த்ருத விராமம் | UO3 |
| காகபாதம் | + |

ஸ்தாயி குறியீடுகள்

| ஸ்தாயி பெயர்கள் | ஸ்தாயி குறியீடு |
|---|---|
| தாரஸ்தாயி | ஸ்வரத்தின் மேல் ஒரு புள்ளி (.) |
| அதி தாரஸ்தாயி | ஸ்வரத்தின் மேல் இரு புள்ளிகள் (..) |
| மத்யஸ்தாயி | ஸ்வரத்தின் மேல்/ கீழ் எந்த குறியீடும் இடைப்பட்ட மாட்டாது |
| மந்திரஸ்தாயி | ஸ்வரத்தின் கீழ் ஒரு புள்ளி (.) |
| அனு மந்திரஸ்தாயி | ஸ்வரத்தின் கீழ் இரு புள்ளிகள் (..) |

ஏனைய குறியீடுகள்

| பெயர்கள் | குறியீடு |
|---|---|
| அங்க முடிவு | / |
| ஆவர்த்தன முடிவு | // |
| சாபு தளங்களுக்கு இடையிலான பகுப்பு | = |
| அந்நிய ஸ்வரம் | * |
| அகார, இகார, உகார, ஏகாரம் | கோ.....ரி..... |

**ஆய்ந்ததில் தவற விடப்பட்டிருக்கலாம் என கருதப்பட்டவை**

<table>
<tr><td>ஆரோஹண கமகம்</td><td rowspan="10">தசவித கமகம்</td></tr>
<tr><td>அவரோஹண கமகம்</td></tr>
<tr><td>ஆகாத கமகம்</td></tr>
<tr><td>பிரத்யாகாத கமகம்</td></tr>
<tr><td>ஸ்புரித கமகம்</td></tr>
<tr><td>த்ரிபுச்ச கமகம்</td></tr>
<tr><td>டாலு கமகம்</td></tr>
<tr><td>ஆந்தோள கமகம்</td></tr>
<tr><td>கம்பித கமகம்</td></tr>
<tr><td>மூர்ச்சனை கமகம்</td></tr>
<tr><td colspan="2">மென்மையாக பாடுதல் (Soft)</td></tr>
<tr><td colspan="2">வன்மையாக பாடுதல் (Loud)</td></tr>
<tr><td colspan="2">நீட்டிப் பாடுதல் (Sustain)</td></tr>
<tr><td colspan="2">வெட்டிப் பாடுதல்/ முடக்கிப் பாடுதல்</td></tr>
<tr><td colspan="2">மெதுவாக சத்தத்தை அதிகரித்தல் (Croscendo)</td></tr>
<tr><td colspan="2">மெதுவாக சத்தத்தை குறைத்தல் (Decroscendo)</td></tr>
</table>

மேற்குறிப்பிட்ட அம்சங்களுக்கு குறியீட்டு வடிவம் கொடுப்பதனால் கர்நாடக இசையானது புதிய பரிமாணமும் ஒன்றைப் பெற்றுவிடும் எனலாம். எந்த இடத்தில எந்த கமகத்தை எப்படிப் பாட/ இசைக்க வேண்டும் போன்றவற்றை சர்வதேச ஒருமைப்பாட்டுடன் குறியீட்டின் மூலம் கலைஞர்களுக்கு அறியத்தரும். மேலும், தற்காலத்தில் கர்நாடக சங்கீதம் தனித்து மிளிர்வதற்கும், பல்வகைப்பட்ட இசைவகைகளோடு சேர்ந்து பல்வகைப்பட்ட

இசைக்கலைஞர்களையும் இணைத்து இசை அரங்கங்களை மகிமைப்படுத்த இந்த மாற்றங்கள் அவசியமாகின்றன.

**புதிய குறியீடுகளை இணைத்துக் கொள்வதனால் கர்நாடக சங்கீதம் பெறும் புதிய பரிமாணம்**

**இராகம்:** மலஹரி

**தாளம்:** ரூபகம்

**இயற்றியவர்:** புரந்தரதாசர்

**ஆரோகணம்:** ஸ ரி$_1$ ம$_1$ ப த$_1$ ஸ்

**அவரோகணம்:** ஸ் த$_1$ ப ம$_1$ க$_3$ ரி$_1$ ஸ

|4 O |4 O |4 O

┘ ┘ ┘ ↑ ↓ ┘┘┘ ↓ ∞ ┘ ┘

ம ப | த ஸ் ஸ் ரி || ரி ஸ் | த ப ம ப || ரி ம | ப த ம ப ||

ஸ்ரீ . | கணநாதா || ஸிந்து| ர . வர்ண || க ரு | ணசாகர ||

└ └ ↑ ↑

த ப | ம க ரி ஸ || ஸா | ரி ம க ரி || ஸ ரி | க ரி ஸா||

க ரி | வ த ன . || லம் . | போ. த ர || ல கு | மி க ரா.||

┘ ┘ └ ↑ ↓ └ ↓ ┘ ┘

ம ப | த ஸ் ஸ் ரி || ரி ஸ் | த ப ம ப || ரி ம | ப த ம ப||

சித்த| ஸா . ர ண || க ண | ஸே. வி த || ஸித்தி | விநாயக||

└ └

த ப | ம க ரி ஸ ||

தே . | நமோநமோ || (லம்போதர லகு மிகர)

┘ ┘ ┘ ↓ ↓└ ┘ ↓ ∞ └

ம ப | த ஸ் ஸ் ரி || ரி ஸ் | த ப ம ப || ரி ம | ப த ம ப ||

ச க | ல வி த் யா || . தி | பூ . ஜி த || ஸ ர் . | வோத்தம ||

└ └

த ப | ம க ரி ஸ ||

தே . | நமோநமோ || (லம்போதர லகு மிகர)

| பெயர்கள் | குறியீடு |
|---|---|
| ஆரோஹண கமகம் | ⋗ |
| அவரோஹண கமகம் | ⋖ |
| ஆகாத கமகம் | _ |
| பிரத்யாகாத கமகம் | _/ |
| ஸ்புரித கமகம் | ¥ |
| த்ரிபுச்ச கமகம் | ⌀ |
| டாலு கமகம் | ↓ ↑ |
| ஆந்தோள கமகம் | ∞ |
| கம்பித கமகம் | ⧺ |
| மூர்ச்சனை கமகம் | ⋔ |

சர்வதேச மொழியாக குறியீடுகளை பயன்படுத்தி எதிர்வரும் காலத்தில் கர்நாடக சங்கீதத்தை உலகெங்கும் மணம் பறப்பச் செய்ய குறியீட்டு முறைமையில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்தல் அவசியம் என்பதனையும் அதனை சீர்திருத்துவதனால் கிடைக்கும் பயன்கள் மற்றும் கர்நாடக சங்கீதம் பெறும் புதிய பரிமாணம் என்பன பற்றியும் இக்கட்டுரை ஆய்ந்து தொகுக்கப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீதம் எதிர்காலத்தில் தனித்து கைவிடப்படாமல், வழக்கத்தில் இருக்கும் இசைவகைகளோடு இயைந்து, அதன் தனித்துவத்தினை நம் மக்களிடையே பரப்பி நிலைத்திருப்பதற்கு புதிய முயற்சியாக குறியீட்டு சீர்திருத்தத்தினை மேற்கொள்வோம்.

செல்வி அக்ஷயா சிவராமகிருஷ்ணா சர்மா (கலாவித்தகர்)
BSc (Hons) in Information Technology
Specialising in Information Systems Engineering

# உன் வேர் இங்கே இருக்கிறது தமிழா

மனிதன் எவ்வாறு தோற்றம் பெற்றானோ அவ்வாறே தோற்றம் பெற்றது தான் தமிழ் மொழியும் தமிழ் இனமும். கிறிஸ்து பிறப்பதற்கு கிட்டத்தட்ட இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முடிகொண்ட பரந்த ஆட்சி நிறுவி உலகாண்ட பெருநிலப்பரப்பு தமிழருடையது என்கின்றனர் வரலாற்றை அறிந்தோர். கல்தோண்றி மண்தோண்றாக் காலத்து மூத்தமொழி எம் தமிழ் கலையோடு சுவைபரப்பி அதிகாரமும் படைத்து கோலோச்சிய நகர் என்று குமரிக்கண்டத்தை சில இலக்கியங்களும் உரைக்கின்றன. இத்துணை சிறப்பு வாய்ந்த ஆதித் தமிழர்களின் வரலாறு இன்று வெறும் வரலாறாக கூட அறியப்படாத அவல நிலை ஏன்? மொழி நாகரிகம் கலை கலாச்சாரம் அறிவியல் என அனைத்திலும் உச்சம் தொட்ட ஆதித் தமிழன் மரபணுக்கள் கூடவா கடலுக்குள் புகுந்தன. இல்லை! தமிழ் இனத்தின் கடைசி மூச்சு உள்ளவரை அவை மீண்டும் உலக அரங்கில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

காவிரி தந்த தமிழகத்து புதுமணலில் களமைத்து ஆட்சி புரிந்த எம் மூத்த குடிகளின் கட்டக்கலை பற்றி நாம் அறிவோமா? பஞ்ச பூதங்களை குறியீடாக்கி கோவில் அமைத்து அதையும் ஒரே நேர்கோட்டில் அமைத்து வியப்படையச் செய்தவன் ஆதி தமிழன். பல ஆண்டுகள் பல கோடி செலவு செய்து ஆராய்ந்து உலகம் சொல்லும் பூமியின் காந்த மையப்புள்ளியை துல்லியமாககணித்து அதை சிதம்பரம் நடராஜனின் கட்டை விரலுக்குள் வைத்த தமிழனின் துல்லிய கணிப்பீடு இன்னமும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது உலகம். ஓசோன்! இருபதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட படலம். ஆனால் 700 ஆண்டுகளுக்கு முன்பே மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஓசோன் படலத்தின் படம் அதன் முக்கியத்துவம் அதை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்ற அனைத்தும் எழுதப்பட்டுள்ளது என்றால் நம்பமுடிகிறதா?

தமிழ் நாட்டின் நெல்லையப்பர் கோயிலில் இருக்கும் தூண்களை தட்டினால் ஸரிகமபதநி என்கின்ற ஏழு ஸ்வரங்கள் ஒலிக்கும். கோவில் கற்றூண்களுக்குள் ஸ்வரங்களை வைத்த தமிழனின் கட்டுமானத்தை என்னவென்று சொல்ல? வடசென்னையில் உள்ள வியாசர்பாடி ரவீஸ்வர் கோவிலில் மூன்று வேளையும் சிவலிங்கத்தின் மீது சூரிய ஒளி மாலை போல் வந்து விழுமாறு சிவலிங்கத்தை அமைத்து ஆச்சரிய மூட்டியிருக்கின்றனர் எமது மூத்தோர்.

யாழி என்கின்ற மிருதங்கத்தின் சிலை பழங்கால கோவில்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. வலிமையிலும் பருமனிலும் நூறு டைனோசர்களுக்கு இணையான இந்த யாழியானது தமிழர்களினுடைய

தொல்லியப்படிமச் சான்றுகளில் மாத்திரம் காணப்படக்கூடியதோடு கோவில்களில் காணப்படும். இவற்றின் சிலைகளில் கூட தனது கட்டுமானத்தை திறம்பட புகுத்தியுள்ளான் ஆதித் தமிழன். சில கோவில்களில் காணப்படும் யாழின் வாயிலில் ஒரு உருண்டை போன்ற கல்லைப் பார்க்கலாம். அந்த கல்லை மிக இலகுவாக உருட்டலாம் ஆனால் ஆயிரம் வீரர்கள் இணைந்து கூட அந்தச் சிறிய கல்லை உருவாக்க முடியாது.

ஜெயங்கொண்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவில் வரலாற்றுப் பின்னனி உடைய அற்புதப்படைப்பாக பல்வேறு வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகின்றது. அக் கோவிலில் உள்ள கிணற்றின் அருகில் ஒரு சிங்கத்தின் சிற்பம் இருக்கும் அதன் வாயிலில் ஒரு கதவு தென்படும் அதன் மூலம் கீழே இறங்கினால் கிணற்றில் குளிக்கலாம் ஆனால் மேலே இருந்து பார்த்தால் நாம் குளிப்பது தெரியாது. அதேபோல அக் கேயிலிலில் உள்ள சுவர்களில் மரகதக்கற்கள் பதித்துள்ளனர். அதனால் வெளியே வெயில் அடித்தால் உள்ளே குளிரும் வகையிலும் வெளியே மழை பெய்தால் உள்ளே கதகதப்பாக இருக்கும் வகையிலும் வடிவமைத்து இருக்கிறார்கள்.

வெறும் மணலில் அடித்தளம் அமைத்து அதுவும் இரண்டாம் நூற்றாண்டில் கல்லணை அமைத்த கரிகாலனின் பொறியியல் தொழிநுட்பத்தை என்னவென்று சொல்ல? ஆறு மாதங்கள் உச்சகட்ட பருவ மழை பொழியும் கம்போடிய திருநாட்டில் தண்ணீருக்குள் அடித்தளம் அமைத்து உலகின் மிக பெரிய வழிபாட்டுத்தலமான “அங்கோவற்றை“அமைத்தானே பல்லவர் வழி வந்த மன்னன் இரண்டாம் சூரியவர்மன். இது வியப்பின் உச்சக்கட்டம் இல்லையா? இன்னமும் எத்தனை எத்தனை படைப்புகள். ஆழி விழுங்கியனவும் ஊளி கொண்டனவும் போக எஞ்சியவற்றிலேயே இத்தனை ஆச்சரியங்கள் என்றால்? அவையும் இருந்திருந்தால்? இன்றைய அறிவியல் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கும் பலவற்றை பழந்தமிழன் தன் வாழ்வியலாகவே கொண்டிருந்தான்.இத்தனை வரலாறுகளும் எங்கே சென்றன? பிற இனங்களில் இல்லாத புகழும் பெருமையும் எங்கே புதைந்தன. புதைந்தனவற்றை மீட்டெடுப்போம். மீட்டவற்றை ஆவணப்படுத்துவோம். தமிழன் பெருமை தொன்மையில் மட்டுமல்ல தொடர்விலும் இருக்கின்றது என ஓங்கி முரசறைவோம்!

**மாதங்கி சச்சிதானந்தன்**

## செவிக்கு விருந்தாகும் நோய்க்கு மருந்தாகும்

இசை இயற்கையின் வடிவம் ஆகும். இயற்கையின் அதிர்வலைகளும் இசையின் அலைகளும் ஒன்று போலவே அமைந்து உள்ளதில் இருந்தே இதனை நாம் அறியலாம். இயற்கையாக வளர்ந்துள்ள மூங்கிலில் காற்று மோதும் போது இசை பிறக்கிறது. இயற்கையின் பிரதிபலிப்பான இசையில் ஏற்படும் லயம் தாளம் காலப்பிரமானம் ஆழம் யாவும் இயற்கையில் இருந்தே துவங்குகிறது. கடலின் அலை ஓசை,காற்றின் ஓசை, காற்றில் இலைகள் அசையும் ஓசை, மழைத்துளியின் ஓசை, மரத்தில் துளை போடும் மரங்கொத்தியின் அலகின் ஓசை யாவுமே இசையாகத் தான் துவங்குகிறது. இந்த இசைக்கு மனிதன் தன்னுடைய புத்தி கூர்மையால் ஒரு கலையாக உருவம் கொடுத்திருக்கிறான்.

இயற்கை அலைகளைப் போலவே தோன்றும் உடலில் தோன்றும் நரம்பலைகளும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மூளை மின்சார அதிர்வால் செல்களை செயல்படுத்துகிறது. இசை அதிர்வலைகள் மின்சார அதிர்வலைகளை ஒத்திருக்கின்றன என நரம்பியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மனித திசுக்கள் அணுக்கள் உறுப்புகள் இசை அலைகளால் மாற்றமடைகின்றன என்பதை மருத்துவதுறை உறுதிப்படுத்துகின்றது. இசை மனிதனின் ஆன்மா மனம் உடல் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கிறது. இசையால் கோபம், சோகம், வீரம், நம்பிக்கை, காதல், நகைச்சுவை போன்ற உணர்வுகளை உருவாக்க முடிகிறது. உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் மனமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்நிலை பாதிக்கபடும் போது தான் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது.இசை கேட்பவரின் மனதை ஈர்த்து தன்னோடு அவரை ஐக்கியப்படுத்துகிறது. ஒரு பாடலாசிரியர் தன் எண்ணத்தை மனதில் படுகின்ற பொருளை அழகாக எழுத்தில் பாடலாக வடிக்கிறார். அதற்கு இசை அமைக்கும் போது பாடலாசிரியரின் மன உணர்வும் ஆர்வமும் ரசிகனுக்குப் புரிகிறது. இதுவே இசையின் இயல்பு. இசையை அதன் பாவங்களையும் அர்த்தங்களையும் புரிந்து அனுபவிப்பதில் தான் மனிதனின் ரசிப்பு தன்மை அடங்கியுள்ளது.

தியானம், ஜெபம், லயம் இவை எல்லாவற்றிக்கும் மேலானது இசை. சங்கீத மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் தன்னுடைய ஆந்தோளிகா ராக க்ருதியில் இசை எவ்வளவு மேலானது என விளக்குகிறார். பண்டைய காலத்தில் யோகிகளும் இசை கலைஞர்களும் மனிதன் ஆழமான உணர்வுகளை தூண்டி பக்குவப்படுத்தும் மருந்தாக இசையை பயன்படுத்துகிறது என்பதை அறிந்திருந்தனர். தம்புராவை சுருதி சுத்தமாக திரும்ப திரும்ப மீட்டும் போது அந்த நாத அலைகள் மனதை சாந்தப்படுத்தும். இதை ஒரு தெய்வாம்சம் அல்லது தங்கச் சுரங்கம் என்று அறிஞர் ஒலிவியா டி.யு.ஹரிஸ்ட் மேட்டோக் குறிப்பிடுகிறார்.

இசையை மென்மையாகவும் மன உணர்ச்சிகளை எழுப்பும் படி அழுத்தமாகவும் பாடமுடியும். பாடும் ஸ்வரத்தின் ஸ்தாபியை பொறுத்து கேட்பவரின் மனநிலை மாறுகிறது. கீழ் ஸ்தாயில் பாடும் போது ரசிகரின் மனதில் மன அமைதி ஏற்படும். மேல் ஸ்தாபியில் பாடும் போது பாடுபவர் கேட்பவர் இருவரின் உடலிலும் உள்ளத்திலும் அதிர்வையும் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது. வேகமான தாள லயங்கள் உடலில் படபடப்பை ஏற்படுத்தி இதயத்துடிப்பை அதிகப்படுத்துகிறது. சீரான ஸ்வர லயத்தில் இதயத்துடிப்பும் சுவாசமும் சீராக அமைகின்றன. அபஸ்வரமாகும் போது சுவாசமும் இதயத்துடிப்பும் மாறுகிறது. உடல் தசைகளுக்கு ஸ்வரத்தின் உச்ச ஸ்தாயியாலும் அழுத்ததாலும் சக்தி கிடைக்கிறது.

இசையால் நம் மனநிலை பலவாறாக பாதிக்கப்படுகிறது. நம்மை அறியாமலேயே நல்ல இசை தன்வசப்படுத்துகின்றது. மனத்தொய்வு ஏற்படும் போது கேட்கப்படும் நல்ல இசை நம் மனதில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது.ஆர்பாட்டமான இசை மனதை அலைகழிக்க வைக்கிறது. மென்மையான இசை நம்மனதுக்கு ஆறுதலையும் அமைதியையும் தருகிறது. இசையை அனுபவிக்க தெரிந்தவனுடைய வாழ்வு அர்த்தம் உள்ளதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் அமைகிறது. இசை மனக்கட்டுப்பாட்டையும் தரவல்லது. தியானத்திலும் இசை முக்கிய பங்கு வகிக்கிறது. விலங்குகளும் பறவைகளும் கூட இசையை கேட்டு மயங்குகின்றன. கோவிந்தன் குழலோசையில் பறவைகள் பசுக்கள் கட்டுண்டு கிடந்ததாக திவ்யபிரபந்தம் கூறுகின்றது. இசையால் வசமாக இதயம் எது?

கல் தோன்றி மண் தோன்றா காலம் முதல் இசை மனிதனுக்கு ஒரு பாலமாக அமைந்து நல்லெண்ணங்களை கொடுத்து வருகிறது. தாலாட்டில் தொடங்கி கொட்டு பறை முழக்கம் படகோட்டியின் தெம்மாங்கு கழனிகளில் களை எடுக்கும் உழத்தியர் பாட்டு உழைத்துக் கொண்டே பாடும் தொழிலாளியின் நாடோடி பாட்டு காதலிக்கு தூது அனுப்பும் இன்ப புல்லாங்குழல் இசை அனைத்தும் உணர்சியின் வெளிப்பாடாக அமைகின்றன. மன அமைதி, களிப்பு, அன்பு, ஏமாற்றம், திகைப்பு எல்லாவற்றிக்கும் இசையே மொழியாக அமைகிறது. உள்ளடக்கியவை வெளிப்படுத்த வாய்ச்சொற்கள் பயனற்று விடும் போது இசை அந்த பணியை செய்கிறது. இளம் குழந்தைகளை உறங்க வைக்க ஒரே சொற்றொடரை திரும்ப திரும்ப நிதானமாக தாய்மார்கள் பாடுகின்றனர். அதுவே தாலாட்டு ஆகிறது. ஆராரோ ஆரிராரோ என நீலாம்பரி ராகத்தில் மென்மையாக பாடுவதும் தாலேலோ எனப் பாடுவதும் தாலாட்டாகிறது. தாலாட்டில் ஆர்பாட்டமோ அமர்களமோ இருப்பதில்லை.

இசை கேட்பவர்களின் மனதுக்கும் உணர்வுக்கும் ஏற்ப அருமருந்தாக அமைகிறது. நாதோபாசனை செய்கிறவர்களுக்கு இசை தெய்வாம்சமாக காட்சி கொடுக்கிறது. இயற்கையின் வரப்பிரதாசமான இசை கேட்பவருக்கு தெய்வ தரிசனம்

தருகிறது. வாழ்வில் துன்பத்தையே அனுபவிக்கும் மனிதர்களுக்கு இசை மிகுந்த சக்தியையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கிறது. ஞானம் இல்லாத பாமரனுக்கு இசை இன்பத்தை கொடுக்கிறது.

ஜடப் பொருளால் மாத்திரமல்லாமல் நாத அசைவின் சக்தினாலே உலகம் உருவானது என்பதை பௌதீக சாஸ்திர விஞ்ஞானிகளும் புரிந்து கொண்டுள்ளனர். இதன் பயனாகவே நாதத்தை நாதப்ரம்மம் என வழிபட்டனர். தியாகராஜர் மனமே நாதத்தில் ஆசை கொண்டு அதிலேயே திளைத்து பரம்மானந்தம் அடைவாயாக என்கிறார். கர்நாடக சங்கீதத்தை ஒரு அரிய பெரிய சாதனை எனச் சொல்லலாம். ஆஹத இசை ஒரு சாமானியர்களின் கலை. கர்நாடக சங்கீதம் ஆஹத இசையை பிரம்மாண்ட சமுத்திரமாக உருவாக்கி இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஜன்ய ராகங்களும் 108 வகையான தாளங்களும் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டாலும் எல்லை அடைய முடியாத பிரமிப்பு தான் தென்னிந்திய இசையின் பெரும் சிறப்பு.

நோய் தீர்க்கும் தன்மை கொண்டதாக உள்ளன. ஆனந்த பைரவி (நட பைரவி) சாந்தமான ராகம் பண்டைய கால கிராமிய பாடல்களில் வேருன்றி வளர்ந்த ராகம். உயர் ரத்த அழுத்தத்துக்கு மருந்துகளுடன் ஆனந்த பைரவி ராகமும் ஒரு வாழ்த்து பரிசு போல அமையும். மன அழுத்தம் கூடிய வேளைகளான போர் விமானத்தை ஓட்டும் பைலட்டுக்கும் அறுவை சிகிச்சைக்கு முன் டாக்டர் நோயாளி இருவருக்குமே ஆனந்த பைரவி ராகத்தை கேட்டால் மனதில் ஆனந்தமான அமைதி நிலவும். பைரவி ஒரு சர்வகால ராகம். மூளைச்சிதறல் எனப்படும் மனம் குன்றியவர்களின் வெறியை அடக்கும் சக்தி வாய்ந்தது. மனதை பற்றற்ற நிலைக்கு கொண்டு செல்லும் மகிமை வாய்ந்த இந்த ராகத்தில் ரிசிகளும் முனிவர்களும் மந்திரம் ஓதுகிறார்கள்.

தேவகாந்தாரி வீரத்தை பிரதிபலிக்கும் ராகம் எதிர் மறை எண்ணங்களை மனதிலிருந்து அகற்றுவதற்கும் பயம் தடுமாற்றம் தன்னம்பிக்கை அற்ற குணம் கோபம் இவற்றை நிவர்த்தி செய்யவும் இந்த ராகத்தை பாடியும் கேட்டும் பயன்பெறலாம்.
த்விஜவாந்தி உடல் அயற்சியை போக்கவும் நரம்பு தளர்ச்சியை சரி செய்யவும் பாடப்படும் ராகம் இது. தலைவலிக்கும் நிவாரனி.

ஹிந்தோளம் நளினமே இந்த ராகத்தின் ஜீவநாடி. மனதில் அமைதியும் மென்மையான வருத்தமும் கலந்த சாந்தமும் தெய்வீக உணர்வும் பிரதிபலிக்கும் ராகம் இது. இறைவன் ஓசை ஒலியெல்லாம் தானே ஆகி நிற்பவன். ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவனும் இறைவனே. எனவே இசையை கற்பதும் கேட்பதும் இறைவழிபாடே எனலாம்.

**ஞா.அபர்ணா**

## தமிழால் வளர்ந்தேன்

தமிழின் சிறப்பென்றால் அனைவர் எண்ணங்களில் முன் வருவது அதன் லகர ழகரங்கள். வாழக்கையில் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக்கூடாது என்று கூறும் நூல் திருக்குறள் மற்றும் இனிமை போன்ற கருத்துகள் தான். தமிழ் எனும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும். தமிழில் பகுபதம், பகாப்பதம் என இரண்டு வகை உண்டு. அவை பிரித்துப் பார்க்க வேண்டியவை பிரித்துப் பார்க்க கூடாதவையாகும். உதாரணமாக கடவுள் (கட+உள்) என்ற சொல்லின் பொருள் எல்லாவற்றையும் கடந்து உள்ளிருப்பவன் என்பதல்ல. நீ ஆசைகளை பந்த பாசங்கள் எல்லாவற்றையும் கட உனக்குள் கடவுள் இருப்பான் என்பதாகும்.

எண்கள் என்றால் அரேபியர்களை தான் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு அது பற்றி ஒன்று தெரியவில்லை. கேட்டால் இந்தியர்களிடம் இருந்து வந்தது என்கின்றனர். வட இந்தியனை கேட்டால் அவனுக்கு ஒன்றும் தெரியாது. இந்திய அரேபிய குழப்பத்தில் இருக்கும் எண்களை தமிழ் கல்வெட்டுகளில் பாருங்கள் உங்களுக்கே புரியும்.

இது சிறிய அளவின் பிரிவுகள்.
1/102400 – கீழ்முந்திரி
1/2150400 –இம்மி
1/23654400 – மும்மி
1/14902272400 – குணம்
1/7451136000 – பந்தம்
1/44706816000 – பாகம்
1/312947712000– நாகவிந்தம்
1/7448155456000 –சிந்தை

இந்த இம்மியளவும் அசையாது என்றும் நாம் பேச்சு வழக்கில் பேசும் சொல்.
தமிழுக்கு அழகு தமிழ், இசைத்தமிழ், அமுதத்தமிழ் என மேலும் பல பெயர்கள் உண்டு. தமிழ் எழுத்துகளின் ஒலி வடிவம் இனிமையானதோடு மட்டும்மல்லாது அதை உச்சரிக்கும் போது குறைந்தளவு காற்றே வெளியேறுகிறது. இது மொழியியளாளர்களின் முடிவு. உலகில் இருக்கும் எந்த மொழிகளின் இலக்கியத்ததையும் உணர்சி பொருள் நயம் வடிவம் குன்றாமல் மொழி பெயர்த்து விடலாம். ஆனால் தமிழை அப்படியே பிரதிபலிக்க வேறு எந்த மொழிகளாலும் முடியாது.

ஏன் உங்கள் காதலிக்கு உங்கள் காதலை கூட சரியாக மனதில் உள்ள எண்ணங்களை அப்படியே வெளிப்படுத்த தமிழால் மட்டுமே முடியும்.

உதாரணமாக ஆங்கிலம் மற்ற மொழிகளை கடன் வாங்கி வளர்ந்ததால் அதன் சொல் உச்சரிப்புக்கும் எழுத்து உச்சரிப்புக்கும் சம்மந்தமே இருக்காது. தமிழில் அன்பை இப்படி பிரிக்கலாம் அன்பு(அ+ன்+பு) இந்த எழுத்துகளை தனித்தனியே எப்படி உச்சரித்தாலும் அதே சொல் தான். Love உச்சரித்தால் எல்ஓவிஇ என்று தான் வரும்.

று,ன,ழ,எ,ஒ ஆகிய ஐந்து எழுத்துகளும் தமிழின் சிறப்பு எழுத்துகள் எனலாம். அதிலும் ழ உலக மொழிகளில் பிரெஞ்சில் மட்டும் தான் காணப்படுகிறது. தமிழுக்கே சிறப்பான ழகர உச்சரிப்புகள் எத்தனை பேர் சரியாக உச்சரிக்கிறார்கள் என்பது தான் கவலை. உச்சரித்து பாருங்கள் அல்லது பாடிப் பாருங்கள் அதன் இனிமையை உணர்வர்கள்.

டாக்டர் கால்ற்டு வேல் போப் என்பவர்கள் தமிழைக் காற்று திருக்குறள் திருவாசகம் என்பவற்றை மொழி பெயர்த்தவர்கள் ஆவார்கள். கலப்பில்லாத தூய தமிழ் என போப் தான் இறந்த பிறகு கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என பொறிக்க சொன்னார். முக்கியமாக இந்த கற்க கசறட கற்பவை கற்ற பின் நிற்க அதற்கு தக எனும் குறள் கிட்டதட்ட 3000 வருடங்களுக்கு முன் எழுதியது. இப்போது படித்தாலும் சாதாரண மனிதனுக்கே விளங்கும். 3000 வருடங்களுக்கு முன்னர் இப்படி தமிழில் எழுதும் அளவுக்கு மொழி அப்போதே வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றால் அது எவ்வளவு காலத்திற்கு முதல் தோன்றியிருக்க வேண்டும் என சிந்தித்துப்பாருங்கள். சீனன் சீன மொழியில் பேசினான் சீனா வளர்ந்தது பிரான்ஸ் நாட்டுக்காரன் பிரெஞ்சு மொழியில் பேசினான் பிரான்ஸ் வளர்ந்தது. தமிழன் ஆங்கிலத்தில் பேசினான் அமெரிக்கா வளர்ந்தது.

முக்கியமாக சீனாவின் துயரம் மஞ்சள் நதி அதே போல தமிழர்களின் துயரம்
அரசியல்
சினிமா
மதம்/ ஜாதி
மேலே உள்ள தமிழ் மொழியின் சிறப்புகள் நம் முன்னோர்கள் புத்திசாலிகள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் நாம் ?
யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற உலக பொது நியதியை கொண்ட ஒரே மொழி இத்தகைய தமிழில் பிறந்து தமிழால் வளர்ந்ததை நினைத்து பெருமை கொள்வோம்.

**மாதுக்ஷன்.ஞா**

# கல்வியில் பெரியோன் கம்பன்

“கம்பன் வீட்டு கட்டு தறியும் கவிபாடும்” என்ற பழமொழிக்கு ஏற்ப கம்பனது வாழ்க்கை முழுக்க தமிழ் இலக்கியமும், தமிழ் வளமையும் பொங்கி வழிந்து உள்ளது. கம்பத்து புகழும் கவிபாடும் திறனும் இன்றுவரை தமிழ் மக்களிடையே பேசப்பட்டு வருகிறது. அவரது கற்பனை திறன் மற்றும் கவிபாடும் திறமை ஆகியவற்றை அவரது காலத்தில் இருந்த அனைத்து கவிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

கம்பன் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்று இருந்ததும் மேலும் அவர் தமிழ் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் அவர் கொண்ட பற்று மற்றும் அவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய தொண்டினையும் இந்த பதிவில் விரிவாக காணலாம்.கம்பர் கி.பி 1180 ஆண்டு நாகபட்டினம் மாவட்டம் குத்தாலம் வட்டம் திருவழுந்தூர் என்கின்ற கிராமத்தில் ஆதித்தன் என்பவரின் மகனாக பிறந்தவர் கம்பர். கம்பனின் பெயர் அவர் காளி கோயிலின் அருகில் இருந்ததால் கம்பர் என்று பெயர் வந்தது என்று சிலரும், வேறு சிலர் கம்பங்கொல்லையை காத்து வந்ததால் கம்பன் என்று பெயர் வந்தது என்று சிலரும் கூறுகின்றனர்.

மற்றும் சிலர் அவரின் பெயர் வந்ததுக்கு காரணம் கம்பர் குலம் அதாவது காளி கோயிலின் பூஜை செய்பவர்கள் குடும்பம் கம்பர் குலம் என்று அழைக்கப்படுகிறது. அதனாலேயே அவருக்கு அந்த பெயர் வந்தது என்று சிலர் கூறுகின்றனர். இருந்தாலும் அவரது பெயர் எப்படி தழுவி வந்தது என்று இன்றுவரை சரியாக தெரியவில்லை மரபு சார்ந்து இந்த பெயர் வந்தது என்று தமிழ் ஏடுகளில் இடம்பெற்றுள்ளது.

கம்பர் அவரது இளம் வயதில் வள்ளி என்கிற தாசியை காதலித்து வந்ததாகவும் அவரை அந்த பெண் ஏற்று கொள்ளவில்லை என்று நம்பமுடியாத தகவல் உள்ளது. மேலும் அவருக்கு ஒரு மகன் உள்ளதாகவும் அவரது மகன் பெயர் அம்பிகாபதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவரின் மகனான அம்பிகாபதி அந்த காலத்தில் இருந்த சோழ மன்னனின் மகளை காதலித்ததாகவும் அதனால் கோவம் கொண்ட சோழ மன்னன் அம்பிகாபதியை கொன்றுவிட்டதாகவும் சில குறிப்புகள் கூறுகிறது. மேலும் அவரின் மகனை அவர் இழந்ததாலேயே புத்திரசோகத்தினை பற்றி கம்பராமாயணத்தில் இடம் பெற்றள்ளதாக சில குறிப்புகள் கூறுகிறது.

ஒச்சன் பரம்பரையில் பிறந்த கம்பர் ஆரம்ப காலத்தில் ஒரு செல்வமிக்க விவசாயி ஒருவரின் அவைணைப்பில் வளர்ந்தார். அந்த காலத்தில் கம்பர் சமஸ்கிருதம் மற்றும் தமிழில் கைதேர்ந்தவரானார்.கவித்திறனையும் கற்பனைத்திறனையும் மெருகேற்றி தன்னை செதுக்கி கொண்டார். பிறகு ஏகப்பட்ட பாடல்களையும் கவிதைகளையும் தமிழில் எழுதிய இவர்கவிபாடும் திறனை பெற்றார். பிறகு அரசவையில் சென்று கவிபாடி பரிசு பெறுவது மட்டுமன்றி அங்குள்ள சபையை தனது இலக்கிய திறன் மூலம் கவர்ந்திழுக்கும் திறனையும் அவர் பெற்றிருந்தார்.

இது போன்ற அவரின் திறமையை பார்த்த சடையப்பவள்ளல் கம்பரை ஆதரித்தது அவற்றின் தமிழ் திறனை நிறுத்த மிகுந்த உதவி புரிந்தார். ஈடு இணையற்ற கவிஞராக வலம் வர கம்பர் தனது 70 ஆம் வயதில் 1250 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். கம்பர் இந்த உலகில் இருந்து மறைந்தாலும் அவரது படைப்புகள் இன்னும் மறையவில்லை. தமிழ் மொழி எவ்வாறு தொன்மையாக உள்ளதோ அதேபோன்று கம்பரின் படைப்புகளும் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் துளி கூட ஐயம் இல்லை.

**ஞா.விதுர்ஷா**

# The importance of self-love

For many people, the concept of self-love is an over blown theory and they often ignore the importance of it. People aspire to be perfect and being perfect is considered as a greater asset or attribute than self-love. When we talk about self-love, it is easy to picture someone reading self-help books or hugging a tree. But self-love is much more than that. Lot of studies help have shown that self-love is the key to mental well-being and it keeps depression and anxiety at bay.

Modern society is shaped in such a way that we always try to reach our short-term goals by better ourselves to match the expectation set-up on as by society. Love is the only thing that keeps us going and makes us less robotic in a world, which makes us work as programmed bots. Everyone needs love and we spend most of our energy on loving friends, spouses, children or family.

We all like to spread the love but the question is do we produce enough for our own selves? Self-love is not being selfish it is just putting yourself and not being too tough on yourself. When others make a mistake,we often forgive them easily but when we make a mistake we are often too hard on ourselves.

The first step of self-love is realising that ability to make mistakes is what makes us a human, and let the negative things pass through, eventually, things will change and will be better. Self-love provides greater life satisfaction and encourages us to pick up good habits as you will love your body, sole and healthy mind. It also motivates positive mind set which an essential ingredient for success in life and reduces depression.

So consider yourself important too, love yourself as much as you love your friends and family. Happiness and self-love are interconnected, and we all deserve to be happy. We should not strive to be perfect rather we should strive to love ourselves and pass on the love to others. Because self-love is the key for happiness and a person who is happy is in a far better position to achieve success in every aspect of life.

**By: S.Mathankey**

## தமிழனின் அடையாளங்கள் இழந்தவையும் திணிக்கப்பட்டவையும்

"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே
அவர்க்கோர் குணமுண்டு".
நாமக்கல் கவிஞர்
"தனி" என்பது நம்மை நாமே தனிமைப் படுத்திக் கொள்வதல்ல.
நம் மரபுகளைத் தனித்துவப்படுத்திக் காட்டுவது.

இன்று நம் மொழி நம் மரபுகள் நம் பண்பாடுகள் என்று தனித்து எடுத்துக்காட்ட, பெருமிதம் கொள்ள நாம் என்ன சேர்த்து வைத்திருக்கிறோம். மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் பல அடையாளங்கள் வாழ்க்கையில் தேவைப்படுகிறது. இந்த அடையாளங்களே அவனது வாழ்கையில் பல பரிமாணங்களையும் நிர்மாணிக்கிறது. பல அடையாளங்கள் காலப்போக்கில் ஒருவரது வெற்றி தோல்விகளை வைத்து மாறும் தன்மை கொண்டது. ஆனால் சில அடையாளங்கள் என்றுமே மாறாது நிலைத்துதிருப்பவை. அவை பரம்பரை பரம்பரையாக தொன்று தொட்டு வரும் பண்பாடுகளான மொழி, இனம், மதம், தய்நாடு, கலச்சாரம், ஆன்மிகம் பாரம்பரியங்கள் ஆகும். மேலும் இவை ஒரு தாய்மையின் அடையாளங்களாகவே போற்றப்பட்டு வந்தன. எனவே இப்படிப்பட்ட அடையாளங்களை ஒருவன் மாற்றினால் அவனை சமுதாயம் ஏற்பதில்லை. அப்படி மாற்ற முடியாத மாற்றக்கூடாத அடையாளங்களை மாற்றி மாற்றி கூறிக்கொண்டு வீண் பேச்சு பேசி ஊரையும் தன்னையும் ஏமாற்றிக்கொண்டு திரிகின்றனர் பெரும்பாலான பகுத்தறிவு தமிழர்கள்.

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்போல் இனிதாவது எங்கம் கானேன் என்றான் பாரதி ஆனால் பச்சை தமிழன் என்று போலியாக திரியும் கூட்டத்தின் தலைவன் தமிழை காட்டுமிராண்டி பாஷை என்று சொன்னவர். எல்லாம் தமிழ் என்று சொல்லிக் கொண்டு தன்வீட்டு பிள்ளைகளுக்கு ஆங்கிலப்பெயர் வைத்து ஆங்கில பள்ளியில் படிக்கவைக்கிறார்கள். ஒற்றைவரி ஔவையின் ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் வள்ளுவனின் இரட்டைவரி திருக்குறளும் சொல்லியுள்ள ஒழுக்கநெறிகளை குறைத்து இவற்றை பாடப்புத்தகங்களில் இல்லாமலே எடுத்து விட துடிக்கிறார்கள்.

தமிழும் சமஸ்கிருதமும் தமிழர்களுக்கு தாயும் தந்தையும் ஆகும். தாயை விட சிறந்த கோவில் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற யதார்த்தம் புரியாமல் தனி தமிழ் என்று தமிழ் உச்சரிப்பை கூட சரியாக சொல்ல தெரியாத ஒரு கூட்டம் தமிழ் மொழியை கொன்று கொண்டு இருக்கிறார்கள்.

இதைவிட கொடுமை தெய்வ புலவர் திருவள்ளுவருக்கு கிருஸ்துவ பாதிரி தான் பாடம் நடத்தினார் என்ற சரடையும் மானம் ரோசம் இல்லாமல் கேட்டுக்கொண்டு பகுத்தறிவாளிகள் மௌனம் சாதிக்கிறார்கள். தமிழையும் சரியாக கற்காமல் அண்டை மாநிலங்களில் வேலைவாய்ப்பை பெறக்கூடிய இந்திய பொது மொழியான இந்தியையும் கற்காமல் ஆங்கிலத்தையும் அரைகுறையாக கற்று ஒரு தலைமுறையை வீண் அடித்த பெருமை இந்த திராவிட பகுத்தறிவு ஜீவிகளையே சாரும்.

இந்திய அரசாங்கமும் சுதந்திரத்திற்கு பின் பாரதத்தின் பாரம்பரிய சின்னங்களை பாதுகாப்பதில் ஒரு மெத்தன போக்கையே கடைப்பிடித்து கொண்டிருக்கிறது. பாரம்பரிய சின்னங்களாக கோவில் சிலைகள் வண்ண ஓவியங்கள் புகழ் வாய்ந்த கட்டிடங்கள் என்று எதையுமே பொருட்படுத்து வதில்லை. உள்ளவர்கள் எப்படி திட்டம் தீட்டி பொது மக்கள் கண்ணில் மண்ணை தூவி புரனுதாரணம் செய்வதாக சொல்லிக் கொண்டு இடிப்பது சேதப்படுத்துவது சுவடு தெரியாமல் அப்புறப்படுத்துவது போன்ற பாதக செயல்களை செய்து வருகிறார்கள் என்பதற்கு பல நிகழ்வுகளை குறிப்பிடலாம்.2007ஆம் ஆண்டு தொட்டு நமது பாரம்பரிய சின்னங்களை புதுப்பிப்பதாக சொல்லிக் கொண்டு கலை நயத்துடன் இருந்தவற்றை பொலிவிழக்க செய்துவிடுகின்றனர். இது எப்படி இருக்கின்றது என்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட லஷ்மிகரமான மணப்பெண்ணிற்கு அமங்கலமான விதவை வேசம் போடுவது போலத்தான்.

இப்படி தமிழனின் அடையாளங்களை அழிப்பதற்கு ஆதரவு தரும் பகுத்தறிவு கூட்டம் ஒருநாள் தமிழனை நாகரிகம் இல்லாத பரதேசிகள் என்று உலகிற்கு அடையாளப்படுத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை.

திணிக்கப்பட்டவை: யார் தமிழர் என்பதை சொற்களால் தீர்க்கமாக வரையறை செய்ய இயலாது. யார் ஆங்கிலேயர், பிரேஞ்சுகாரர் என்பன போன்றனவும் அப்படியே. ஒருவர் தன்னைத் தமிழர் என்று அடையாளப் படுத்திக் கொள்ள விரும்பினால் அவர் தமிழர் ஆவார். அதுவே நடைமுறைக்கும் மனித குல வளர்ச்சிக்கும் உகந்தது ஆகும். மனிதர் சமுதாய விலங்கினத்தைச் சேர்ந்தவர். எனவே ஒருவரின் அடையாளத்தை பிறர் அங்கீகரிக்க வேண்டிய தேவையைப் புறக்கணிக்க முடியாது. அப்படியான தன்னறிவு அங்கீகாரம் குறித்தே இக்கட்டுரை பகிர்வாகும்.

பிறப்பின் திணிப்பு: நம் பிறப்பை நாம் தேர்ந்தெடுக்கவில்லை. நாம் பிறப்பதா வேண்டாமா எங்கு எப்படி எப்போது யாருக்கு பிறப்பது என்பன நம்

முடிவல்ல.. எனவே பிறப்பால் அமைந்த பால் (ஆண்/ பெண்), குடும்பம் இனம் மொழி நாடு மதம் பழக்கவழக்கங்கள் எல்லாம் திணிக்கப்பட்வையே. "நான்" (தான்) என்ற மன வளர்ச்சி மூன்றிலிருந்து ஐந்து வயதுக்கு பின் ஏற்படுகிறது என்று உளவியல் காட்டுகிறது. அந்த வளர்ச்சி பெற்ற பின் சமூகப் பொருளாதார அரசியல் மரபு பண்பாட்டுச் சூழ்நிலைகளால் கட்டாயப்படுத்தபடுபவை திணிப்பு என்கிறோம். நான் என்ற தன்னுணர்வு மன வளர்ச்சிக்கு முன்பு அப்படிப்பட்ட சூழ்நிலைகளால் புகுத்தப்படுபவையும் திணிப்பு என்று சொல்லலாம்.

ஆனால் இத்தகைய திணிப்புகள் அனுகூலமாக அமைந்தால் அவற்றை நாம் திணிப்பு என்று கூறுவதில்லை. பிரதிகூலமாக அமைந்தாலே அப்படி பார்க்கிறோம். பக்கிங்காம் அரண்மனையில் பிறந்தாலும் பழங்குடி வனத்தில் பிறந்தாலும் இதே தன்மை தான்.

இத்தகைய தன்னறிவை வளர்த்துக் கொள்வதும் பகிர்ந்து கொள்வதும் நம் அடையாளம் குறித்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும் அவ்விடுதலையின் அடிப்படையில் நம் அடையாளத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வழி வகுக்கும்.

**ச.வைகஷ்னவி**



# நன்றிபகிர்வு

எமது குடும்பத்தலைவரின் இறைபதசெய்தி அறிந்து உடனிருந்து உதவிய உறவுகள் நட்புகளிற்கும் அவரது ஆத்மாசாந்திக்கு பிரார்த்தித்து ஆறுதல் பகிர்ந்த அன்புள்ளங்களிற்கும் நேரிலும் தொலைபேசியிலும் சமுகஊடகங்கள் வாயிலாகவும் துயர்பகிர்ந்தசுற்றங்கள் மற்றும் இசைச் சமூகத்திற்கும் அன்னாரின் இறுதியாத்திரையில் கலந்துகொண்ட அனைத்துள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு அவரது நினைவுமலரினை பயன்மிக்கதாக வடிவமைக்க முழுமனதோடு உதவிய அனைத்துள்ளங்களிற்கும் எமது நன்றிகள்.

குடும்பத்தினர்



"KALAA POOSHANAM"
K.S.SIVAGHANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST









THARSA TAMIL PRINTERS
அச்சுவேலி